
கல்கி
KALKI 9-8-1964
30

அவரது தோற்றப் பொலிவின் கம்பீரமும் மிடுக்கும் அலாதி...



அவர் அணியும் ஆடைகள் நாகரீகத்தின் சின்னம். வெற்றிப் பெருமிதம் துலங்கும் அவரது தோற்றத்துக்கு அடிப்படை சக்தி ''டெரிலீன்'' சூட்டிங்தான். இறக்குமதி செய்யப்பட்ட பாலியஸ்டர் நூலால் தயாரிக்கப்பட்ட சக்தி ''டெரிலீன்'' சூட்டிங்குகளும், ஷர்ட்டிங்குகளும் துவைத்து மடிப்புக் கலையாமல் அணியக்கூடியவை. நிறம் மங்காமல் நீடித்து உழைக்கும் இவை சொகுசானவை என்பதோடு எங்கும் அணிந்து செல்ல ஏற்றவை.

போதார்
தயாரிப்புகள்

Shakti Silks

டெரிலீன் சூட்டிங்குகள் மற்றும் ஷர்ட்டிங்குகள் . ரேயான் சூட்டிங்குகள் . க்ரேப்
டஃபேட்டா . ஸாட்டின் . ப்ரோகேட் . நைலான் . ரேயான்

கல்கி

பொருளடக்கம்

குரோதி ஆடி 25 ❋ ஆகஸ்டு 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


விடுதலை


பெ. தூரன்

[எது விடுதலை? மிகவும் சிக்கலான கேள்வி. ஒருவிதக் கட்டுப்பாடும் இல்லாதிருப்பதுதானா விடுதலை?]

—

இருமருங்கும் தடையாக
　ஏனுள்ளாய் நீள்கரையே;
வருந்தினன்யான் விடுதலையாம்
　வாழ்வின்றி அறிந்திலையோ?—
உருவழியா தாறும் நீ
　உலவிடவும் வளமெல்லாம்
சுரந்திடவும் நின்றுள்ளேன்
　தளையெதுவோ துணிந்துணரே.


லஞ்ச ஊழல் தான் முதலில் ஒழிய வேண்டும்!
விலை உயர்வு தான் முதலில் ஒழிய வேண்டும்.
உங்கள் ஆட்சிதான் முதலில் ஒழிய வேண்டும் மற்றதெல்லாம் தானே தொடரும்.
நந்தா
பட்நாயக்
ஜனநாயகம்


வாய்ப்பூட்டு
அணு யுத்த பயம்
உலகத்தின் மனச்சாட்சி
PK



மலர் 24 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிட்டடி பாப்பா — பாரதியார் | இதழ் 2

சட்டமறுப்பு தேசத்துரோகமா?

'அரசியல் சாஸனத்தை எதிர்ப்பது எப்படி முறையாகும்? தி. மு. க நடத்தும் சாஸன ஷரத்து எரிப்பு இயக்கத்தை 'கல்கி' கண்டிக்காமலிருப்பது ஏன்?' என்று சிலர் கேட்கிறார்கள்.

இவர்களுக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புவது இதுதான்: அரசியல் சாஸனத்தை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கமின்றி, ஹிந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகவே தி. மு. கவினர் சாஸனத்தின் ஆட்சிமொழி ஷரத்தை மட்டும் எரிக்க இயக்கம் நடத்துகிறார்கள். வெளி அடையாளச் செயலைப் பாராமல் நோக்கத்தையே நாம் பார்த்து ஆதரிக்கிறோம்.

தங்கள் கருத்தை யாரும் வலுவான முறையில் எடுத்துச் சொல்லச் சுதந்திரம் பெற்றிருப்பதே ஜனநாயகம். தனி நபர்களாகவோ, அல்லது ஒரு ஸ்தாபனமாகவோ சர்க்காரின் குறிப்பிட்ட கொள்கைகளை எதிர்க்கவும், ஆதரிக்கவும் உரிமை பெற்று அந்த எதிர்ப்பையும், ஆதரவையும் பளிச்சென்ற முறையில் — பிறருக்குத் தீங்கு விளைவிக்காமல் — எடுத்துக் காட்டுவதே ஜனநாயகம். பார்லிமெண்டில் சர்க்காரின் கொள்கையை எதிர்த்தோ, ஆதரித்தோ 'வோட்' செய்வதுடன் இந்தச் சுதந்திரம் முற்றுப் பெற்று விடவில்லை. மெஜாரிட்டியாலோ அல்லது ஏகமனதாகவோ சட்ட சபையில் சர்க்கார் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது சட்டமாகி, ராஷ்டிரபதியின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்ட பின்னரும் மாற்றுக் கருத்துள்ளவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட உரிமை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அபிப்பிராயத்தை வெளியிடும் முறை நாட்டு நலன்களைப் பாதிக்காத வரையில் அதனைத் தேசத்துரோகமாகக் கருதுவது ஜனநாயக மனப்பான்மையல்ல. திரும்பத் திரும்பத் தங்கள் தவறுகளைப் பிறர் எடுத்துக்காட்டும்போது ஏகாதிபத்திய வெறி பிடித்தவர்களுக்கு ஆத்திரமும் எரிச்சலும் உண்டாகத்தான் செய்யும். ஆனால் இவ்விதமான கண்டனங்களைச் சகித்துக் கொள்வதே ஜனநாயக அரசாங்கத்துக்கும் யதேச்சாதிகாரத்துக்குமுள்ள வித்தியாசம்.

என்றாலும் ஜீவாதாரமான சட்டங்கள் என்பதாகச் சிலவற்றை மதித்து அவற்றை மீறுவது தேசவிரோதம் எனக் கருதலாம். காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஜீவாதாரச் சட்டங்களை மதிப்பது பற்றிப் பேச வாய் ஏது? சாஸனத்தின் ஆணி வேரான ஷரத்துக்களையெல்லாம் மனம் போனபடி மாற்றியுள்ள அரசாங்கம், ஜீவாதாரச் சட்டங்களின்கீழ் வராத பதினேழாம் பகுதியை ஆட்சேபிக்கும் இயக்கத்தைத் தேச விரோதமாகக் கருதுவது எந்த தர்மத்தைச் சேரும்?

தவறான மூல ஆட்சிமொழிச் சட்டத்துக்குக் காப்பாக, 'சாஸனத்தை அவமதிப்பது குற்றம்' என்று இன்னொரு சட்டம் இயற்றி, மாற்றுக் கருத்தை அழிக்கப் பார்ப்பது ராஜ நீதியல்ல. ஒரு சாஸன ஷரத்து ஜனநாயக விரோதமாக அமைந்திருப்பதாகச் சிலர் கருதி அதனை ஆட்சேபிக்கும்போது, 'நீங்கள் இவ்வளவு வலுவாக ஆட்சேபனை தெரிவிப்பதும் குற்றம்' என்று இன்னொரு ஜனநாயக விரோதமான சட்டத்தைச் செய்திருப்பது வருந்தத்தக்கது. ஆட்சிமொழி விஷயத்தில் தூங்கும் தமிழகத்தின் கண்களைத் திறந்து வைக்கும் தி. மு. க தலைவர்கள் இந்தச் சட்டத்தின் விளைவாகச் சிறைப்பட்டு வருவதும், அவர்களது இயக்கம் தேசத்துரோகமானது என்ற எண்ணம் ஏற்படுத்தப்படுவதும் அதனினும் வருந்தத்தக்கது.

சரித்திரம் செய்த சர்ச்சில்

மூதுபெரும் அரசியல் பிரமுகரான ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சில் அறுபத்திரண்டாண்டுகள் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அங்கத்தினராக இருந்து விட்டு விலகி, இனித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்திருக்கிறார். மகத்தான சாம்ராஜ்யம் ஒன்றினை ராணுவ ரீதியிலும், வாணிப ரீதியிலும் கட்டிக் காத்த பெருமை சர்ச்சிலுக்கு உண்டு. மனச்சாட்சியை மதித்து, அவ்வப்போது தாம் நாட்டுக்குகந்ததாகக் கருதிய கொள்கைகளைத் தழுவும் தீரம் பெற்றிருந்த சர்ச்சில் முதலில் கன்ஸர்வேடிவாகவும், பிறகு லிபரல் கட்சிக்காரராகவும், மீண்டும் கன்ஸர்வேடிவாகவும் இருந்திருக்கிறார். உழைப்புக்கும், ராஜநீதி அறிவுக்கும், சொல்லாற்றலுக்கும் பெயரெடுத்த சர்ச்சில் இரண்டாவது உலக யுத்தத்தின்போது தமது நாட்டில் எப்படித் தேசபக்தியை ஊட்டி மக்களை இயக்கி வைத்தார் என்பது சரித்திரம் மறக்க முடியாத வீர வரலாறாகும்.



எனினும், யுத்தத்தில் வெற்றி தேடித் தந்ததால் சர்ச்சில்தான் என்றென்றும் தங்கள் தலைவர் என்று பிரிட்டிஷ் மக்கள் கொள்ளாமல் அடுத்த தேர்தலிலேயே தொழிற் கட்சிக்கு மெஜாரிட்டி அளித்தபோதும் அவர் அதனால் மனம் கோணவில்லை. ஜனநாயகப் பண்பை மதித்து எதிர்க் கட்சித் தலைவராக இருந்து பணி புரியலானார்.

''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலைப்பதற்காக நான் பிரதமராக இல்லை'' என்று கூறி இந்திய சுதந்திரத்துக்கு என்றும் இணங்காமல் பிடிவாதம் பிடித்தவர் சர்ச்சில். ஆனால் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னும் காமன்வெல்த்தில் இருக்க இசைந்தபோது அவர் மனம் நெகிழ்ந்து விட்டார். அந்த நெகிழ்ச்சியில் நாமும் பழைய இறுக்கத்தை மறந்து விடுவோம்.

சர்ச்சிலின் கொள்கை எதுவானாலும் சர்ச்சில் சர்ச்சில்தான். அகில உலக சரித்திரத்திலும் சர்ச்சில்கள் அதிகம் பிறப்பதில்லை.

காதிவாலாக்கள் எத்தனையோ?


மத்தியப் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் காதிவாலா அவர்களைப் பற்றி 'ஸரிதா' என்ற ஹிந்திப் பத்திரிகையில் வெளியான கண்டனக் கட்டுரை அதோடு முடிந்துபோகவில்லை. பத்திரிகை ஆசிரியர் மீது கீழ்க்கோர்ட்டில் மான நஷ்ட வழக்கு தொடரப்பட்டது. அவருக்குத் தண்டனை தரப்பட்டது. மத்தியப் பிரதேச ஹைகோர்ட்டில் அவர் அப்பீல் செய்து கொண்டார். அதன் விளைவாக மத்தியப் பிரதேசக் காங்கிரஸ் தலைவரின் பெருங் குற்றம் பகிரங்கமாயிற்று.

1957-ம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மகோற்சவத்துக்குப் பின் மகாநாட்டில் பயன்பட்ட தகடுகளைக் கள்ளச் சந்தைகளில் அவர் விற்பனை செய்து கொள்ளை லாபம் அடித்திருப்பதாக ஹைகோர்ட்டு நீதிபதி தமது தீர்ப்பில் கூறியுள்ளார். எத்தனை லட்ச ரூபாய்கள் என்று படிக்கும் போது தலையைச் சுற்றுகிறது. 'வெள்ளை' மார்க்கெட்டிலேயே அவை பத்துப் பதினைந்து லட்சம் ரூபாய் பெறுமானமிருக்குமாம்!

தமது அரசியல் தியாகத்தை விலை பேசித் தமக்கு வீடு கட்டிக் கொள்வதாகக் காரணம் காட்டி, போபாலில் ஒரு மனை பெற்றுக்கொண்ட காதிவாலா அதில் பல கடைகள் கட்டி ஏராளமாக வாடகை வாங்கியிருக்கிறாராம்.

இன்னும் இதைப் போலப் பல ஊழல்கள்.

காதிவாலா ஒருவர்தான் இப்படியெல்லாம் செய்திருக்கிறாரா? காங்கிரஸ் கட்சியின் ஆதரவில் ராஜ்யத்துக்கு



1. தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருப்பணிக்காகத் திரு முருக கிருபானந்தவாரியார் அவர்கள் மயிலாப்பூரில் நிகழ்த்தும் கந்தபுராண உபன்யாசத் தொடரைத் தலைவர் ராஜாஜி ஆரம்பித்து வைத்தார்கள். 2. காலஞ்சென்ற தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணனின் சேவையைப் பாராட்டிச் சென்னை ரோட்டரி சங்கத்தினர் வழங்கிய பரிசை அவரது குமாரர் ஸ்ரீ சிவசைலம் தொழில் மந்திரியிடமிருந்து பெறுகிறார். 3. நெல்லையில் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் தலைமையில் திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களின் மணிவிழா விமரிசையாக நடந்தது. தர்மபுரம் ஆதீனகர்த்தர் அனுப்பி வைத்த பொன்னாடையைத் தமிழ்வேள் திரு பி. டி. ராஜன் அவர்கள் அணிவித்துப் பாராட்டினார். 4. சென்னை சர்வகலாசாலையின் ஆதரவில் நடைபெற்ற பேராசிரியர் கல்கி நினைவுச் சொற்பொழிவுகள் வரிசையில், 'நாவல்கள்: தோற்றமும் வளர்ச்சியும்' என்ற பேச்சுத் தொடரை மூன்று நாட்கள் 'கலைமகள்' ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் நிகழ்த்தினார். டாக்டர் மு. வரதராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

ராஜ்யம் அவ்வப்போது பொருட்காட்சியும், மகாநாடும் நடப்பதும், தொடர்ந்து கூரைத் தகடுகள் மாயமாக மறைவதும் சர்வ சகஜமான விஷயங்கள். சென்னை அரசாங்கம் தொழிற்காட்சிகளுக்கென்று தனி ஸ்தாபனம் இருப்பதாக மாயம் காட்டி, கட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படாமல் ஜாலம் செய்கிறது. காங்கிரஸ்காரர் பலர் ஒரு தொழிலும் செய்யாமல் லக்ஷாதிபதிகளாகி யிருப்பது சகஜமான விஷயமானாலும் இதனை ஆதார பூர்வமாக ஆராய யாருக்கும் தைரியமில்லை. கட்சியும் அரசாங்கமும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து விட்டதால் நாட்டில் கட்சியிடம் ஏற்பட்டுள்ள அச்சமே இதற்குக் காரணம்.

சட்டசபைக்கு மேலாக நீதிமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தைச் சட்ட மந்திரி ஸ்ரீ ஸென் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆனாலும் அவ்வாறு நீதியை நிலைநாட்ட 'சந்தர்ப்பங்கள்' இடம் கொடுப்பதில்லை. மத்தியப் பிரதேசக் கீழ்க் கோர்ட் நீதிபதி அரசியல் காரணங்களுக்காக நியாயத்தை விட்டுக் கொடுத்து விட்டார் என்று ஹைகோர்ட் நீதிபதி அநுமானம் தெரிவித்திருக்கிறார் எனில் நிலைமை எவ்வளவு கேவலமாகி விட்டதெனத் தெரிந்து கொள்ளலாம். இந்தச் சூழ்நிலையில் ஸ்ரீ நந்தர் அவர்கள் எத்தனை சதாசார சமிதிகளை முடுக்கி விட்டாலும் மறைந்திருக்கும் காதிவாலாக்களை யெல்லாம் வெளிக்கொண்டு வர முடியுமா?

என்ன சேதி?

அவன் தம்பி அங்கதன்

முன்பு இலங்கைப் பிரதமர் சிரிமாவோ அம்மையார், தாம் காமன்வெல்த் மகாநாட்டில் இந்தியப் பிரதமரைச் சந்திக்கும்போது இலங்கை இந்தியப் பிரச்னை பற்றிச் சமரசப் பேச்சுகள் நடத்தக் கூடுமென்று கூறி எல்லோருக்கும் மகிழ்ச்சி யூட்டினார். ஆனால் பின்னர் அவர் நடந்து கொண்டிருப்பது அதற்கு நேர் மாறாக இருக்கிறது. பர்மாவிலிருந்து சுமார் மூன்று நான்கு லட்சம் இந்தியர்களைத் திருப்பி யழைத்துக் கொண்ட இந்திய அரசாங்கம் இலங்கை இந்தியர்களையும் ஏன் அப்படித் திருப்பி அழைத்துக் கொள்ளக் கூடாது என்று அவர் இப்போது கேட்கிறார். 'அவன் தம்பி அங்கதன்' என்பதாக பர்மாவுக்கு இப்படி ஒரு வழித்தோன்றல் முளைத்திருப்பது இலங்கை இந்தியர்களைத் திடுக்கிடச் செய்திருக்கிறது.

பர்மா அநியாயம் செய்கிறது என்பதற்காக அதை இலங்கையும் பின்பற்ற நினைப்பது மிகப் பெரிய அநியாயம். இந்த அநியாயங்களுக்கு இடமளிக்கும் வகையில் பாரதத்தின் செல்வாக்குக் குன்றியிருப்பதை என்னென்பது?

கைவண்டியைக் கைவிடாதீர்!

சென்னையில் கைவண்டி, மாட்டு வண்டி, டிரக் முதலியவற்றைப் பூரணமாக ரத்து செய்ய வேண்டும் என்று போலீஸ் கமிஷனர் சர்க்காரிடம் வற்புறுத்தியதாகத் தெரிகிறது. இதனால் பலர் வேலை இழந்துவிடுவார்கள் என்று எடுத்துக்காட்டிச் சென்னை கைவண்டித் தொழிலாளர் சங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மக்கள் உழைத்து ஜீவனம் நடத்துகிறார்கள். வேறு நல்ல வேலை கிடைத்தால் ஏன் இந்தக் கடினமான தொழிலை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்? வேலையில்லாத் திண்டாட்டம் தீரும் வரையில் நடைமுறையில் இருக்கும் தொழில்களை ஒழித்து விடுவது உசிதமல்ல. சௌக்கியமாகவும் அழகாகவும் வாழ்க்கை நடத்துகிற பெருமக்களுக்கு வண்டிகளை மனிதன் இழுப்பதும் தள்ளுவதும் பார்ப்பதற்குக் கோரமாக இருக்கும். ஆனால் பட்டினியில் வாடும் குடும்பங்களைப் பார்த்தால் அதைவிடக் கோரமான காட்சியாக இருக்கும். இந்தப் பட்டினி கோரம் மறைந்து நிற்கிறது; வண்டியை மனிதன் தெருவில் இழுப்பதை எல்லாரும் பார்க்கிறார்கள். அதனால் அதை ஒழித்து விடச் சிலர் கிளர்ச்சி செய்கிறார்கள். மறைந்து நிற்கும் பஞ்சத்தையும் பரிதாபத்தையும் நீக்காமல் ஜீவனம் தரும் ஒரு தொழிலை மட்டும் அழித்து விடுவதில் என்ன லாபம்? தரித்திரத்தை மறைப்பதால் அதைப் போக்கியதாக ஆகிவிடுமா?

மேல மாம்பலம் சங்கர மடம்

மேல மாம்பலத்தில் உள்ள சங்கர மடம் வேத தர்மத்துக்காகச் செய்யும் தொண்டைச் சென்னை மாநகரம் நன்கறியும். மடத்தின் நான்காம் ஆண்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பண்டிதர்கள் உபந்நியாசங்கள் நிகழ்த்துகிறார்கள். லோக க்ஷேமத்தை முன்னிட்டு இம்மாதம் 16-ந் தேதி வரை பல ஹோமங்கள் நடக்கின்றன. ஆஸ்திக அன்பர்கள் யாவரும் சங்கர மடத்தின் பணிக்கு உதவி புரிய வேணும்.

வெள்ளித்திரை — நேயர் விமர்சனம்

'மக்கள் விரும்புகிறார்கள் அதனால் இப்படிச் செய்கிறோம்' என்கிற வார்த்தைகள் திரை உலகில் அடிக்கடி கூறப்படுபவை. மக்கள் உண்மையில் எதைத்தான் விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு வெள்ளித்திரை உலகினருக்கு உணர்த்தவும், பொதுவாகச் சமூகத்தில் நல்ல கலை ஆர்வத்தையும் உயர்ந்த ரசிகத் தன்மையையும் வளர்க்க வேண்டும் என்கிற நோக்கத்துடனும் இப்பகுதியைத் தொடங்க விருக்கிறோம். நேயர்கள் எழுதி அனுப்பும் விமர்சனங்களில் சிறந்தவற்றுக்குப் பரிசு உண்டு. விமர்சனங்கள் கல்கியில் ஒரு பக்கத்துக்கு மேற்படாத வகையில் அமைந்திருக்க வேண்டும்.

விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் முதல் படம்: **அருணகிரிநாதர்.**

விமர்சனங்கள் அனுப்பும் உறையின் மீது 'வெள்ளித்திரை — நேயர் விமர்சனம்' என்று குறிப்பிடுதல் வேண்டும். விமர்சனங்கள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: 14-8-64

தர்ம தாதா



பிரபல மருந்து வியாபாரிகளான தாதா கம்பெனிக்கு ஐம்பதாண்டு நிறைந்த பொன் விழாவைச் சென்ற வாரம் ஒரு புதிய முறையில் கொண்டாடியிருக்கின்றனர். இன்று ஒரு லட்ச ரூபாய் மதிக்கக் கூடிய அக் கம்பெனியின் சில்லறை வியாபாரத் துறையையும், ஆண்டு ஒன்றுக்குக் கம்பெனி சம்பாதிக்கும் நாற்பதினாயிரம் ரூபாயையும் வைத்தியம், கல்வி, புத்தகாலயம் முதலிய அறப் பணிகளுக்கே செலவிட வேண்டும் என்று கம்பெனியின் முதல்வரான ஸ்ரீ லால்சந்த் தாதாவும், அவரது இரு குமாரர்களும் தீர்மானித்து, பொன் விழா ஞாபகார்த்தமாகத் தர்ம சாஸனம் செய்திருக்கிறார்கள். ஸ்ரீ லால்சந்த் தாதா அவர்களின் தர்ம கைங்கரியங்கள் சென்னையில் பலருக்கும் தெரியும். பதினொரு அவுட் பேஷண்ட் ஆஸ்பத்திரிகளும், ஐம்பது படுக்கைகள் கொண்ட பிரசவ விடுதியும் சிறப்பாக நடத்தி வருகிறார். இவை தவிர ஜெயின் கல்லூரிக்கும், ஜைனர் கோயில்களுக்கும் அவர் ஏராளமாக நன்கொடை வழங்கியிருக்கிறார். அவரது தர்ம கைங்கரியங்களுக்கெல்லாம் சிகரமாக விளங்குகிறது இப்போது அவர் ஏற்படுத்தியுள்ள பொன் விழா நிதி.

இந்த நற்பணியைச் சென்ற வாரம் தேனாம்பேட்டை 'அப்பட்ஸ்பரி'யில் நடைபெற்ற ஒரு விருந்துபசாரத்தில் தாதா நாடறிய அறிவித்தார். சட்டமன்ற சபாநாயகர் ஸ்ரீ செல்ல பாண்டியன் விழாவுக்குத் தலைமை வகித்தார். மேல்சபை நாயகர் ஸ்ரீ மாணிக்கவேலு நாயகர் வைபவத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அந் நாட்களில் தாதா அவர்கள் 'பில்'லிலும் பணத்திலுமே குறியாக இருந்து திரவியம் திரட்டிய வியாபார சாமர்த்தியத்தைக் குறிப்பிட்டார். பின்னர் பேசிய ராஜாஜி, 'அந்நாட்களில் சுயராஜ்ய நிதிக்கு தாதாவிடம் சென்றபோது ஒன்றும்கொடுக்கவில்லை; பணத்தில் அவ்வளவு குறியாயிருந்தார்கள். இப்போது அதற்கெல்லாம் ஈடாக இவ்வளவு பெரிய தர்மங்கள் செய்திருக்கிறார்கள்' என்று பாராட்டி ஆசி நவின்றார். ராஜா முத்தையா செட்டியார், சென்னை ஷெரீப் கோத்தாரி ஆகியோர் தாதா குடும்பத்தாரின் கொடைத் திறனைப் பாராட்டிப் பேசினார்கள். கடைசியில் வந்தனோபசாரம் கூறிய ஸ்ரீ வி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், ராஜஸ்தானத்திலிருந்து வந்த தாதா குடும்பத்தார், வடநாடு தென்னாடு என்ற பேத உணர்ச்சியின்றித் தென்னாட்டில் ஏராளமான தர்ம கைங்கரியங்களைச் செய்திருப்பதை நினைவுகூர்ந்தார். இதற்குக் காரணம் தாங்கள் இந்தியர்கள் என்ற நினைப்பு அவர்கள் உள்ளத்தில் மேலோங்கியிருப்பதே என்று கூறினார்.

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு - குறள்





டோக்கியோவில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக்களை அங்கு சென்றுதான் பார்க்க வேண்டுமென்பதில்லை. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மக்கள் தங்கள் தங்கள் வீட்டிலிருந்தே டெலிவிஷனில் கண்டு கரகோஷம் செய்யலாம்! இது எப்படிச் சாத்தியமாகிறது? ஒலிம்பிக் விளையாட்டுக்களை ஒலிபரப்பும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை உலகைச் சுற்றி வரும் செயற்கைக் கோள் ஒன்று கிரகித்துக் கொள்ளும். பிறகு அதிலிருந்து அமெரிக்க, பிரிட்டிஷ் டெலிவிஷன் நிலையங்கள் தகவல்களைப் பெறும். செயற்கைக் கோள் மூலமாக உலகம் முழுவதிலும் டெலிவிஷன் தொடர்பு கொள்ள மேற்கு ஜெர்மனியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு நிலையத்தையே படத்தில் காண்கிறீர்கள். இரண்டு மில்லிமீட்டர் கனமே உள்ள இப் பிளாஸ்டிக் பலூனுக்குள், மையத்தில் முட்டை வடிவம் கொண்ட ஓர் ஏரியல் இருக்கிறது. எந்தச் செயற்கைக்கோளிலிருந்து தகவல்களைப் பெற விரும்புகிறார்களோ அதற்கு ஏற்ப ஏரியலின் திசையைத் திருப்பி வைப்பார்கள்.

❋

ருஷ்ய மருத்துவ நிபுணர்கள் திக்குவாய்க்கு ஒரு நூதனமான மருந்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆங்கிலம் கற்றுக் கொடுத்தால் திக்குவாய் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகிறதாம்! விளாடிவாஸ்டாக் மருத்துவ நிலையத்தில் ஒரு பெண்மணி இது வரை பதினொரு திக்குவாய்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்து அவர்களுடைய திக்குதலைக் குணப்படுத்தி யிருக்கிறாள்!

❋

அடுப்படியில் வேலை செய்யும்போது புடவைத் தலைப்புத் தீப்பிடித்துக் கொள்ள உடம்பில் தீப்புண்களுடன் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேரும் பெண்கள் பலரை நாம் அறிந்திருக்கிறோம். பிரிட்டனில் உள்ள வீடுகளில் முக்கியமான அறைகளில் நெருப்பு மூட்டுவதற்கென்று ஓரிடம் தனியாக இருக்கும். 'ஃபையர் பிளேஸ்' எனப்படும் இதில் தீ ஜ்வாலை விட்டெரியக் குளிருக்கு அடக்கமாய் அதனைச் சூழ்ந்து அமர்ந்திருப்பார்கள். இதனால் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் அதிகமான தீவிபத்துக்கள் ஏற்பட்டன. இந்தக் கொடுமையைத் தவிர்க்க டெயிலி மெயில் என்ற பத்திரிகை ஓர் இயக்கத்தைத் தொடங்கியது. இதன் விளைவாக நெருப்புப் பிடிக்காத துணிகள் தோன்ற ஆரம்பித்தன. இந்த வகையில் நைலானையும், டெர்லினையும் சேர்க்கலாம். இவை மிகுந்த சூட்டிலே உருகி விடலாம். ஆனால் குபுகுபுவென்று பற்றி எரியாது. பருத்தியினாலான மற்றத் துணி வகைகளையும் சாயம் போட்ட பிறகும் டிசைன்கள் அச்சானதற்குப் பிறகும் புரோபான் என்ற ஒருவகை பாஸ்பரஸ் ரசாயனக் கலவையில் தோய்த்தெடுத்து விட்டால் தீப்பிடிக்காமல் இருக்கும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

❋

இன்றைக்கு டாக்டர்கள் எழுதித் தரும் மருந்துச் சீட்டுக்களை யெல்லாம் இருபது வருஷங்களுக்கு முன் மருந்துக் கடைகளில் கொண்டு கொடுத்திருந்தோமானால் கடைக்காரர் விழித்திருப்பார். பத்து சதவீதம் மருந்துச் சீட்டுக்களுக்குத்தான் அவரால் மருந்து தரமுடியும். மீதம் 90 சதவிகிதம் சீட்டுக்களுக்கு அத்தகைய மருந்துகள் ஏதும் தம்மிடம் இல்லை என்றே கையை விரித்திருப்பார்! இன்று உபயோகத்திலிருக்கும் மருந்துகளில் பாதிக்கு மேல் 1939க்குப் பிறகு தோன்றியவை. அதற்கு முன் இத்தனை மருந்துகள் இருந்ததே கிடையாது. மருத்துவத் துறையில் விஞ்ஞானம் அந்த அளவுக்கு வளர்ச்சியுற்றிருக்கிறது.

❋

டெலிபோனில் பேசலாம்; டெலிவிஷனில் பார்க்கலாம்; டெலிவிஷன் போனில் பார்த்துக்கொண்டே பேசலாம்! அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி இந்த டெலிபோனைச் சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்தார். 'பெல்' டெலிபோன் கம்பெனியைச் சேர்ந்த விஞ்ஞானி எலிஸபெத்தைத் திரையில் பார்த்துக்கொண்டே மிஸஸ் ஜான்ஸன் அவருடன் பேசுவதைப் படத்தில் காணலாம். படடெலிபோன் இப்போது வாஷிங்டன், சிகாகோ, நியூயார்க் ஆகிய நகரங்களை இணைத்திருக்கிறது. வெகு வேகமாக இது இன்னும் பல ஊர்களுக்கும் பரவும்; சந்தேகமில்லை. ''அன்பே! இந்தக் கணமே உன்னைப் பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது!'' என்று இளம் காதலர்கள் ஒருவருக்கொருவர் வருங்காலத்தில் டெலிபோனில் சொல்லிக் கொள்ள மாட்டார்கள்!



அத்தியாயம் 31

பொல்லாத வள்ளுவர்!

ஏடும் எழுத்தாணியும் எடுத்துக் கொண்டு பைந்தமிழ்க் குமரன் கூத்துப் புனைவதற்கு உட்கார்ந்த போதுதான், அவனுக்கு அது அவ்வளவு எளிமையான பணியல்ல என்பது தெரிந்தது. அவன் முறையாகத் தமிழ் பயின்றவன்; இலக்கிய இலக்கணங்களை விழுப்பரையரிடம் கற்றுக் கொண்டவன்; தானாகவே சில பாடல்களும் புனைந்திருக்கிறான். என்றாலும் இந்தக் கூத்து மட்டிலும் அவனை எடுத்த எடுப்பிலேயே திகைக்கச் செய்து விட்டது.

கூத்துக்கான கருப்பொருளின் பிற்பகுதி முழுதும் அவனுடைய உள்ளத்தில்



ஆவேசக் கனலாகக் கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது. பாட்டுடைத் தலைவன் தலைவியிடம் விடை பெற்றுக் கொண்டு போருக்குப் புறப்படுவதிலிருந்து அவனால் ஒரே சிந்தனையோடு எழுதிக் குவிக்க முடியும். புண்பட்ட அவனுடைய வீர உணர்ச்சி அவனிடம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அதை எழுத்தில் அப்போதே கொட்டிப் பதிக்க அவன் துடிதுடித்தான்.

ஆனால் கூத்தைப் பாதியிலிருந்து தொடங்க முடியுமா? தலைவன் தலைவியைத் தனிமையில் சந்திக்க வேண்டும்; இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொள்ள வேண்டும்; அவர்களுடைய அன்பு முதிர்ந்து, அவர்களிடம் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆவலை எழுப்ப வேண்டும்; தங்கள் இல்லற வாழ்வு பற்றி அவர்கள் இனிய கனவுகள் காண வேண்டும். இவ்வளவையும் கூத்தாகப் பாட வேண்டும் என்றால், கூத்தை எழுதுபவனுக்குச் சொந்த அநுபவம் வேண்டுமே !

'பைந்தமிழ்ப் பயிற்சியும் இலக்கணை அறிவும் மட்டுமிருந்தால் எழுத டியாது போலும்!' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் இளைஞன். தலைவன் வாளும் வேலும் எடுத்துக் கொண்டு போர்க் களத்தில் வீர சாகசங்கள் செய்வதை எழுதி விடலாம். அவன் குளுரைக்கும் பகுதியில் அவனை அனல் கக்கச் செய்து விடலாம். ஆனால் அவன் தலைவியிடம் எப்படிக் காதல் மொழி பேசுவான்? தலைவி எவ்வாறு அவனிடம் நடந்து கொள்வாள்?

திடீரென்று அவனுக்குத் திருவள்ளுவரின் நினைவு வந்தது. எல்லா வகையான இடர்களிலுமே அவர் வழி காட்டக் கூடியவர் என்று அவனுக்கு விழுப்பரையர் கூறியிருந்தார். ஆனால் அவர் பாடம் நடத்தும்போது அறத்


கயல்விழி

அகிலன்

துப்பால், பொருட்பால் இரண்டை மட்டிலுமே அவனுக்குக் கற்றுக்கொடுத்தார். இன்பத்துப்பாலை அவர் பொருட்படுத்தாததால், பைந்தமிழ்க் குமரனும் அந்த ஏடுகளை மட்டும் எட்டிப் பார்க்கவில்லை.

''அறத்துப்பால் அனைவருக்குமே பொதுவானது. பொருட்பால் குறிப்பாக அரச குலத்தோருக்கும் அமைச்சுத் துறையோருக்கும் துணை செய்யக் கூடியது. இன்பத்துப்பால் திருமணம் செய்துகொள்ள வேண்டிய பருவத்தினரும், திருமணம் செய்து கொண்டவர்களும் கற்க வேண்டியது'' என்று விழுப்பரையர் அவனிடம் கூறியிருந்தார். ஆகவே அவன் இன்பத்துப்பால் ஏடுகளைத் தனியே கட்டி ஒரு மூலையில் போட்டிருந்தான்.

கொடுங்குன்றத்து மண்டபத்துக்குக் கொண்டு வரப்பட்ட சுவடுகளில் அதுவும் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தான் பைந்தமிழ்க் குமரன். நெடு



நாட்களாகவே பிரிக்கப்படாததால், செல்லரித்துப் போன நிலையில் அது அவனுக்குக் கிடைத்தது. எடுத்துப் பிரித்தான்; படிக்கத் தொடங்கினன்.

முதற் பாடலைப் படிக்கும்போதே அவனுடைய கரங்கள் நடுங்கின; இதயம் நடுங்கியது. களவியல் என்ற பகுதியைத் தொடங்கியவுடன், தானே ஒரு கள்வனாக மாறி வருவது போன்ற உணர்வு அவனுள் பொங்கி வந்தது. மனத்துக்குள் தனது ஆசிரியரான விழுப் பரையரிடம் மன்னிப்புக் கோரி, 'நான் கூத்து எழுதுவதற்காகத்தான் இதைப் படிக்கிறேன்; தவருக நினைக்க வேண்டாம்' என்று வேண்டிக் கொண்டான். அதைப் படிக்கப் படிக்க அவன் இது வரையில் கண்டிராத ஒரு கந்தர்வ உலகமே அவன் கண் முன் விரிந்து கொண்டு வந்தது.

அறம் புகட்டும் பற்றற்ற பெருந் துறவியாக வள்ளுவரை அறத்துப் பாலில் அவன் கண்டு வணங்கியிருக் கிறன். அவரையே அரசருக்கெல்லாம் அரசராக, அமைச்சருக்கெல்லாம் — அமைச்சராக, அறிவிற் சிறந்த பேரா சிரியராகப் பொருட்பாலில் கண்டு போற்றியிருக்கிறன். ஆனல் இன்பத் துப் பாலிலோ அவர் அவனை ஒத்த இளம் வயதுத் தோழனக மாறி, அவ னிடம் வாழ்க்கையின் பல நுணுக்கமான இரகசியங்களைக் கூறத் துணிந்து விட் டார்! தலைவன் தலைவி ஆகிய இரண்டே இரண்டு பாத்திரங்களை வைத் துக் கொண்டு, கற்பனைக்கு எட்டாத அற்புத உலகத்துக்குள் பைந்தமிழ்க் குமரனை அழைத்துச் சென்று விட்டார்!

இனிமேலும் அந்தப் பாடல்களை அவனல் அந்த மண்டபத்துக்குள்ளிருந்து படிக்க முடியாதெனத் தோன்றியது. ஒத்த வயது இளைஞர் இருவர் ஒன்று கூடித் தங்களது சொந்த வாழ்வின் இனிய நிகழ்ச்சிகள் பற்றிப் பேச விரும்பி னல் தனிமையை நாடுவார்களல்லவா? அது போன்ற தனிமையை நாடுவதற்கு அவனைத் தூண்டிக் கொண்டிருந்தார் வள்ளுவர்.

அம்பலக் கூத்தனிடம் கூறிவிட்டு ஏட்டுச் சுவடியுடன் அவன் மலைச்சாரல் அருவியை நோக்கி நடந்தான். அருவி யின் இன்னிசை ஒலிக்கும் தொலைவில், செழிப்பாக மண்டிக் கிடந்த மலைப் புல் லின்மீது உட்கார்ந்து, பின்புறம் பாறை மீது சாய்ந்து கொண்டான். சுற்றிலும் தென்பட்ட காட்சிகளில் இன்றைக்குப் புதுமை துடித்தது. மலர்ந்திருந்த மலர்கள் அவனுக்கு வெறும் மலர்களா கத் தோன்றவில்லை. இயற்கைக் கன்னி அவனைக் கண்ணிமைக்காது உற்றுப் பார்த்து இளநகை புரிந்தாள். மாலைத் தென்றலை அவன் மனம் கொண்ட மட் டும் நிரப்பிக் கொண்டான். நேற்றுக் கூட இந்த இடம் இவ்வளவு அழகாகத் தோன்றவில்லையே!

தான் புனையும் கூத்தில் தலைவனை யும் தலைவியையும் முதன் முதலில் சந் திக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, திருக்குறளின் ஏட்டைப் புரட்டி, ஏற்ற வரிகளைப் படிக்கத் தொடங்கினன். வள்ளுவரே தம் சொற்களால் ஒரு கூத்தரங்கம் அமைத்திருந்தார். அதி லிருந்த இளம் தலைவன் தொலைதூரத் தில் வரும் ஒரு பேரழகியைக் கண்டு விடுகிறன்.

''அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ?
கனங்குழை மாதர் கொல்?
மாலும் என் நெஞ்சு!''

அவள் அருகில் நெருங்கி விட்டாள்.

''கூற்றமோ? கண்ணே? பிணையோ?
மடவரல் நோக்கம்!''

வினக்களைப் பைந்தமிழ்க் குமரனின் உள்ளத்தில் எழுப்பி, அவற்றை அங்கே ஆனந்த நடமாடச் செய்து விட்டார் குறளாசிரியர். கூத்துடைத் தலைவனைப் பாட்டில் படைக்க வேண்டுமானல், முத லில் படைப்பவனே தலைவனக மாறித் தீர வேண்டும்! அவன் பெறும் இன்ப துன்பங்கள் அனைத்தையும் புலவன் பெற் ருல்தான் அவனை நன்கு படைக்க முடியும்.

பைந்தமிழ்க் குமரன் தன் கண் களை மூடிக் கொண்டு, தனது இதய அரங்கத்தில் தான் படைக்க விருந்த காட்சியைத் தீட்டலானன். 'அதோ தொலைவில் தலைவி ஆடும் மயிலென வந்து கொண்டிருக்கிறள். தலைவன் அந்தக் காட்சியிலேயே தனது நெஞ் சைப் பறி கொடுத்து விடுகிறன். அவள் அருகில் நெருங்கி வருகிறள். அவ ளுடைய விழிகள் அவனுக்குக் கொடுங் கூற்றுவனக, பெண் மானின் மருண்ட விழிகளாகத் தோன்றுகின்றன!

கண்களைத் திறந்தான் அவன். அவ னல் அந்தக் கண்களையே நம்பமுடிய வில்லை. கண் சென்ற வழியில் அவன் இருந்த இடம் தேடி மெய்யாகவே ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள். மெல் லிய மேலாடைப் பூந்துகில் அவள் முதுகின் பின்புறம் தோகை விரித்தாடும் மயிலெனக் காற்றில் பறந்து துடித்தது. உற்றுப் பார்த்தான் பைந்தமிழ்க் குமரன். அருகில் வந்து விட்ட அவ ளுடைய விழிகளை அவனல் இப்போது



ஆஹா...கோலினாஸ்
Kolynos
புதியது - தூயது...
களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினாஸ் தரும் புன்னகை
ASF/CH/K- IK TAM



எழிலோவியமான

பிரிண்டுகள்

பிரிண்டுகளிலே நாகரீகத்தின்
உச்சம். கண்கொள்ளா வியப்பு,
பூரிப்பு, கற்பனை கடந்த வனப்பு:
அவைதாம் எங்கள் வாயில்கள்,
சின்ட்ஸுகள், பாப்லின்கள்,
மற்றும் பிறவகைகள். நவீன
பாணிகளும், பழம்பெரும்
பாணிகளுமாக, பல்வேறு
வண்ண வகைகளிலே கொள்ளை
கொள்ளும் உங்களை. சால்வர்
கமீஸ் உடுப்பாக,நல்லாடையாக,
சேலையாக, ஒளிதவழும்
விளையாட்டுடையாக, உங்களை
நாகரீக எழிலோவியமாக்கக்
காத்திருப்பவை. உங்கள்
உள்ளம் விரும்பும் வனப்போடு
உருப்பெற்ற நெசவு.

சாயாஜி மில்ஸ் நம்பர் 1, பரோடா.

அஹமதாபாத், சாயாஜி மில்ஸ்
லிமிடெட்டின் ஒரு பிரிவு.

கப்பலட்கமீ மில்ஸ் லிட் கேம்பே.

BI-BP-15

நன்கு கண்ணுற முடிந்தது. அவள் மருண்டு மானென விழித்தாள்! அதுவே கூற்றாக இருந்தது பைந்தமிழ்க் குமரனுக்கு. வந்தவள் கயல்விழி!

கற்பனையிலும் கனவிலும் நனவிலுமாகச் சுழன்று கொண்டிருந்த அவன் திடீரென்று சுய உணர்வு பெற்றான். எதிரில் கிடந்த ஏட்டுச் சுவடியை எடுத்து வேகமாக நூலைச் சுற்றினான். பரபரப்புடன் அதைத் தனக்குப் பின்னால் மறைத்து வைத்தான்.

கயல்விழி ஏனோ இன்று அவனைத் தனது விழிக்கோணத்தால் ஏறிட்டுப் பார்த்து விட்டு நாணித் தலை குனிந்தாள். ஏதும் பேசாமலே அவனருகில் வந்து அமர்ந்தாள். அவளுடைய கூர்மையான விழிகளிலிருந்து அவன் மறைத்து வைத்த ஏடு தப்பவில்லை.

''கூத்தனிடம் கேட்டேன். சுவடியும் கையுமாகப் புறப்பட்டிருப்பதாய்க் கூறினான். — ஆமாம், என்னை விட்டுவிட்டு நீங்கள் மட்டிலும் என்றிலிருந்து தனியே குறள் படித்து வருகிறீர்கள்?''

இதற்கு எப்படி மறுமொழி கூறுவதென்று அவனுக்கு விளங்கவில்லை. 'இதுவரையில் நான் பொருட்பாலை மட்டுந்தான் உன்னோடு சேர்ந்து படித்திருக்கிறேன். உனக்குப் பாடமும் சொல்லியிருக்கிறேன்; 'இதைத் தனியேதான் படிக்க வேண்டும்' என்று எப்படி அவளிடம் கூறுவது!

''குறள் படிக்க வரவில்லை; கூத்துப் புனையலாம் என்பதற்காகத் தனிமையை நாடினேன்.''

''ஓ! அதனால்தான் நீங்கள் எழுதி வந்த ஓலையை என்னைக் கண்டவுடன் பின்னால் மறைத்து விட்டீர்கள் போலிருக்கிறது!''

அவன் தடுப்பதற்குள் சட்டென்று தாவி அவனுக்குப் பின்னாலிருந்த சுவடிக் கட்டை எடுத்தாள். ''கயல் விழி! கயல் விழி!'' என்று அவன் பதறினான். அவளிடமிருந்து அதைப் பற்றுவதற்கு முயற்சி செய்தான். அவளோ கலகலவென்று நகைத்துக் கொண்டே நெடுந்தூரத்துக்குச் சென்று மறைந்து விட்டாள்.

பைந்தமிழ்க் குமரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நாணமும் பரபரப்பும் இனம் விளங்காத தவிப்பும் அவனைப் பற்றிக் கொண்டுவிட்டன. ஓடிச் சென்று அவள் கரத்திலிருந்த சுவடியைப் பிடுங்கி வரலாமா என்றுகூட நினைத்தான். ஆனால் அந்த மெல்லியலாளின் உள்ளத்தை அவன் புண்படுத்த விரும்பவில்லை.

இன்பத்துப் பாலை எழுதி வைத்த வள்ளுவரையும் தன்னையும் சேர்த்து நொந்துகொண்டு, அவன் எதையோ பறிகொடுத்து விட்டவன்போல் தன்னுடைய பழைய இடத்திலேயே சென்று அமர்ந்தான். வீராதி வீரனை அவனை இப்போது அச்சமும் நாணமும் பற்றிக் கொண்டன.

நாழிகை சென்றது.

''என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்ற மென்மொழி கேட்டுத் தன் தலையைத் தூக்கினான் அவன். நாணமே பெண்ணுருக் கொண்டது போல் கயல்விழி அவனிடம் அந்தச் சுவடியை நீட்டினாள். அப்போது அவனை அவள் நோக்கிய நோக்கு அவன் இதயத்தில் மின்னலாய்ப் பாய்ந்தது.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

எண்ணத்தில் இடம் கேட்டாள்!

அடுத்த நாள் கயல்விழி மலைச்சாரல் மண்டபத்துக்கு வரவில்லை. விழுப்பரையரின் வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்த பணிப்பெண் கயல்விழிக்கு உடல் நலமில்லை என்ற செய்தியைப் பைந்தமிழ்க் குமரனிடம் கூறினாள். மறுநாளும் அதற்கடுத்த நாளும் கூட அவள் வரவில்லை. ஆனால் அவளுக்கு உடல்நலம் தேறி வருகிறது என்ற செய்தி ஆறுதல் அளிப்பதாக இருந்தது.

கூத்துப் புனைவதற்காக ஏடும் எழுத்தாணியுமாக அமர்ந்த பைந்தமிழ்க் குமரன் அதை எப்படி எழுதி முடித்தான் என்பது அவனுக்கே புதிராக இருந்தது. இதயத்திலிருந்து பொங்கிய பாடலை வாயால் இசைத்துக்கொண்டே அவன் ஏடுகளில் பதிப்பித்தான். ஒரே ஒரு நாளின் மாலைப் பொழுதில் அவன் பெற்ற உணர்வு அவனது நெஞ்சத்தில் வானவில்லின் விசித்திரங்களைத் தோற்றுவித்துவிட்டது. மெய்ம்மறந்து அவன் பாடினான். ஏட்டின்மீது எழுத்தாணி நடனம் புரிந்தது. உணவு, உறக்கம், உலகத்து நினைவு முதலிய எல்லாவற்றையுமே மறந்து அதில் ஒன்றிவிட்டான். கூத்தும் பிறந்தது.

கயல்விழியை விழுப்பரையரின் வீட்டுக்குச் சென்று காண வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு இருந்தாலும் மண்டபத்தை விட்டு வீட்டுக்குள் செல்ல

விழுப்பரையர் அவனுக்கு அனுமதி வளிக்கவில்லை. அடுத்த வாரத்தில் அவளே அங்கு வந்து சேர்ந்தாள். அவள் தோற்றத்தில் மிகவும் மெலிவு தென்பட்டது. திகைப்படைந்தான் புலவன்.

''என்ன காரணம் கயல்விழி?''

அவள் புன்னகை பூத்தாள். ''அன்றைக்கு மாலையில் தங்களைச் சந்தித்த பிறகு வீட்டுக்குச் சென்றேனல்லவா? பிறகு எனக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. என் உடல் நெருப்பாய்ச் சுட்டதென்று உய்யவந்தாள் கூறினள். அவள் என்னைவிட்டுச் சிறிதுகூட அகல வில்லை. அன்னையார்தான் மருந்து கொடுத்துத் தேற்றினார்கள்.''

வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாள் என்று அவன் நம்பியிருந்த அந்த நாள் அவளுக்கு மட்டிலும் ஏன் அத்தகைய துன்பத்தைக் கொடுக்க வேண்டும்? எந்த இரவு முழுவதும் அவன் இன்பக் கனவுகளில் மூழ்கியிருந்தானோ அந்த இரவில் அவள் நோய்வாய்ப்பட்டுத் துடித்திருக்கிறாள்.

''கூத்தைப் பாடி முடித்துவிட்டீர்களா?'' என்று கேட்டாள்.

''இதோ!'' என்று அவளிடம் ஒரு புதிய ஓலைச்சுவடியை எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கி அவள் பயபக்தியுடன் கண்களில் ஒற்றிக்கொண்டாள். பிரித்துப் பார்த்தாள்.

''நீங்கள் பாடிக் காட்டுகிறீர்களா? நான் கேட்கிறேன்.''

மண்டபத்துக் கூடத்தில் அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருமில்லை. பைந்தமிழ்க் குமரன் மெல்லிய குரலில் அவளுக்கு மட்டிலும் கேட்கும்படியாகப் பாடத் தொடங்கினன். முதற் பகுதிக் காட்சியை அவன் பாடிய போது கயல்விழியின் கண்களில் ஆனந்தம் பெருகியது. இடைப் பகுதியில் தலைவன் போருக்குச் செல்வதற்காக விடை கேட்கும்போது அவள் வேதனை அடைந்தாள். கடைசிக் கட்டத்தில் அவளுக்கு ஆவேசம் வந்துவிட்டது. அவள் கொற்றவைத் தேவியாகவே மாறிக் குரூரமாக விழித்தாள். பாடல் முடிந்து வெகு நேரமாயிற்று. சிறிது சிறிதாகச் சுய உணர்வு பெற்ற கயல்விழி தனது கன்னங்களில் வழிந்தோடிய துன்பக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

அவளுடைய முக மாறுதலையே கவனித்துக் கொண்டிருந்த பைந்தமிழ்க் குமரன், ''எனக்கு இந்தத் துறையில் பயிற்சி இல்லை; நான் புனைந்த முதற் கூத்து இதுதான்'' என்றான்.

''இதைக் கேட்ட பிறகு எனக்கு எதையும் வாய் விட்டுப் பேசுவதற்கே முடியவில்லை. மெய்சிலிர்த்து விட்டது எனக்கு.''

''கயல்விழி! என்னுடைய நோக்கத்தின் முதல் வெற்றி இப்போதே கிடைத்து விட்டது. இந்த நாட்டு மக்களின் உள்ளத்தில் உணர்ச்சித் தீயை அணைய விடாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இதில் உன்னுடைய கடமை, மிகப் பெரிய கடமை.''

''நீங்கள் எதைக் கூறினாலும் அதை நான் விரும்பிச் செய்கிறேன். உங்களுக்கு இதனால் மகிழ்ச்சி உண்டாகும் என்றால், அதைவிட வேறு எதையும் நான் பெரிதாகக் கருத மாட்டேன்.''

முதன் முதலாக இந்த ஆலோசனையை அடியோடு வெறுத்த அதே கயல்விழி, இப்போது இதற்குத் தன் மனம் கனிந்த ஆதரவைக் கொடுத்தது அவனுக்குப் பெருமை தந்தது. அவள் இந்தச் சில தினங்களில் அடியோடு மாறிப் போயிருந்தாள்.

''பாண்டிய நாட்டின் ஒப்பற்ற கலைச் செல்வியாக விளங்கும் நீ முன்பெல்லாம் பெருந் திரளான செல்வத்தைப் பெற்றுக் கொண்டு நடனமாடி விருப்பாய். நாடுகளிலும் நகரங்களிலும் வாழும் செல்வர்கள் உனது நடனத்துக்காக வாரி வாரி வழங்கியிருப்பார்கள். ஆனால் இனிமேல் நீ ஆடவிருக்கும் நடனம் வேறு வகையானதாக இருக்கும்.

''கிராமம் கிராமமாக, ஊர் ஊராகச் சென்று நாம் இதை நடத்தவேண்டும். கொடுக்க முடிந்ததைக் குடிமக்கள் நமக்குக் கொடுப்பார்கள். பசியிலும் வறுமையிலும் நாம் வாடும் நிலைக்கு அவர்கள் நம்மை விட்டுவிட மாட்டார்கள். ஆனாலும் இளவரசியைப் போன்று உயர் வாழ்வு வாழ்ந்து வந்த நீ எளிமையும், இன்னலும் நிறைந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை வரக் கூடும்.''

''எந்த நிலை வந்தாலும் அதை நான் விருப்பத்தோடு ஏற்றுக் கொள்வேன். ஏனென்றால் தாங்கள் சுட்டிக் காட்டும் வழியைப் பின்பற்றுவதால் எனக்குக் கிடைக்கும் இன்பத்துக்கு எதுவுமே ஈடாகாது.''

''கயல்விழி!'' என்று நாத் தழுதழுக்க அழைத்தான் பைந்தமிழ்க்குமரன். ''எவ்வாறு நீ இப்படி மாறுதல் பெற்றாய்?''

''எனக்குத் தெரியாது.'' அவளுடைய விழிகளின் ஏக்கம் அவனுக்கே புலப்படாதிருந்த உண்மையை அவனுக்குக் கூற முயன்றன.

வெட்டுக்காயங்கள், காயங்கள், சுட்ட புண்கள், மற்றும் சிராய்ப்புகளுக்கு

பர்னால்

முப்பது வருடங்களாகப் பிரபலமான ஆண்டிஸெப்டிக் ஆயின்ட்மெண்ட்

பர்னால் குணப்படுத்தும்போதே

இதமளிக்கிறது

பர்னால், பூச்சிக்கடிகள், புண்கள், மற்றும் அடைசொறி (தோபி இட்ச்,) வேர்வைக்குரு போன்ற இதர சருமநோய்களுக்கும் ஏற்றது. பர்னால் நோய் பரவுவதை முற்றிலும் தடுக்கிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் பர்னால் இன்றியமையாதது. இன்றே ஒரு பர்னால் டியூப் வாங்குங்கள்.



2 சைஸ்களில் கிடைக்கிறது

25 கிராம் பெரிய - சிக்கன சைஸ்

மற்றும்

10 கிராம் கைக்கடக்கமான சிறிய சைஸ்

பர்னால்

பூட்ஸ் கம்பெனியின் தரமிக்க தயாரிப்பு Boots

NAS b82a

கயல்விழி அவனிடம் கேட்டாள்: ''நீங்கள் எப்போதும் என்னுடன் இருப்பீர்களல்லவா? இந்தக் கூத்தில் நீங்கள் தானே தலைவராக அரங்கத்தில் என்னோடு நடிக்கப் போகிறீர்கள்?''

''கயல்விழி! கூடிய விரைவில் உன்னுடைய குழுவினரில் இப்போது யார் யார் எஞ்சியிருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் இங்கே திரட்டி விடுகிறேன். கூத்துக்களை நீ நடத்துவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் நான் கவனித்துக் கொள்ளுகிறேன். இறைவனருளால் உன் தந்தையார் உயிருடன் இருப்பாரானால் அவரையும் அழைத்து வரச் செய்கிறேன். ஆனால் எனக்கு இன்னும் சில கடமைகள் இருக்கின்றன. புலவர்களைத் திரட்டி நாடெங்கும் அனுப்ப வேண்டும். வேறு சில பணிகளும் காத்திருக்கின்றன.''

''இப்படி ஒரு கூத்தில் வேறு எந்த ஆண் மகனோடும் என்னால் இணைந்து நடிக்க முடியுமென்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்களும் அதை விரும்புகிறீர்களா?

''இதற்கு முன்பு இத்தகைய கூத்துக்களில் நான் நடித்ததில்லை. தலைவன் தோன்றும் கூத்துக்களாக இருந்தால் என்னுடைய தோழிகள்தாம் இந்த வேடங்களைப் புனைந்து கொள்வார்கள். கூத்தரங்கில்கூட நான் பிற ஆண்களை என்னிடம் அன்பு மொழி பேச அனுமதிப்பதில்லை.''

கயல்விழி இப்போது பைந்தமிழ்க் குமரனின் உள்ளத்தில் விசுவரூபம் எடுத்து வளர்ந்து கொண்டிருந்தாள்.

''எப்போதாவது ஒருசில நாட்களில் நானே கூத்தரங்கத்தில் உன்னோடு தலைவனாகத் தோன்றுவதற்கு அவசியம் நேரிடலாம். அப்போது அதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுவேன். மற்ற நாட்களில் உன் தோழிகள் உன்னோடு நடிக்கட்டும்.''

நெடுமூச்செறிந்தாள் கயல்விழி.

''கயல்விழி! ஒன்றை மட்டும் உன்னிடம் என் உளம் திறந்து கூறுகிறேன். என்னுடைய கனவுகளை நனவாக்க நான் எத்தனையோ சாதனைகளை மேற்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இடையில் குறுக்கிடும் பல சோதனைகளிலும்நான் வெற்றி பெற்று நம்முடைய சபதத்தை நிறைவேற்ற வேண்டும். நீ என்னுடைய உயிரின் உயிரில், உள்ளத்தின் துடிப்பில், இரத்தத் துளியின் செந்நிறத்தில் எப்படியோ இரண்டறக் கலந்து விட்டாய். உடலால் நான் உன்னிடமிருந்து பிரிந்து வாழும் காலம் வரும்போதும் உள்ளத்தால் நான் உன்னோடு வாழ்வேன்.— இதை உன்னால் நம்ப முடியுமா?''

ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள் கயல்விழி. அவளுடைய செவ்விதழ்கள் துடித்தன. சொற்கள் தடுமாறின.

''இந்த அளவுக்குத் தகுதி உடையவளாகத் தயவுசெய்து என்னை உயர்த்திவிடாதீர்கள். தங்களுடைய அன்புப் பெருக்கைத் தாங்கிக் கொள்வதற்கும் நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும். என்னை அப்படி நினைத்துக் கொள்ளவே என்நெஞ்சு நடுங்குகிறது. இந்த நடுக்கத்தால்தான் நான் இத்தனை நாட்களாக நோய்ப் படுக்கையில் வீழ்ந்துவிட்டேன். நீங்கள் எனக்கு மிகவும் அருகில் இருந்தாலும் ஏனோ என்னால் எட்ட முடியாத தொலைவில் இருப்பதுபோல் எனக்குப் பிரமை ஏற்படுகிறது.

''ஒரே ஒரு வேண்டுகோள். எனக்காக நீங்கள் அதை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய கூத்தின் அரங்கேற்றும் இந்தக் கொடுங்குன்றத்தில் மங்கையொரு பாகனைத் திருக்கல்யாண கோலத்தில் வீற்றிருக்கும் இறைவனின் சந்நிதானத்தில் நடைபெறவேண்டும். அப்போது, அன்றைக்கு மட்டிலுமாவது நீங்கள் என்னோடு கூத்துடைத் தலைவராக நடிக்க வேண்டும். பிறகு எங்கு யாருடன் எப்போது நடித்தாலும் நான் தங்களுடன் வாழ்வதாகவும், நடிப்பதாகவுமே நினைத்துக் கொள்வேன்.''

''அவ்விதமே செய்வோம்.''

பைந்தமிழ்க் குமரன் எழுந்து நின்றான். அவன் முன்பு தரையில் வீழ்ந்து அவன் பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டாள் கயல்விழி. தன்னுடைய கண்ணீர்ப் பெருக்கால் அவற்றைக் கழுவினாள். ''ஒருபோதும் இந்த ஏழைக்குத் தங்களது இதயத்தின் மூலையில் கொடுத்திருக்கும் இந்த அணு அளவு இடத்திலிருந்து என்னை அகற்றி விடாதீர்கள்! அது ஒன்றே போதும் எனக்கு! வேறு எதுவுமே வேண்டாம்!''

இளைஞன் சிலையானான்.



நகரமும் கனவும்

'ஸ்பெஷல் ரயிலாம் சம்பந்திகள் வருவதற்கு. அவர்கள் தங்குவதற்கு அந்தத் தெரு பங்களாக்களே காலி. அந்தந்த வேலைகளைச் செய்வதற்கென்று ஆட்படைகளையே நியமித்திருக்கிறார்கள். சமையல் யார், தெரியுமோ? கலியுக நளன் என்று போற்றப்படும் இன்னார். நாலு நாள் கல்யாணம். நேரத்துக்கு மூன்று கச்சேரிகள். தெருவடைத்துப் பந்தல். ஏக தடபுடல்! ஏக தடபுடல்! பணம் தண்ணீராகச் செலவழிகிறது!'

கல்யாணத்துக்கு முன் இப்படி அடிபட்ட பேச்சு, 'என்ன பணம் இருந்து என்ன பிரயோசனம்? வந்தவர்களை யார் ஆதரவோடு விசாரிக்க இருந்தார்கள்? எல்லாரும் கூலிக்கு மாரடிப்பவர்கள். கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு போக வந்தவர்கள். வீட்டு எசமானரைக் கண்டு கல்யாணம் விசாரித்தது.—விரலை மடக்குங்கள், யாராவது ஒருவர் உண்டா? ஏதோ காமா சோமா என்று விதரணையே இல்லாமல் கல்யாணம் நடந்தது' என்று மாறுவது உண்டு. இது கோடீசுவரர் பெண்ணின் கல்யாணம்.



இன்னொரு கல்யாணம். கந்தல் ஆடை குசேலரின் பெண் கல்யாணம். கிளி போன்ற அவர் பெண்ணைக் கொத்திக் கொண்டு போக ஒருவன் தானாக வந்தான். ஆனால் பாவம், கல்யாணம் பண்ணிக் கொடுக்க அவர் கையில் காலணாக் காசு இல்லை. அவருக்குக் கடன் கொடுத்து உதவுவார் யார் இருந்தார்கள்? இப்படிப் பட்ட இக்கட்டான நேரத்தில்தான் அவரது ஆப்த நண்பர்கள் நான்கைந்து பேர் எப்படியும் கல்யாணத்தை நடத்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு முன் வந்தார்கள். தங்கள் உழைப்பை நல்கினார்கள். பணம் கொடுத்து உதவக் கூடியவர்கள் உதவினார்கள். தங்கள் சொந்தப் பெண்ணுக்கே கல்யாணம் செய்து வைப்பது போன்ற பெருமிதத்தில் குசேலரின் மகள் கல்யாணத்தை நடத்தி வைத்தார்கள். உபசரணையில் ஒருவிதக் குறைவும் இல்லை. விசாரிக்க வந்தவர்களுக்கும் பரம திருப்தி. 'ஓகோ' என்று இல்லாவிட்டாலும் கல்யாணம் நிறைந்தது. 'கல்யாணம் என்றால் இப்படியல்லவா செய்ய வேண்டும்?' என்று ஊரும் உலகமும் பேசிக்கொண்டன.

இந்த நாட்களில் எடுக்கப்படும் திரைப் படங்களிலும் இத்தகைய வகைகள் உண்டு. ஷஹர் ஔர் ஸப்னா (நகரமும் கனவும்) என்ற கே. ஏ. அப்பாஸின் ஹிந்திப் படம் இரண்டாம் வகைக் கல்யாணத்தைச் சேர்ந்தது. நண்பர்களின் வட்டி இல்லாத பண உதவியும், நடிகர்களின் பணம் வாங்காத உண்மை உழைப்பும் அவரது படத்துக்கு ஜனாதிபதியின் தங்கப் பதக்கத்தையும், சமீபத்தில் செக்கோஸ்லோவோகிய நாடு நடத்திய அகில உலக வெள்ளித் திரை விழாப் பரிசையும் நல்கி யிருக்கின்றன.

கதையில் ஒரு புதுமை. பம்பாயில் வாழும் நடைபாதைவாசிகளை நிலைக்களனாகக் கொண்டு தத்ரூபமாகத் திரைப்படமாக்கப் பட்டது. நடைபாதையில் வாழும் நல்லவர்களையும் தீயவர்களையும் படமாக்கியவர், நாகரிக வாழ்விலும் எத்தகைய நல்லவர்களும் தீயவர்களும் இருக்கிறார்கள் என்பதைக் கலைபடச் சித்திரித்திருக்கிறார்.

இந்தக் கதையிலும் காதல் வருகிறது. ஆனால் விரசமான முறையில் இல்லை; ரசமான முறையில். இந்திய மண்ணின் பெருமை துலங்க, காதலின் புனிதத்துக்கு ஊறு நேராமல் புகழ் சேர்க்கும் முறையிலே சுரேகாவும் திலீப்ராஜும் நடித்திருக்கிறார்கள். இருவரும் திரைக்குப் புது முகங்கள். சுரேகா கல்லூரி மாணவி. திலீப்ராஜ் புகழ்பெற்ற நடிகரான ஜயராஜின் குமாரர். இருவருக்கும் நல்ல எதிர்காலம் இருக்கிறது.

படத்துக்குப் பின்னணி இசை வெகு குறைவு. பாடல்களுக்கோ பக்கவாத்தியங்களே கிடையாது. நடைபாதை நாவலாசிரியராக வரும் மனமோகன் கிருஷ்ணா கருத்தமைந்த பாடலுக்குச் சிறப்பாகக் குரல் கொடுத்துத் திறம்பட நடித்தும் இருக்கிறார். கதையில் வரும் பாத்திரங்களுக்கேற்ப நடிகர்கள் அனைவருமே ஒத்துழைத்து மெருகு கூட்டியுள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்ணைத் தெய்வமாக மதித்து இடம் கொடுக்கும் பண்பும் குழந்தை பிறந்தபொழுது 'மனிதன் பிறந்தான்' என்று மகிழும் தன்மையும் படம் பார்ப்போரின் மனத்தை நிறைவு கொள்ளச் செய்கின்றன. 'கதை முடிவுதான் வாழ்க்கையின் ஆரம்பம்' என்று சூசகமாகக் காட்டும் பாங்கும் சிறப்பான அம்சம். ஆனால் ஏழைக் கல்யாணத்தில் இந்த அனாவசியச் செலவு எதற்கு என்று கேட்கத் தோன்றுவது போல இந்தப் படத்தில் ஜனரஞ்சகத்தை உத்தேசித்து ஒரு சில அனாவசியக் காட்சிகளும் இருக்கின்றன. ஆயினும் படம் பார்த்துப் பார்த்து மகிழக்கூடிய படம்.

இத்தகைய நல்ல படத்துக்கு ஒரு விளம்பரம் தேவையா? பூக்கடைக்கு விளம்பரம் செய்வாருண்டா?—இப்படிக் கேட்பவர்களுக்கு ஒரே பதில்: இந்தக் காலத்துப் பூக்கடைகளில் என்ன என்னவோ எஸ்ஸென்ஸ் வாசனைகள் உண்மைப் பூவின் மதிப்பைக் குறைக்கின்றன. எனவே, உண்மைப் பூக்கடைக்கும் நல்லதொரு விளம்பரமும் விமரிசனமும் தேவைதான்.

— ரா. வீ.



சினிமா பாஷையில் சொல்லுவதானால் கதை கொஞ்சம் 'டிபிகல்ட் சப்ஜெக்ட்'தான். இந்தப் படத்தில் எல்லா நடிகர்களுக்கும் சரியானபடி 'சான்ஸ்' கொடுத்திருப்பதை மிகவும் பாராட்ட வேண்டும்.

தற்கொலை செய்து கொள்ளப் போன ரவிக்கு அமிர்தசரஸில் ரகுவின் நட்பு கிடைப்பதோடு வேலையும் கிடைக்கிறது; ஒரு வடநாட்டுப் பெண்ணை மணந்து கொள்கிறான். ரகுவுக்கு அவன் தந்தை பெண் பார்த்து எழுதுகிறார். அவன் சென்னை சென்று அந்தப் பெண்ணைப் பார்க்கிறான். அவள் உலகம் அறியாப் பேதை. அவள்மீது அயோக்கியன் ஒருவன் களங்கம் கற்பிக்கப் போக அது ஊர் முழுதும் பரவி அவள் திருமணத்துக்கே தடையாக நிற்கிறது. அந்தப் பெண் ரவியின் தங்கை என்னும் உண்மையும் கடைசியில் தெரிய வருகிறது. தன் தங்கை மீது சுமத்தப்பட்ட களங்கத்தை உண்மையென நம்பிய ரவி ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வடநாடு செல்கிறான். அவளை மணந்து கொள்ளக் கூடாதென்று ரகுவை ரவியே தடுக்கிறான்.

பேதைப் பெண் கோகிலா, விவரம் தெரிந்த தங்கை சகுந்தலா, தந்தை மகாதேவன் — நண்பர்களான ரவி, ரகு. இவர்களை வைத்துக் கொண்டு படத்தை மிகவும் சுவையாகச் செய்திருக்கிறார்கள்.

சிவாஜி கணேசனின் நடிப்பு சிகரமாக விளங்குகிறது. பாசம், பரிவு, உருக்கம், சோகம், வீரம் இத்தனை உணர்ச்சிகளையும் கொட்டுவதோடு அவர் ஹாஸ்யத்தையும் கைவிடவில்லை. தம் நடிப்பின் சிறப்பை ஒவ்வொரு கட்டத்திலும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கோகிலாவாக வரும் சாவித்திரி சக்கைப் போடு போட்டுவிட்டார். பேதைமையையும், துடுக்குத்தனத்தையும் ஒரே சமயத்தில் இவரால் வெளிப்படுத்த முடிகிறதே! ரகுவை முதன் முதலில் கண்டதும் தன்னைப் பற்றிய விவரங்களையெல்லாம் வெள்ளை உள்ளத்துடன் வெளியிட்ட காட்சி ஒன்று போதும். முக பாவத்தையே மாற்றிக் கொண்டிருப்பது பாராட்டுக்கு உரியது. ஆனால் சாவித்திரியின் சிறந்த நடிப்பைப் பாராட்டும்போது ஒரு குறையையும் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர் எடையைக் குறைக்காதது தான் பெரிய குறையாயிருக்கிறது. ஏற்ற பாத்திரத்துக்குப் பருவமும், உருவமும் ஒத்துழைக்க வேண்டுமல்லவா ?

எஸ். வி. ரங்காராவின் நடிப்பு என்றுமே சோடை போனதில்லை. இதில் மட்டும் என்ன? புஷ்பலதா பேதைப் பெண்ணின் தங்கையாக வந்து உருக்கமாக நடித்து எல்லோரையும் உருக வைக்கிறார். அவருக்கு நல்ல வேளையாகக் காதலிக்க நேரமில்லை.

ரவியாக வரும் எஸ். எஸ். ராஜேந்திரன் ஏற்ற பாத்திரம் அருமையான பாத்திரம். பொங்கியும், பொருமியும், சிரித்தும், காதலித்தும் நன்றாக நடித்திருக்கிறார்.

கே. ஆர். விஜயா கவர்ச்சியாகத் தோன்றிக் கச்சிதமாக நடிக்கிறார்.

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் திறமையான டைரக்ஷன் படத்தை விறுவிறுப்பாக ஓட்டியிருக்கிறது. திரைக் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று பொறுப்புக்களிலும் வெற்றி பெற்றிருக்கிறார்.

''சிந்து நதியின் மிசை நிலவினிலே'' என்ற பாரதியின் பாட்டைக் கனவுக் காட்சியாக அமைத்து ஒளிப்பதிவாளர் தம் கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார். பாரதியார் பாட்டைத் தவிர மற்றப் பாடல்கள் ஏனோ நினைவில் தங்கவில்லை!

ஊரார் தன் மீது மாசு கற்பித்துப் பேசிய போது லட்சியம் செய்யாமல் இருந்த கோகிலா கடைசியில் தந்தையே தன்னை இழித்துப் பேசியதும் மனம் உடைந்து தூக்க மாத்திரைகளை அளவுக்கு மீறி விழுங்கி உயிர் துறக்கிறாள். சரியான 'டிராஜெடி'தான். படம் பார்த்து விட்டுத் தியேட்டரை விட்டுப் போகும் மக்களில் ஒருவர் 'என்ன இருந்தாலும் கோகிலா இறந்திருக்க வேண்டாம். பாவம், அந்தப் பெண் கடுசொல் பொறுக்க முடியாமல் வேதனைப்பட்டுப் படம் முழுவதும் அவதிப்படுது. கடைசியில் கொன்று போட்டுட்டாங்க பாவிங்க....!'' என்று நண்பரிடம் சொல்லிக்கொண்டு போனார். இதை இன்னும் பலர் ஆமோதித்தார்கள். ஆனால், என் அபிப்பிராயம், கதாநாயகியைக் கொன்று திரைக் கதைக்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான். எத்தனையோ தமிழ்ப் படங்களில் செத்திருக்க வேண்டிய கதாநாயகி சாகாமல் படம் பார்ப்பவர்களைத் தீர்த்துக் கட்டியிருக்கிறாள்! இந்த ஒரு தடவை அவள்தான் சாகட்டுமே!

''கைகொடுத்த தெய்வம்'' படத் தயாரிப்பாளர்களுக்கு மட்டும் அல்லாமல் படம் பார்ப்பவர்களுக்கும் கைகொடுத்து விட்டது. நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் நல்ல படம் இது.

— காந்தன்


கதை: ராஜி
சித்திரம்: வினு
9
ஆளப்பிறந்தவன்
கிராமத்தில் கள்ளச்சாமி மக்களை மயக்கிக் கொண்டிருக்கிறான்...
அதோ மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறாரே அந்தச் சாமியார்தான்.
அவன் வேஷக்காரனாகத்தான் இருக்க வேண்டும். அவனது ஜடாமுடி செம்பட்டையாகவும் தாடி மீசை கறுப்பாகவும் இருப்பதைப் பார்த்தாயா!
திடீரென்று அவன் மீது பாய்ந்து...
கூடாது. ஜனங்கள் உடனே நம்மீது தான் ஆத்திரம் கொள்ளுவார்கள். இதோ பார்த்தாயா?
இவை புதுக் கண்ணாடிக் கற்கள். இதன் மேல் சூரிய கிரணங்களைச் செலுத்தி ஒரு பொருள் மீது பாய்ச்சினால் அது தீப்பற்றி எரிய ஆரம்பிக்கும்.
நாம் மூவரும் வெவ்வேறு மரங்களில் ஏறி அமர்ந்து கொண்டு சூரியகிரணங்களை இதன் மேல் செலுத்தி... வேலா! நீ கள்ளச்சாமியின் சடைக்குக் குறிவை. சோமு! நீ மீசையைக் கவனித்துக் கொள். நான் தாடிக்கு நெருப்பு மூட்டுகிறேன். நம் நண்பர்களைக் கூட்டத்தில் கலந்து தயாராக இருக்கும்படி சொல். நடக்கும் வேடிக்கையைப் பார்!
சரியானபடி திட்டமிட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறாய், பேஷ்!


ஜெயசிம்மனின் திட்டப்படி சூர்யகிரணங்கள் லென்ஸிலிருந்து கள்ளச்சாமி மீது பாய்கின்றன.
ஆதலால் வீர சிம்மனே உங்களுக்குகந்த மன்னர்.
ஐயோ, என் தாடி! எரிகிறது! ஐயையோ! இந்த ராஜ்ஜியத்தில் ஏதோ பாவச் செயல் நடந்திருக்கிறது. அதனால் தான் இந்த விபரீதம்...
அடடா! சாமியாரின் தாடி மீசை கன்னம் தலை அனைத்தும் போச்சுடா...!
ஹ...ஹ... கள்ளச் சாமியின் தாடி மீசை எல்லாமே வெந்து விட்டது! கள்ளச் சாமியுள்ளே தேசமே தீப் பொம்மையாய் இருக்கிறான்! நம்மை ஏமாற்றிய அந்தப் பயலைக் கட்டி வைத்துச் செம்மையாக உதைப்போம்.
அதோ பாருங்கள், நம் மதிப்புக்குரிய அரசர் வருகிறார். ஜெயசிம்மர் வாழ்க!
இம்மாதிரி வேஷதாரிகளின் பேச்சைக் கேட்டு உங்கள் பொழுதை ஏன் வீணாக்குகிறீர்கள்? உங்களுக்கு ஏதாவது குறை இருப்பின் அதை அரசாங்க அதிகாரிகளிடம் கூறுவதற்கென்ன?
ஐயா, உங்களை வளர்த்த தாய் தந்தையர் உங்களைக் காண ஆவலாக இருக்கிறார்கள்.
கள்ளச் சாமிக்காக மட்டும் நான் வரவில்லை தோழா. என்னை வளர்த்த அந்தப் பெரியவர்களைக் காணவுமே நான் வந்தேன். வா, போவோம்...



இந்த வீட்டில் எங்களுக்குமட்டும் சேவகனாக இருந்தாய். இன்றே நாட்டு மக்களை சேவிக்கும் மன்னனாகி விட்டாய். நீ நீடூழி வாழ்ந்து நல்லாட்சி நடத்த வேண்டும்!
நண்பா, இதோ இந்தக் கிளியை என் நினைவாக எடுத்துச் செல். ரொம்ப அறிவுடையது. ஆபத்துக் காலத்தில் உதவக்கூடிய இது என்னிடம் இருப்பதைவிட உன்னிடம் இருப்பது நல்லது!
சில நாட்களுக்குப் பிறகு....
எங்காவது புதிய பிரதேசத்திற்குப் போய் வரலாமே?
தேவா, அரண்மனைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பது வெறுப்பாக இல்லை...?
தெற்கேயுள்ள மலைகள் சூழ்ந்த பகுதிக்குப் போய் வந்தால் என்ன?
ஆஹா, எத்தனை அற்புதமான காட்சி? அந்த நீர் வீழ்ச்சி கொட்டும் அழகைப்பார். எத்தனை விதமான பூக்கள் பறவைகள்? அற்புதம்!
இயற்கையை ரசித்துக் கொண்டு செல்லும் தங்களை அபாயம் சூழ்ந்து கொண்டு வருவதை அவர்களிருவரும் உணரவில்லை.
தொடரும்

நீண்ட நடைபயணங்கள்

அகிலத்தையெல்லாம் கட்டியாள வேண்டுமென்ற ஆசையோடு பிறந்தவன் மகா அலெக்ஸாந்தர். அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள கி. மு. 334ம் வருடம் தன்னுடைய இருபத்திரண்டாவது வயதில் முப்பதினாயிரம் காலாட்படை வீரருடனும், ஐயாயிரம் குதிரைப் படை வீரருடனும், ஆசியா கண்டத்தை நோக்கி நீண்ட நடை பயணமாகப் புறப்பட்டான். கிரேக்க நாகரிகத்தின் செழுமையை எடுத்துக் காட்டுகிற மாதிரி, பல துறை அறிஞர்களும், தொழில் வல்லுநர்களும் இவனைப் பின்தொடர்ந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் அன்றாடம் ஆகார வகைகள் தேவையிருக்குமல்லவா? இதற்காகக் கூடவே ஒரு பண்டக சாலையும் சென்றது. அதாவது, போர்த்திறனும், அறிவுத்திறனும், தொழில் திறனும் படைத்த ஒரு சமுதாயம் அலெக்ஸாந்தரை முன்விட்டுக் கொண்டு கால்நடையாகப் புறப்பட்டதென்று சொல்லலாம். இப்படிப் புறப்பட்ட படை, ஆசியா கண்டத்தின் வடமேற்குப் பகுதியான சின்ன ஆசியாவை நோக்கி வந்து கொண்டிருந்தது. இந்தப் பகுதியில் பாரசீக ஆதிக்கத்துக்குட்பட்ட சிறு சிறு கிரேக்க ராஜ்யங்கள் பல இருந்தன.

அப்பொழுது பாரசீக சாம்ராஜ்யம், செல்வச் செழுமையிலும் அரசியல் செல்வாக்கிலும் உயர்வு



ஆசியாவுக்கு வந்த அலெக்ஸாந்தர்

வே. சாமிநாத சர்மா

பெற்றிருந்தது. ஆனால் அந்த உயர்விலேயே வெகு சீக்கிரத்தில் தாழ்வடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டு வந்தன. பொதுவாக இந்தக் காலத்தில் பாரசீக சமுதாயம் மிதமிஞ்சிய சுகபோகவாழ்க்கையில் தோய்ந்து கிடந்தது. கேட்பானேன் தாழ்வுக்கு?

அலெக்ஸாந்தர் படையெடுத்து வந்த காலத்தில், பாரசீகத்தை மூன்றாவது டேரியஸ் என்பவன் (கி.மு. 336 முதல் 331ம் வருஷம் வரை) ஆண்டு வந்தான். இவன் நல்ல உயரம்; நல்ல அழகு. அழகில் இவனுக்கு நிகர், உலகத்திலேயே யாரும் இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு எடுப்பான தோற்றம் உடையவனாக இருந்தான் என்று இவன் சம காலத்தவர் வியந்து பேசியிருக்கிறார்கள். அழகும் எடுப்பான தோற்றமும் இருந்து என்ன? சுகபோக வாழ்க்கையில் ஊறிக் கிடந்த காரணத்தினால், அலெக்ஸாந்தரை வெற்றி கொள்ளவல்ல ஆற்றலும் நெஞ்சுரமும் இவனிடம் இல்லாமல் போய் விட்டன.

அலெக்ஸாந்தரின் படையை, தன் சாம்ராஜ்யத்தின் எல்லைப் புறத்தில் ஓடிக்கொண்



டிருந்த கிரானிக்கஸ் என்ற நதியின் எதிர்க் கரையிலேயே தடுத்து நிறுத்தி, திரும்பிச் செல்லும்படி செய்துவிட வேண்டும் என்று திட்டமிட்டு, டேரியஸ் மன்னன் நாற்பதினாயிரம் பேரைக் கொண்ட ஒரு காலாட் படையை அந்த ஆற்றங்கரைக்கு அனுப்பி வைத்தான்.

அந்தக் கிரானிக்கஸ் ஆறு ஆழமுள்ளது; சுழல்கள் நிறைந்தது. எதிர்க் கரையிலிருந்த கிரேக்கப் படை வீரர்கள், இதனை எப்படிக் கடப்பதென்று தயங்கி நின்றார்கள். ஆனால் அலெக்ஸாந்தர், இவர்களுக்கு வழி காட்டினான். பாரசீகர்கள் இடைவிடாமல் தொடுத்து வந்த அம்புகளைப் பொருட்படுத்தாமல் பதின்மூன்று பேர்களைத் தன் துணைவர்களாக அமைத்துக் கொண்டு ஆற்றில் குதித்து விட்டான். நீந்திச் சென்று மறு கரையை அடைந்தான். பாரசீகர்களுக்கும் இவனுக்கும் சிறிது நேரம் கைகலந்த சண்டை நடைபெற்றது. இதற்குள் கிரேக்கர்கள் ஆற்றைக் கடந்து வந்து இவனுக்கு உதவியாகச் சேர்ந்துகொண்டார்கள். மும்முரமாகப் போர் நடைபெற்றது. சுமார் இருபதினாயிரம் பேரைப் பலி கொடுத்த பிறகு, பாரசீகர்கள் புறமுதுகு காட்டி ஓடி விட்டார்கள்.

கிரானிக்கஸ் போர் முடிந்த சுமார் ஒரு வருஷ காலத்துக்குள் அலெக்ஸாந்தர், சின்ன ஆசியாவிலிருந்த கிரேக்க ராஜ்யங்கள் பலவற்றையும் பாரசீக ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, கிரேக்க ஆதிக்கத்துக்குட்படுத்தினான்.

இங்ஙனம் அலெக்ஸாந்தரின் ஆதிக்கம் பரவி வருவதைக் கண்ட டேரியஸ் மன்னன் மீண்டும் போருக்குத் தயாரானான்.

சுமார் ஆறு லட்சம் பேர்கள் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டினான். இந்தப் படைக்குத் தானே தலைமை வகித்து நடத்திச் செல்வதென்று தீர்மானித்தான்.

இந்தப் பெரும் படை யூப்ரெட்டிஸ் நதியைக் கடக்க வேண்டியிருந்தது. இதற்காக, படகுகளைக் கொண்டே ஒரு பாலம் நிர்மாணிக்கப்பட்டது. இந்தப் பாலத்தைக் கடந்து செல்ல ஐந்து நாட்கள் பிடித்தன. கூடவே டேரியஸ் மன்னனுடைய பொக்கிஷமும் சென்றது. இதனை எடுத்துக் கொண்டு போன அறுநூறு கோவேறு கழுதைகளும் முந்நூறு ஒட்டகங்களும் பாலத்தைக் கடந்தன!

கிரேக்கப் படையும் பாரசீகப் படையும் இஸ்ஸஸ் என்ற இடத்தில் கி. மு. 333ம் வருடம் அக்டோபர் மாதம் சந்தித்தன. பாரசீகப் படை, டேரியஸ் மன்னனே நேரில் தலைமை தாங்கியபோதிலும், ஆரவாரம் செய்வதில் வல்ல ஒரு கும்பலாகவே நடந்து கொண்டது. இந்தக் கும்பல், ஒழுங்காக அணிவகுத்துக் கொண்டு போர் செய்வதில் வல்ல கிரேக்கப்படை முன் நின்று எப்படிச் சமாளிக்க முடியும்? வெகு சீக்கிரத்தில் பின் வாங்கிக் கொண்டு விட்டது. இப்படிப் பின் வாங்கிக் கொண்டு சென்ற படையை அலெக்ஸாந்தர் சிறிது தூரம் துரத்திச் சென்றான். இதன் விளைவாக ஒரு லட்சத்துப் பதினாயிரம் பாரசீகர்கள் பிணமாயினர். கிரேக்கர்களிலோ, நானூற்று ஐம்பது பேரே உயிர் இழந்தனர். டேரியஸ் மன்னன் தன் தாயாரையும், மனைவியையும், இரண்டு பெண்களையும் விட்டு விட்டுத் தப்பிச் சென்று விட்டான். இவர்கள் தங்கள் அந்தப்புரத்தில் என்றும் போல் நிம்மதியாக வாழ அலெக்ஸாந்தர் பெருந்தன்மையுடன் வழி செய்தான்.

இஸ்ஸஸ் போருக்குப் பிறகு அலெக்ஸாந்தர், பாபிலோன், எகிப்து முதலிய பிரதேசங்களுக்குச் சென்று, தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி விட்டு, திரும்பவும் பாரசீக ராஜ்யத்தின் மற்றொரு பகுதிக்கு வந்தான். அப்பொழுது டேரியஸ் மன்னன், தன் தாயார் முதலியவர்கள் தன்னிடம் வந்துசேரவேண்டும் என்ற ஆவல் மிகுதியினால் ஒரு பெருந்தொகையையும், தன் ராஜ்யத்தின் ஒரு பகுதியையும் கொடுப்பதாகவும், தன் பெண்களில் ஒருத்தியை விவாகம் செய்து கொடுப்பதாகவும் அலெக்ஸாந்தருக்குச் சமாதானத் தூது விடுத்தான். ஆனால் அலெக்ஸாந்தர் இதை ஏற்க மறுத்து, எப்பொழுது இஸ்ஸஸ் போர்க்களத்தில் தான் வெற்றி கொண்டானோ அப்பொழுதே பாரசீக சாம்ராஜ்யம் முழுவதும் தன் சுவாதீனமாகி விட்டது என்றும், டேரியஸின் பெண்களில் ஒருத்தியை விவாகம் செய்து கொள்வதென்பது தன் விருப்பத்தைப் பொறுத்த விஷயம் என்றும் பதில் சொல்லி அனுப்பி விட்டான்.

இதற்குப் பிறகு நடைபெற்ற இரண்டு மூன்று போர்களின் விளைவாக, பாரசீக சாம்ராஜ்யம் முழுவதும் அலெக்ஸாந்தர் வசமாயிற்று. கோடிக்கணக்கான மதிப்புள்ள பொருள்கள் இவன் வசமாயின. டேரியஸ் மன்னனும், தனது தளகர்த்தர்களில் ஒருவனால் கி. மு. 330ம் வருஷம் ஜுலை மாதம் குத்திக் கொல்லப்பட்டு இறந்து போனான்.

அலெக்ஸாந்தர் பாரசீகத்திலிருந்து தெற்கு நோக்கி வந்து, துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம் முதலிய பிரதேசங்களில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டு கி. மு. 327ம் வருஷம் இந்தியாவுக்குள் நுழைந்தான். பஞ்ச நதிகள் பாயும் பிரதேசத்திலுள்ள சில ராஜ்யங்கள் முதலில் இவனுக்கு எதிர்ப்புக் காட்டின; பிறகு பணிந்து விட்டன.

ஆனால் ஜீலம் நதிக்கும் சீனாப் நதிக்கும் இடையில் உள்ள ஒரு ராஜ்யம் மட்டும் பணிய மறுத்தது. இதன் அரசன்தான் சரித்திரப் பிரசித்தி பெற்ற போரஸ் என்பவன்.

போரஸ் மன்னனுடன் நடத்திய போரில் கிரேக்கர்கள் சுலபமாக வெற்றி கொண்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது. கடுமையான போருக்குப் பிறகுதான் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. இதனால் மிகவும் களைத்துப் போயிருந்தார்கள். பலர் காயமடைந்தும் நோய்வாய்ப்பட்டும் கிடந்தனர். தவிர, எத்தனையோ மலைகளையும், ஆறுகளையும், பாலைவனங்களையும் கடந்து வந்திருப்பதையும், தங்கள் தாய்நாட்டுக்கு நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருப்பதையும், தங்களோடு வந்தவர்களில் நூற்றுக்கணக்கான பேர்கள் பாரத நாட்டின் மண்ணுக்கு இரையாகி விட்டிருப்பதையும் எண்ணிப் பார்த்தார்கள்; தாய்நாட்டுக்குத் திரும்பிவிடவேண்டும் என்று ஆவல் கொண்டு விட்டார்கள்.

இந்த நிலையில் அலெக்ஸாந்தர், தெற்கு நோக்கிக் கங்கை நதி பாயும் சமவெளிப் பிரதேசத்துக்குப் படை கொண்டு சென்று, வெற்றி காண முனைந்தான். அப்படி வெற்றி கண்டு விட்டால், உலகத்தின் எல்லையை, அதாவது மனித சஞ்சாரமுள்ள தூர தேசத்தின் எல்லையை அடைந்து விட்டதான ஒரு திருப்தி தனக்கு ஏற்பட்டுவிடும் என்று கருதினான். படை வீரர்களுக்கு இது தெரிந்தது. மேற்கொண்டு செல்வது தங்களால் இயலாத காரியம் என்று முணுமுணுக்கத் தொடங்கினார்கள். இது கேட்ட அலெக்ஸாந்தர் கோபங் கொண்டான்.

இந்தச் சமயத்தில் படைவீரர்களில் ஒருவன் துணிந்து முன் வந்து தங்கள் கஷ்டங்களைப் பற்றிப் பின்வருமாறு பேசலுற்றான்:

''ரத்தம் சுண்டிப் போயிருக்கிற எங்கள் தேகத்தைப் பாருங்கள்; எத்தனை புண்கள்! எத்தனை தழும்புகள்! எங்களுடைய ஆயுதங்கள் முனை மழுங்கிப் போய்விட்டன. எங்கள் கவசங்கள் உருக் குலைந்து போய்விட்டன. சரியான உடை இல்லாத காரணத்தால் பாரசீகர்களுடைய உடைகளை அணிந்துகொண்டிருக்கிறோம். எங்களிலே யாருக்காவது குதிரை இருக்கிறதா பாருங்கள். உலகத்தை வெற்றி கொண்டு விட்டிருக்கிறோம். ஆனால் நமக்கென்று ஒன்றுமில்லாமல் எல்லாவற்றையும் இழந்து விட்டிருக்கிறோம்!''

வெற்றி காண விழைந்து நின்ற அலெக்ஸாந்தர் இந்த வாசகங்களைக் கேட்ட பிறகு தன் படை வீரர்களால் வெற்றி கொள்ளப்பட்ட அலெக்ஸாந்தராகிவிட்டான். ஊர் திரும்பிச் செல்லலாமென்று படையினருக்கு உத்தரவு கொடுத்துவிட்டான். சொல்ல வேண்டுமா அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை!

அலெக்ஸாந்தர் கொடுத்த உத்தரவுக்கிணங்க, கிரேக்கப் படைகள் மூன்று பகுதிகளாகப் பிரிந்து கொண்டு தங்கள் தாய்நாடு நோக்கித் திரும்பின. வழியில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தன. பாரசீகத்தைக் கடந்து சென்றபோது, ஒருசிலரே உயிர் பிழைத்திருந்தனர். இவர்களும் உடுக்கப் போதிய உடை இல்லாமல் பிச்சைக்காரர்களைப் போல் காட்சி யளித்தனர். இடைவிடாத போராட்டத்தினாலும், நீண்ட நடை பயணத்தின் விளைவாகவும் அலெக்ஸாந்தருக்கும் உடல் நலிவு ஏற்பட்டது. நாளுக்கு நாள் பலவீனப்பட்டுக்கொண்டு வந்தான். பத்து நாட்கள் இடைவிடாத ஜுரம் அடித்தது. கடைசியில் கி. மு. 323-ம் வருஷம் ஜூன் மாதம் பதின்மூன்றாம் தேதி வழியிலேயே பாபிலோனியாவில் இறந்தான்.

அலெக்ஸாந்தர் அழித்த நகரங்களைப் போலவே ஆக்கிய நகரங்களும் பல. சுமார் எழுபதுக்கு மேற்பட்ட நகரங்கள் இவனால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. இவற்றுள் குறிப்பாகச் சொல்லக் கூடியது ஆப்பிரிக்காக் கண்டத்தின் வட கோடியில் இருக்கும் அலெக்ஸாந்திரியா துறைமுகப் பட்டினம். இன்றளவும் வியாபாரச் செழுமையுடைய பட்டினமாக இருந்து வருகிறது.

அரிஸ்டாட்டல் என்ற மகா மேதையிடம் இவன் பெற்ற பயிற்சி, மனிதப் பண்புகளை அடிக்கடி இவனுக்கு நினைவூட்டிக்கொண்டு வந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

டேரியஸ் மன்னனுடைய குடும்பத்தினரை எவ்வளவு கண்ணியமாக நடத்தினான்! தன் நண்பன் ஒருவனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், ''டேரியஸின் மனைவியை நான் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை; பார்க்க வேண்டுமென்ற ஆசையும் எனக்கு உண்டாகவில்லை. அது மட்டுமன்று; அவளுடைய அழகைப் பற்றி என் முன்னிலையில் யாரும் பேசக் கூடாது என்று கட்டளையிட்டிருந்தேன்'' என்று குறிப்பிடுகிறான்.

அலெக்ஸாந்தர் சுத்த வீரன். தன் சத்துருக்களின் பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள மாட்டான். அவர்கள் மீது வெற்றி காணவும் முற்பட மாட்டான். ஒரு சமயம் இவனுடைய நண்பன் ஒருவன் டேரியஸ் மன்னனுடைய படைகளை இரவு நேரத்தில் தாக்கினால் சுலபமாக வெற்றி காணலாமென்று ஆலோசனை கூறினான். இதற்கு அலெக்ஸாந்தர், 'இது கள்ளத்தனம். கள்ளத்தனமாகச் சத்துருக்களைத் தாக்கி வெற்றி காண்பது உண்மையான வெற்றியாகாது' என்று கூறி, அந்த நண்பனை வெட்கப்படும்படி செய்து விட்டான்.

அலெக்ஸாந்தர் நல்ல இலக்கிய ரசிகன். கவிஞர்களையும், கலைஞர்களையும் போற்றி வந்தான். போர்கள் நடத்தி வந்த காலங்களில் கூடப் பாசறையில் இவனுடைய படுக்கையின் தலையணையின் கீழ் கிரேக்க மகா காவியமாகிய இலியத் பிரதி ஒன்று இருந்துகொண்டிருக்கும். சமயம் வாய்க்கும்போது அதை எடுத்துப் படித்து மன அமைதி பெறுவான்.


பாரசீகப் போர்களிலொன்றில் டேரியஸ் மன்னன் விட்டுப் போன விலையுயர்ந்த பொருள்கள் பல கிடந்தன. இவற்றுள் அழகான தங்கக் கிண்ணம் ஒன்றிருந்தது. இதனைப் படைத்தலைவன் ஒருவன் அலெக்ஸாந்தர் முன்னிலையில் கொண்டு வந்து வைத்தான். 'இவ்வளவு அழகான கிண்ணத்தில் என்ன வைக்கலாம்?' என்று அலெக்ஸாந்தர் சுற்றியிருந்த நண்பர்களைக் கேட்டான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்தைத் தெரிவித்தார்கள். அலெக்ஸாந்தர் இவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, ''இந்த அழகான கிண்ணத்தில் வைக்கத் தகுந்த பெருமையுடையது இலியத் மகா காவியம் ஒன்றுதான்'' என்று சொல்லி, அதில் அந்தக் காவியத்தின் பிரதியொன்றை வைக்கச் செய்தான்.

அலெக்ஸாந்தர் கி. மு. 356ஆம் வருஷம் பிறந்தான். 336ஆம் வருஷம் அரச பதவியில் அமர்ந்தான். சுமார் நூற்றைம்பது மாதங்களுக்கு மேலாக அந்தப் பதவி இவனுக்கு உரியதாக இருந்தது. இவற்றுள் சுமார் நூற்று முப்பது மாதங்களுக்கு மேல் நடை பயணத்திலும் போர்க்களங்களிலும் கழித்து விட்டான். கிரீஸிலிருந்து புறப்பட்டு இந்தியாவின் வடக்குப் பகுதி வரை வந்து திரும்பி, பாபிலோன் போந்து அங்கு கி. மு. 323 ஆம் வருஷம் இறந்துபோனதுவரை கணக்கிட்டுப் பார்த்தால் குறைந்த பட்சம் மூவாயிரம் மைல்களாவது இவன் நடந்திருப்பான் என்று துணிந்து கூறலாம்.

மாவீரன் அலெக்ஸாந்தர் இவ்விதம் அட்டையை அலங்கரிக்கச் செய்திருக்கிறார், ஓவியக் கலைஞர் மணியம்.

பாமினிப் பாவை

கௌசிகன்



2. கனவுகள் ஆயிரம்

வலிமை மிக்க இரண்டு கப்பல்களை நடத்திச் சென்ற வாலிபன் பூசப்கான் இப்போது தன்னந் தனியே சிதைந்த கட்டுமரத்தில் சிதைந்த உள்ளத்தவனுக் கடலில் மிதந்து கொண்டிருந்தான்— விநோதமான சூழ்நிலையில். புயற்காற்றையும் பொங்கி எழும் பயங்கரமான அலைகளையும் எதிர்த்துப் பெரிய மரக்கலத்தையே நடத்திச் செல்லும் ஆற்றல் படைத்த தன்னை இந்த மிதப்பு தன் இச்சைப்படி இழுத்துச் செல்வதை எண்ணிய போது அவனிடமிருந்து விரக்தி நிறைந்த சிரிப்புத்தான் வெடித்தது. தன்னைப் பிணைத்துள்ள அந்த இரும்புச் சங்கிலியிலிருந்து விடுதலை பெறுவது அவனுக்கொன்றும் பெரிய காரியமல்ல. ஆனால் அதிலிருந்து விடுவித்துக் கொண்ட பின் அவன் போவது எங்கே ?


ஆறு மாதங்களுக்கு முன்பு எத்தனையோ ஆசைக் கனவுகளோடு கிளம்பியவன்தான் அவன். கடலிலே மகத்தான சாகஸங்கள் புரிந்து மன்னர் சுலேமானின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாகி, துருக்கி மக்களின் மதிப்புக்குகந்த பிரஜையாக மகிமையோடு வாழ வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டிருந்தவனுக்கு விதி எத்தகைய முடிவை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது? இரண்டு கப்பல்களை இழந்து விட்டுத் தோல்வியின் சுமையால் தொங்கிய தலையுடன் தாய் நாட்டுக்குத் திரும்புவதை அவனால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. அந்தச் சிதைந்த கட்டுமரத்தில் அவனைச் செயலற்றவனாக்கி உட்கார்த்தி வைத்திருந்ததற்கு அவனது அந்தத் தாபமும்கூட ஒரு காரணம்தான்.

பகலில் தகிக்கும் வெய்யிலின் உக்கிரம் தாங்க முடியாது. மிதப்பில் படுத்தபடி கடல் நீரைக் கைகளால் அள்ளி முகத்திலும் மார்பிலும் உடலிலும் ஊற்றிக் கொள்ளுவான். இரவிலோ சகிக்க முடியாத குளிர். காலூன்றி நிற்கும் இடமெல்லாமோ கடல் நீரில் கசிவு. நடுக்கும் குளிரிலே ஓய்ந்த உடலை எப்படி எங்கே முடக்கிக் கொள்ளுவது? — ஜீவாதாரமான அந்த இரண்டு பிப்பாய்களையும் அருகருகே இழுத்துப் போட்டு அவற்றின் மீது ஏதோ ஒரு விதமாகச் சுருண்டபடி, இருள் விலகாதா, கதகதப்பான சூரிய ஒளியைக் காண மாட்டோமா என்று காத்துக் கிடப்பான். பொழுது புலர்ந்து வெயில் வளர்ந்தாலோ வேறு விதமான அவஸ்தை. இதே நிலை இன்னும் எத்தனை நாளைக்கோ? உடலில் உயிரும் உணர்வுகளும் உள்ளவரை இது நீடிக்குமானால்....? அது போகட்டும், இந்த உடலில் உயிரும் உணர்வுகளும் இன்னும் எவ்வளவு காலம்தான் நீடிக்கும்....?

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து கிடந்த கரு நீலக் கடலை நிராசையோடு பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் பூசப்கான். என்றாவது ஒரு நாள் தன் மிதப்பு ஏதாவது ஒரு நிலப் பகுதியில் போய் ஒதுங்கும். நமக்கும் விடிவு காலம் ஏற்படும் என்ற நம்பிக்கை இன்னமும் அவன் உள்ளத்தின் ஓரத்தில் மினுக்கிட்டுக் கொண்டுதான் இருந்தது. அந்த நாள் வரை எப்படியும் வாழ்ந்தாக வேண்டும் என்ற உயிர் ஆசையால் உணவு உட்கொள்ளுவதைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தாங்க முடியாத பசி குடலைச் சுருட்டிப் பிடிக்கும் வேளையில் மட்டுமே ஒரு துண்டு ரொட்டியை எடுத்துச் சுவைப்பான். அதேபோல் நெஞ்சகம் வாயும் உலர்ந்து, உதடுகள் காய்ந்து நீருக்காகத் தவிக்கும் போது மட்டுமே அந்தச் சுத்த நீரை ஒரு மடக்கு எடுத்துக் குடிப்பான். உணவும் நீரும் இல்லாமல் பரிதாபமாக அந்த நடுக் கடலில் உயிரிழப்பதை அவன் விரும்பவில்லை. 'வாழ்ந்தே தீருவேன்' என்ற வைராக்கியம் அவன் உடலில் உயிரை மட்டும் தான் வைத்திருந்தது. அவயவங்களை அசைக்கவும் முடியாததொரு ஓய்ந்த நிலை அவனை ஆட்கொள்ளலாயிற்று. உள்ளத்திலே உணர்வுகள் ஓடினாலும் அவற்றைச் செயலாக்க உடலிலே தெம்பில்லை. மயங்கி நிலைவிழுந்தான்.

ஃ ஃ ஃ

பசேலென்ற புல்வெளியின் நடுவே ஒரு பூஞ்சோலை. அதிலே ஓர் அழகான மண்டபம். அதன் தூண்களிலே வண்ண வண்ண



மலர்க் கொடிகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. மண்டபத்தைச் சுற்றிலும் நீரூற்றுக்கள். அவற்றிலிருந்து பொங்கும் தண்ணென்ற நீர் மண்டபத்தின் மேலாக எழும்பிப் பூப்பூவாக அதன் மீது சொரிந்த வண்ணம் இருக்கிறது. மண்டபத்திலே ஓர் ஊஞ்சல். அதிலே உயர்ந்த வேலைப்பாடமைந்த திண்டுகள்....

அவற்றில் சொகுசாகச் சாய்ந்தபடி உட்கார்ந்திருக்கிறான் யூசப்கான். அவன் தோற்றம்தான் எத்தனை அழகாக, கம்பீரமாக இருக்கிறது! அவன் அணிந்துள்ள உடைகளின் அழகோ கண்களைப் பறிக்கும் வண்ணம் மின்னுகின்றன.

அவன் முன்னே ஒரு பெரிய தட்டில் தளதளவென்று அன்று பறித்த பழ வகைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. அந்த ஊஞ்சலின் அருகே அழகே அவதாரமான ஒரு கட்டழகி ஒய்யாரமாக நின்றபடி தங்கக் கோப்பையில் மதுவை நிறைத்து அவன் முன் நீட்டுகிறாள். அதை வாங்கிக் கொள்ளாமல் அவன் அவள் மதிவதனத்தைத் தாவிப் பிடிக்கப் போகிறான். சலங்கை ஒலிச் சிரிப்பை உதிர்த்த அந்த முத்துப் பல் மோகினியாள் தன் கருந் திராட்சை விழிகளை ஒயிலாகச் சுழற்றியபடி

ஒதுங்கிக் கொண்டு விடுகிறாள். இதனால் யூசப்கான் நிலை தடுமாறிப் பழத் தட்டில் கையூன்றத் திராட்சைக் குலைகள் நசுங்கி அதன் பழச் சாறு அவன் முகத்தில் தெறிக்கிறது. ஒதுங்கிய சிங்காரி ஓடி வந்து யூசப்கானைத் தாவிப் பிடித்துக் கொள்ளுகிறாள்.

யூசப்கான் கண் திறந்த போது தன்னை இரண்டு மென் கரங்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக இரண்டு முரட்டுக் கரங்களின் பிடிப்பில் தான் இருப்பதை உணர்ந்தான். திராட்சைப் பழச் சாற்றுக்குப் பதில் அவன் முகத்தில் யாரோ தண்ணீரை அடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த இனிய கனவிலிருந்து விடுபட விரும்பாதவனைப்போல அவன் குருட்டுத்தனமாகத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தான். முரட்டுக் கரங்களின் குலுக்கலில் அந்தச் சுகானுபவம் கழன்று விழவே மெள்ளக் கண் விழித்துப் பார்த்தான் யூசப். அந்தச் சூழல் அவன் விழிகளை விசாலமாக்கியது.

இப்போது அவன் அந்த மோசமான கட்டுமானத்தில் மிதந்து கொண்டிருக்கவில்லை. ஒரு பெரிய கப்பலின் மேல் தளத்தில் இருந்தான். அவனைச் சுற்றி இப்போது வெறும் தனிமையும் தண்ணீரும் மட்டும் இல்லை. மனிதர்கள் சூழ்ந்து நின்று கொண்டிருந்தார்கள். நினைவிழந்து மயங்கிக் கிடந்த யூசப்கானுக்கு முதலில் தன்னைச் சுற்றி எல்லாம் மற்றொரு கனவு போலத் தோன்றின. மெல்ல மெல்லக் கனவுப் படலங்கள் கரைந்து நனவுகளாயின. தன்னைச் சுற்றி இருப்பவர்கள் கனவுலகத்தவர்களல்லர் நிலவுலகத்து மனிதர்கள்தாம் என்பதைப் புரிந்து கொண்டான். அவர்களுடைய பேச்சைக் கவனித்ததிலிருந்து, அவர்கள் இந்த நில உலகத்துப் போர்ச்சுகலைச் சேர்ந்த வியாபாரிகள் என்பதையும் புரிந்து கொண்டான். அந்தப் போர்ச்சுகீசியர்கள் பாரதம் என்ற தொன்மையும் அற்புதங்களும் வாய்ந்த நாட்டை நோக்கிச் செல்கிறார்கள் எனத் தெரிந்து கொண்டான். அந்தக் கப்பலில் தான் இடம் பெற்றதெப்படி என்பதையும் மெல்ல மெல்ல அறிந்துகொண்டான். இந்தியா செல்லும் மார்க்கத்தில் தன்னை அந்தப் போர்ச்சுகீசிய வியாபாரக் கப்பல் கண்டு மீட்டுக் கொண்டு வந்திருக்கிறது என்று அறிந்து கொள்ள அவனுக்கு வெகுநேரமாக வில்லை.

அவன் உடையையும் ஈட்டியில் கட்டியிருந்த பிறையைக் குறிப்பிட்ட துணியையும் பார்த்ததுமே அவனை ஒரு மாதிரியாக எடைபோட்டு விட்டனர் போர்ச்சுகீசியர். கடலில் பிரயாணம் செய்வோர் அநுசரிக்க வேண்டிய கடமைப்படி அவனைக் காப்பாற்றினார்களே தவிர அவனிடம் அவர்களுக்குக் கருணை பிறக்கவில்லை. கடல் கொள்ளைக்காரர்களான மூர் என்ற இனத்தைச் சேர்ந்தவன் அவன் என்ற முடிவுக்கு வந்ததே அதற்குக் காரணம். இதையெல்லாம் யூசப்கான் யூகத்தால் அறிந்தான்.

யூசப்கானின் பசியையும் களைப்பையும் போக்கியதும் அவனைப் பற்றிய விவரங்களை விசாரித்தறிந்தார்கள். ஆனால் அது விசேஷமான மாறுதல் எதையும் அவர்களிடம் உண்டாக்கி விடவில்லை. துருக்கியும் அவர்களுடைய பொது எதிரிதானே? ஆகவே யூசப்கானைத் தங்கள் கைதியாகவே பாவிக்கத் தொடங்கினார்கள்.

கட்டுமரத்திலிருந்து கப்பலுக்கு வந்திருந்தான் யூசப்கான். பசிக்கு உணவும் படுக்கப் பாதுகாப்பான இடமும் கிடைத்தது என்னவோ உண்மைதான். ஆனால் தன்மானம் பறிபோய் விட்டது. போர்ச்சுகீசியர் யூசப்கானை மிகக் கேவலமாக நடத்தினர்.

கொலை கொள்ளை போன்ற பயங்கரமான குற்றம் செய்து தண்டனை பெற்ற கைதிகளை அந்தக் காலத்தில் அந்நிய நாடுகளுக்குச் செல்லும் கப்பலில் அழைத்து வருவதுண்டு. கப்பல் தளத்தைக் கழுவுதல், மூட்டை தூக்குதல் போன்ற மட்டமான காரியங்களுக்கே இக்கைதிகளைப் பயன்படுத்துவார்கள். கொள்ளைக்காரர்களால் கப்பல் தாக்கப்படும் போது இக்கைதிகள் போர் வீரர்களாக மாற்றப்படுவதுண்டு. இத்தகைய கைதிகளைக் கப்பலின் அடித் தளத்திலுள்ள ஓர் இருண்ட மோசமான பகுதியில் அடைத்து வைத்திருப்பார்கள். அவர்களோடு யூசப்கானையும் கொண்டு போய்த் தள்ளினார்கள். அந்தக் கைதிகள்கூட அவன் துருக்கியன் என்ற காரணத்துக்காக அவனுடன் சகஜமாகப் பழகவில்லை. ஆனால் யூசப்கான் எதையும் பொருட்படுத்தாமல் ஒரு மூலையில் போய் முடங்கிக் கொண்டான்.


நாட்கள்நகர்ந்தன. துன்பங்கள் தொடர்ந்தன எனினும், அந்தக் கப்பல் இந்தியாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்ற ஒன்றிலேயே அந்தத் துன்ப வாழ்விலும் யூசப்கானின் உள்ளம் உவகை கொண்டது. இந்தியாவைப் பற்றி அவன் எத்தனையோ அதிசயமான செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறான். செல்வம் கொழிக்கும் தேசம் என்று அதை அவன் நாட்டினர் வருணித்திருக்கிறார்கள். துருக்கியிலிருந்து சென்ற பல வீரர்கள் இந்திய மாமன்னர்களிடம் மகிமையோடு வாழுவதைப் பற்றியும் அவன் நன்கு அறிந்தவன்தான்.

இந்திய நாட்டைக் காணப் போகிறோம் என்ற நினைப்பே அவனுக்குப் புதிய உற்சாகத்தையும் தெம்பையும் கொடுத்தது. தன் கனவுகளைப் பாழாக்கித் தன்னை இந்த அடிமை நிலைக்கு ஆளாக்கியதற்காக விதியையும் ஆண்டவனையும் முன்பு நொந்து கொண்டிருந்தவன் அதற்காக இப்போது ஆண்டவனிடம் மன்னிப்புக் கோரலானான். நாகரிகத்தில் மேம்பட்ட அதிசய நாடான இந்தியாவுக்குத் தன்னைக் கூட்டி வருவதற்கே ஆண்டவன் இத்தனையும் திட்டமிட்டு நடத்தி இருப்பதாக நம்பலானான் யூசப்கான். போர்ச்சுகீசியரின் உதாசீனங்களையும் கொடுமைகளையும்கூட இப்போது பொறுமையோடு சகித்துக் கொண்டான். கப்பல் இந்தியாவில் நங்கூரம் பாய்ச்சியதும் எப்படியாவது இந்தப் போர்ச்சுகீசிய அரக்கர்களிடமிருந்து தப்பிச் சென்று விட வேண்டும் என்றும் உறுதி செய்து கொண்டான் அவன்.

அந்த நாளும் வந்தது!

போர்ச்சுகீசியக் கப்பல் இந்திய நாட்டின் மேற்குக் கரைத் துறைமுகமான கோவாவில்


குழந்தைகளுக்கான அமுல் பாலுணவு
கறந்த பாலிலிருந்து தயாரிக்கப்பட்டது
உடல்நலம் தருவது
கறந்த பால்!
இத்தகைய பாலிலிருந்து
தான் அமுல் பாலுணவு
தயாரிக்கப்படுகிறது. இது
ஆசியாவிலேயே மிகப்
பெரியதும், மிகவும் நவீன
சாதனங்களைக்கொண்டதுமான
ஆனந்திலுள்ள அமுல் பால்
பண்ணையில் தயாரிக்கப்படுகிறது.
எளிதில் ஜீரணிக்கத்தக்க
வைட்டமின்களும் தாதுப் பொருட்
களும் கலக்கப்பட்டுள்ள பால்தான்
அமுல் பாலுணவு. ஆரோக்கியத்
திற்கும் வளர்ச்சிக்கும் மிகச் சிறந்தது.
ஆயிரக்கணக்கான குழந்தைகள்
அமுல் அருந்தி செழிப்புடனிருப்பதில்
ஆச்சரியமே இல்லை.







நங்கூரம் பாய்ச்சி நின்றது. மறு நாளே அங்கிருந்து கிளம்பப் போவதால் யாரும் கப்பலிலிருந்து கரைக்குச் செல்லக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்து விட்டான் கப்பல் தலைவன். ஆகவே பூசப்கான் கப்பலிலிருந்தபடியே செல்வம் கொழிக்கும் இந்திய நாட்டின் துறைமுகத்தைப் பார்த்தான். பல கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன. போர்ச்சுகீசியரின் செல்வாக்கு மிகுந்திருந்தது அந்தத் துறைமுகத்தில். கரையில் குதிரைகள் பெரும் அளவில் நிறுத்தப்பட்டிருந்தன. அத்தனையும் பூசப்கானுக்குப் பழக்கமான குதிரைகள். அதாவது அவனது அண்டை நாடுகளான பாரசீகம், அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட உயர்ந்த ஜாதிக் குதிரைகள்.

''இத்தனை குதிரைகளையும் இங்கு யாருக்காக இறக்குமதி செய்கிறீர்கள்?'' என்று கேட்டான் பூசப்கான்.

''இங்கிருந்து நூறு கல் தொலைவில் பிஸ்நாகா என்ற பலம் பொருந்திய ஒரு இந்து ராஜ்யம் இருக்கிறது. அதன் படைகளுக்குத்தான் இந்தக் குதிரைகள் எல்லாம் போகின்றன'' என்றான் ஒரு போர்ச்சுகீசிய மாலுமி.

அவன் 'பிஸ்நாகா' என்று குறிப்பிட்டது விஜயநகர சாம்ராஜ்யத்தைத்தான். அந்தத் துறைமுகத்தில் வந்திறங்கிய குதிரைகள் அத்தனையையும் விஜய நகர மன்னரே வாங்கிக் கொள்ளுவதாகவும் அவன் குறிப்பிட்டான். அவரிடம் உள்ள குதிரைப் படையின் அளவை அவன் விவரித்த போது பூசப்கான் வியப்பினால் விம்மிதமடைந்து போனான்.

'பிஸ் நாகா' என்ற அந்தப் புகழ்பெற்ற ராஜ்யத்தைக் காணும் வாய்ப்புத் தனக்குக் கிடைக்குமானால் என்ற கற்பனையில் மூழ்கியபடி கப்பலின் அடித்தளத்தில் பூசப்கான் கண் மூடிக் கனவு கண்டு கொண்டிருக்கும் போதே நங்கூரத்தை உயர்த்தினார்கள். கப்பல் நகரத் தொடங்கியது. போர்ச்சுகீசியர்களிடமிருந்து தப்பிக்கும் எண்ணம் பலிக்கவில்லை.

அடுத்து கப்பல் நங்கூரமிட்டது கேரளக் கடற்கரையின் துறைமுகத்தில்தான். சரக்குகளைச் சேகரித்துக் கொள்ளக் கப்பல் அங்கு நிரந்தரமாகச் சில நாட்கள் தங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. கைதிகள் யாரையும் தன்னிச்சைப்படி விட்டு விடவில்லை போர்ச்சுகீசியர். ஏனெனில், அவர்களின் உழைப்பும் உதவியும் அவர்களுக்கு அவசியமாக இருந்தன. ஆகவே பலத்த காவலுடனேயே கைதிகளைக் கரைக்கு அழைத்துப் போய் வேலை வாங்கினார்கள்.

பூசப்கான் இந்திய மண்ணில் இறங்கினான். திரும்பிய பக்கமெல்லாம் பசுமை கொழிக்கும் வயல்களைக் கண்டு வியந்தான். தென்னை மரச் சோலைகளின் அழகைக் கண்டு ஆனந்தம் கொண்டான். கருப்பு நிறத்தவர்களானாலும் உள்ளத்தில் வெண்மை கொண்ட இந்திய மக்கள் சுறுசுறுப்பாகத் தொழில் புரிவதைக் கண்டு மகிழ்ந்து போனான். ஆனால் அவனை ஓரிடத்திலும் நிற்க விடாமல் போர்ச்சுகீசியப் பிசாசுகள் சாட்டைகொண்டு அடித்து விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தன.

போர்ச்சுகீசியரின் வருகைக்கு முன்பே இந்தியக் கடல்களில் வாணிபம் நடத்தியவர்கள் முகமதியர்கள். போர்ச்சுகீசியரின் வரவினால் அவர்களுடைய வியாபாரம் பாதிக்கப்பட்டது. ஆகவே பரஸ்பரம் அவர்களிடையே விரோத மனப்பான்மை ஏற்பட்டது. கள்ளிக்கோட்டை மன்னர் ஜாமரினின் அன்புக்குப் பாத்திரமாகி விருந்தார்கள், நேச பாவங்கொண்ட முகமதியர். அகம்பாவமும் அரக்க மனமும் கொண்ட புதிய வியாபாரிகளான போர்ச்சுகீசியரைப் பொது மக்கள் வெறுத்தனர். ஆனால் சக்தி வாய்ந்த அவர்களுடைய பீரங்கிகளின் முன்னால் எந்த எதிர்ப்பும் எடுபடவில்லை. போர்ச்சுகீசியரின் கை ஓங்கலாயிற்று. அவர்களிடம் ஏற்பட்டிருந்த பயத்தின் காரணமாகவே மக்கள் அவர்களுக்குத் தேவையான பண்டங்களை வியாபாரம் செய்யக் கொண்டு வந்து கொடுத்தார்கள். முகமதியர்களிடமோ நேசபாவத்துடன் பழகி வியாபாரம் செய்தார்கள். இந்த நிலை இந்திய வியாபாரிகளைப் போர்ச்சுகீசியர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கச் செய்தது.

கள்ளிக் கோட்டைத் துறைமுகத்துக்குப் போர்ச்சுகீசியக் கப்பல் வந்து சில நாட்களாகி விட்டன. ஒரு நாள் கப்பலின் அருகே நாட்டுப் படகுகளில் கேரள மீனவர் சிலர்

மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்தியர்களை நம்பாமல் அவர்கள் நல்லெண்ணத்தில் சந்தேகமும் அச்சமும் கொண்டிருந்த போர்ச்சுகீசியர் கப்பலில் இருந்தவாறே அவர்கள் அங்கு மீன் பிடிக்கக் கூடாது என்றும் உடனே போய்விட வேண்டும் என்றும் எச்சரித்தனர்.

''எங்கள் கடலில் நாங்கள் மீன் பிடிக்கக் கூடாது என்று சொல்ல நீங்கள் யார்?'' என்று கேட்டார்கள் அந்த அப்பாவி மீனவர்கள்.

''கடலில் ஆட்சி செலுத்தும் அதிகாரம் பெற்றவர்கள் நாங்கள். உடனே போய் விடுங்கள்'' என்று ஆணவத்துடன் துப்பாக்கியை நீட்டினார்கள் போர்ச்சுகீசியர்.

தம் சொந்த நாட்டில் வியாபாரம் செய்ய வந்து புகுந்து கொண்டிருக்கும் அந்நியன் தங்கள் மீது செலுத்தும் அதிகாரத்தைக் கண்டு ஆத்திரம் கொண்டாலும் அதை அடக்கிக் கொண்டு ஏலேலோப் பாட்டுப் பாடியபடி, வேண்டுமென்றே வலையை இன்னும் பரவலாக வீசினார்கள் அந்த வலைஞர்கள். தங்களை அவமதித்து ஏளனம் செய்வதாகப் புரிந்து கொண்ட போர்ச்சுகீசியரின் துப்பாக்கிகள் அனலைக் கக்கின. இரண்டு இந்திய நிரபராதிகளின் ரத்தம் கடல் நீரைச் சிவப்பாக்கியது.

இவ்வளவையும் கப்பலின் மேல் தளத்தில் ஏதோ வேலையில் ஈடுபட்டபடியே கவனித்துக் கொண்டிருந்த யூசப்கானின் உள்ளம் கொதித்தது. அநியாயத்தைக் கண்டு ஆத்திரம் அடைந்த அவன் ஒரு போர்ச்சுகீசிய வெறியன் மீது பாய்ந்து அவன் துப்பாக்கியைப் பறித்துக் கடலில் வீசினான். அடுத்த விநாடியே யூசப்கானை நாலைந்து போர்ச்சுகீசிய வெறியர்கள் வளைத்துக்கொண்டார்கள். கைதி ஒழுங்கீனமாக நடந்து கொண்ட குற்றத்துக்காக இருபது கசையடிகளும் இரண்டு நாள் பட்டினியும் தண்டனை விதிக்கப்பட்டது. வெற்றுடம்பு ரத்த விளாறாகியபின் கப்பலின் இருட்டறையில் கொண்டு போய்த் தள்ளினார்கள் யூசப்கானை.

இது நடந்து ஒரு வாரம் ஆயிற்று. கப்பலில் ஏற்றுவதற்காக ஏலம், மிளகு, கிராம்பு முதலிய பொருள்கள் படகுகளில் வந்து கொண்டிருந்தன. ஓர் இந்திய வியாபாரியின் இரண்டு படகுகளிலிருந்து மிளகு மூட்டைகளை யூசப்கான் கப்பலில் ஏற்றிக் கொண்டிருந்தான். மூட்டைகளை யெல்லாம் ஏற்றியானதும் அந்த வியாபாரி கொண்டு வந்த பொருளுக்கு உரிய தொகையைக் கணக்குப் பார்த்துக் கொடுக்கும் போது ஏதோ சச்சரவு மூண்டது. நூறு மூட்டைகள்தான் என்றான் அதிகாரி. வியாபாரியோ தான் நூற்றைம்பது மூட்டைகள் மிளகைக் கொண்டு வந்ததாகக் கூறி அதற்குச் சாட்சியாக அவைகளைக் கப்பலில் கொண்டு போய் அடுக்கிய யூசப்கானைக் கூப்பிட்டுக் கேட்கும்படி சொன்னார்.

சாட்சிகள் எதையும் விசாரிக்க அதிகாரி விரும்பவில்லை. அவனுக்குத் தெரியாதா, உண்மை? ஆனால் வியாபாரி பிடிவாதமாகக் கூச்சலிடவே வேறு வழியின்றி வெறுப்புடன் யூசப்கானை அழைத்து வரும்படி உத்தரவு பிறப்பித்தான். யூசப் தங்களுக்குச் சாதகமாகவே சொல்லுவான் என்று அந்தப் பேராசைக்காரப் போர்ச்சுகீசியன் எதிர்பார்த்தது ஏமாற்றமாக முடிந்தது. நூற்றைம்பது மூட்டைகளையே படகிலிருந்து கப்பலில் கொண்டு போய் ஏற்றியதாக யூசப்கான் கூறவே அவமானமடைந்த அதிகாரி பேசாமல் வியாபாரிக்குரிய தொகையைக் கொடுத்து அனுப்பும்படியாயிற்று.

ஆரம்ப முதலே யூசப்கானிடம் வெறுப்பும் சந்தேகமும் கொண்டிருந்த போர்ச்சுகீசியருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்பட்டது. அவனைப் பலவந்தமாகப் பிடித்து, குறிப்பிட்டதோர் இடத்தில் நிறுத்தப்பட்டுள்ள இரண்டு கம்பங்களுக்கு அருகே இழுத்துக் கொண்டு போனார்கள். குற்றவாளிகளைக் குரூரமான முறையில் சித்திரவதை செய்வதற்காகவே கப்பலில் ஏற்படுத்தப்பட்டிருந்த கம்பங்கள் அவை. ஒன்றுக்கொன்று மூன்றடி இடைவெளியில் இரண்டு கம்பங்கள் நடப்பட்டிருக்கும். குற்றவாளியின் ஒரு கையையும் ஒரு காலையும் ஒரு கம்பத்துடனும் மற்றொரு கையையும் காலையும் வேறொரு கம்பத்துடனும் சேர்த்துக் கட்டி விடுவார்கள். மானத்தை மறைக்க இடையில் ஒரு சிறு துணிதான் இருக்கும். மற்றபடி வெற்றுடம்பு. இப்படிக் கம்பங்களுக்கு நடுவே அந்தரத்தில் அநாதரவாக நிற்கும் கைதியைத் துடிக்கத் துடிக்கச் சவுக்கால் அடிப்பார்கள். கைதி உணர்விழந்து போனால் அவன் மீது கடல் நீரை வாரிக் கொட்டி விழிக்கச் செய்து தெம்புக்குக் கொஞ்சம் உணவையும் வாயில் திணித்து மறுபடியும் கசையடியைத் தொடருவார்கள். இரவு பகல் எந்நேரமும் அவன் அதே நிலையில்தான் இருக்க வேண்டும். ரத்த விளாறாகக் கிடக்கும் உடல் வெயிலில் காய்ந்து வறவறவென்று இழுக்கும். கைதி அவஸ்தையுடன் அலறுவான். அதைக் கண்டு அவர்கள் நகைப்பார்கள். சாகும் வரை அவனை அந்தக் கம்பத்திலிருந்து அவிழ்க்க மாட்டார்கள்.

யூசப்கானைப் போர்ச்சுகீசியர் அந்தக் கம்பத்தில் கொண்டு போய்க் கட்டினார்கள். உண்மையை உள்ளபடி சொன்னதற்குத் தண்டனை! ஆனால் அவர்களோ தாங்கள் அவனுக்கு அளிக்கப் போகும் தண்டனைக்கு வேறு விதமான காரணங்களைக் கற்பித்தார்கள்.

யூசப்கான் கரையில் உள்ள முகமதியர்களுடன் கலந்து பேசிச் சதியில் ஈடுபட்டானாம். கப்பல் அதிகாரியைத் தாக்கித் தப்பிச் செல்ல முயற்சியும் செய்தானாம்!

யூசப்கான் தன் இனத்தைச் சேர்ந்த முகமதிய வியாபாரிகளை இந்தியக் கடற்கரையில் கண்டதும் மகிழ்ச்சியடைந்தான். இந்திய நாட்டைப் பற்றி அறிந்து கொள்ளும் அவாவில் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தது உண்மை. முகமதியர்களை முதல் எதிரியாகக் கருதும் போர்ச்சுகீசியர்களின் பார்வையில் இது பயங்கரமாகப் பட்டதில் வியப்பில்லை. இந்தத் தண்டனை அவனிடம் கொண்ட வெறுப்பில் விளைந்த முடிவே தவிர இதற்குக் காரணங்கள் எதுவும் தேவையே யில்லையே!

நம்பிக்கைக்குப் பாத்திரமான 'டெட்டால்'



இவரது உடல் சுகத்திற்கு



உங்கள் உடலை சுகாதாரத்துடன் வைத்துக்கொள்ள எப்பொழுதும் 'டெட்டாலை' கவலையின்றி உபயோகியுங்கள். 'டெட்டால்' உலகிலேயே மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருமிநாசினி. அது கிருமிகளைக்கொல்லுகிறது–மென்மையான சருமத்தையும் தசைகளையும் சிறிதும் பாதிக்காது. 'டெட்டால்' தொற்றுநோய் வராமல் உங்களைப் பாதுகாக்க உதவும். அசிரத்தையாயிருக்காதீர்கள்.

'ஸ்திரீகளின் நவீன சுகாதாரம்' என்ற இலவச சிறு நூலைப்பெற ஜி. பி. ஓ. பெட்டி நெ. 921, கல்கத்தா–1க்கு எழுதுங்கள்.

'டெட்டாலை' குளிக்கும் நீருடன் கலந்து உபயோகித்தால் நறுமணத்துடன் உற்சாகத்தையும் கொடுக்கும். தொண்டைப்புண்களைத் தடுப்பதற்கு 'டெட்டால்' கலந்த நீர் கொப்பளிக்க உதவும். சிராய்ப்புகளிலும் வெட்டுக் காயங்களிலும் 'டெட்டாலை' உடனே உபயோகியுங்கள். தொற்றுதலை அது தடுப்பதற்கு உதவும்.

டெ. 5 அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது) JWTAEL 4734AB

சதையைப் பிய்த்துக் கொண்டு விழும் சவுக்கடிகளை, அதிதமான சகிப்புத் தன்மையுடன் பொறுத்துக் கொண்டிருந்தான் பூசப்கான். ஒரு முனகல்கூட அவன் வாயிலிருந்து வெளிப்படவில்லை. இந்த நெஞ்சுறுதி அந்த நெஞ்சற்றவர்களின் கோபத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. பூசப்கானின் தலை நினைவிழந்து, தொங்கவிட்ட போது ஒரு வாளி உப்பு நீரை எடுத்து, ரத்தம் ஒழுகும் அவன் உடல் மீது ஊற்றினார்கள். அப்போதும் கூட அந்த உடலில் சிறிய அசைவும் ஏற்படவில்லை.

ஃ ஃ ஃ

நிலவு பால்போலக் காய்ந்து பாரதத்தின் மண்ணை யெல்லாம் பாலாக்கிக் கொண்டிருந்தது. அந்த அழகை ரசிக்கக் கூடிய பூசப்கான் கப்பலின் மேல் தளத்தில் தன்னுணர்வு இன்றித் துவண்டு கிடந்தான் கொலைக் கம்பங்களின் இடையே.

அதிகாலை வேளையின் ஆனந்தமான கடற்காற்றில் போர்ச்சுகீசியக் கப்பல்களின் நங்கூரம் தூக்கப்பட்டது. பாய்மரங்களை அவிழ்த்துப் பறக்க விட்டார்கள். காற்றை நிரப்பிக் கொண்டு படுதாக்கள் உப்பிப் பருத்தன. அந்தக் கப்பல்கள் இந்தியக் கடலை விட்டுத் தங்களது தாய்நாட்டை நோக்கிக் கிளம்பி விட்டன.


பூசப்கானுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. இந்தியாவை அடைந்ததும் எப்படியாவது தப்பிச் சென்றுவிட வேண்டுமென அவன் கண்ட கனவுகள், வெறும் கனவாகவே மங்கிவிட வேண்டியதுதானா?

(தொடரும்)

திரைத் துணுக்குகள்

எழுபது ஆண்டுகளாக நகை வியாபாரம் செய்து வந்த வீகம்லி ஸ்தாபனத்தினர் இப்போது 70 எம். எம். சினிமாத் துறையில் புகுந்திருக்கின்றனர். ஸபயர் (நீலக்கல்) என்று பெயர் கொண்ட இவர்களது தியேட்டருக்கு, மொரார்ஜி 14 காரட் சட்டம் கொண்டு வந்த மறுநாளே, சென்னை மவுண்ட் ரோடில் ஜெமினி ஸ்டுடியோவுக்குப் பக்கத்தில் அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டது. "புதிய வியாபாரத் தொழில் துறைகளை நாங்கள் கற்றுக் கொள்ள வழி வகுத்ததற்காக மொரார்ஜி தேசாய்க்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்" என்று நகைச்சுவையுடன் கூறினார் நகைத் தொழிலுக்கு எதிர்காலம் இல்லை என்பதை நன்கு புரிந்துகொண்ட எச். வி. ஷா.

சென்ற மாதம் பத்தாந் தேதி கிரக சாந்தி நடைபெற்ற இந்தத் தியேட்டர் சினிமாவாக மட்டுமிராது, தங்குவதற்கு வசதியான அறைகளைக் கொண்ட ஹோட்டலாகவும் அமையும். பக்கத்தில் பாண்டு வாத்தியக் குழுவினரின் இன்னிசையை அனுபவித்தபடியே உணவருந்த ஏற்ற ரூபி (சிவப்புக் கல்) ரெஸ்டாரண்டும் இருக்கும். அயல் நாடுகளிலிருந்து வரும் டூரிஸ்டுகளைக் கவர்ந்திழுத்து அந்நியச் செலாவணி சம்பாதிக்கக்கூடிய வகையில் நகரின் மையமான இடத்தில் எடுப்பாக உருவாகியுள்ள ஸபயர் கட்டிடம் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டதாயும் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டபின் 25 லட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டதாகவும் ஐந்து மாடிகள் கொண்டதாகவும் விளங்கும். டூரிஸ்டுகளுக்கான கடைக் கண்ணிகளுடன் ஊரைச் சுற்றிப் பார்க்க 'புளூ போர்ட்' என்கிற நவீன பஸ்ஸையும் தயாராக வைத்திருக்கின்றனர் நிர்வாகிகள்.



ஒரே வருஷத்தில் விடுவிடுவென்று உயர்ந்துள்ள தியேட்டரில் மூன்று 70 மி. மீ. படங்கள் திரையிடப்படக் காத்திருக்கின்றன. "இனி யோ பாட்ரா", "கான்-கான்", "ஸவுத் பஸிபிக்" ஆகிய மூன்று படங்களில் எதை முதலில் திரையிடுவது என்று யோசித்த நிர்வாகிகள் கடைசியில் மக்களின் விருப்பத்துக்கே அதை விட்டுவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். மக்கள் எதற்கு விரும்பி வோட்டுச் செய்கிறார்களோ அதை முதலில் திரையிடுவார்களாம். ஓட்டெடுப்பு என்று நடந்தால் கிளியோபாட்ராவுக்குத்தான் அதிக ஓட்டுக்கள் விழும் என்று ஒருவர் நம்ப, ஜோசியரைக் கேட்கவேணுமா? 900 பேர் உட்காரக்கூடிய தியேட்டரின் கட்டிடம் முதல் நாற்காலிகள் வரை எல்லாவற்றையும் வீகம்லி ஸ்தாபனத்தினரே 'டிஸைன்' போட்டு நிர்மாணித்திருக்கின்றனர்.

சம்பந்தம் என்ன ?

கீழ்க்கண்ட தமிழ்ப் படங்களைப் பார்த்ததும் இவற்றுக்கு நெருங்கிய சம்பந்தம் கொண்ட படங்கள் உங்கள் நினைவுக்கு வருமே. அவை என்னவென்று தெரியுமா உங்களுக்கு?

1. பங்காளிகள்; 2. நிச்சயதாம்பூலம்; 3. ஆலயமணி; 4. வேட்டைக்காரன்; 5. மாமியார்; 6. புதையல்; 7. இன்ஸ்பெக்டர்; 8. வேலைக்காரன்; 9. மலைக்கள்ளன்; 10. குடும்பம்.

விடை:—1. பாகப் பிரிவினை; 2. திருமணம்; 3. மணி ஓசை; 4. யானைப் பாகன்; 5. மருமகள்; 6. பணம்; 7. கைதி; 8. முதலாளி; 9. சங்கிலித் தேவன்; 10. சம்சாரம்.

சிரிக்கவும் சிந்திக்கவும்

காங்கிரஸ்! (அமெரிக்க சட்ட சபை) தமாஷ் செய்யும் ஒவ்வொரு முறையும் ஒரு சட்டம் உருவாகிறது; ஒரு சட்டம் உருவாகும் ஒவ்வொரு முறையும் ஒரு தமாஷ் ஏற்படுகிறது! —வில் ரோஜர்ஸ்

❀ ❀ ❀

திருஞானசம்பந்த சுவாமிகள், தாம் பிறந்த அறுபது நாழிகைக்குள்ளே தம்மைப் பிறப்பித்த ஆண்டவனைப் பார்த்து, 'பித்தா!' என்று பரிகசித்துப் பாடினாராம். சாதாரணமாக உலகத்தில் எல்லாக் குழந்தைகளும் 'குவா', 'குவா' என்றுதான் பாடுவது வழக்கம்; சில 'பா!' என்று அடித் தொண்டையிலிருந்து பாடும்.

ஐந்தாறு மாதங்களானதும் கர்நாடகமான குழந்தைகள், 'ம்மா', 'ப்பா', 'த்தா' என்று சொல்லிப் பார்க்கத் தொடங்கும். 1963, 1964ம் வருடப் பதிப்புக் குழந்தைகளோ, 'டாட்டா', 'பாபா ப்ளாக் ஷீப்' என்று தாமாகவே சொல்கின்றன. ஆனால் பேச்சு விஷயத்தில், இவை சிலக் குழந்தைகள் முன்னால் நிற்க முடியாது.

'தலைவர் மாவோ துங்!' என்ற வார்த்தைகள்தாம் பெரும்பாலான குழந்தைகளின் வாயிலிருந்து கிளம்புகின்றனவாம். கெட்டிக்காரக் குழந்தைகளோ இன்னும் ஒரு படி அதிகமாகப் போய், "தலைவர் மா நீடூழி வாழ்க!" "கம்யூனிஸ்ட் கட்சி நீடூழி வாழ்க!" என்று சொல்கின்றனவாம்.

இந்த வார்த்தைகளைச் சீன பாஷையில் சொல்வதற்குப் பெரியவர்களுக்கே கஷ்டப்படும். இந்தப் பேசுவதைக் குணமாக்க இவற்றைப் பயிற்சி வார்த்தைகளாக உபயோகிக்கலாம். அவற்றை ஆறுமாதச் சிசுக் குழந்தைகள் பல எளிதாகச் சொல்கின்றனவாம். சீனாவில் எதுதான் நடக்காது? இனிமேல் பேச ஆரம்பிக்கும் குழந்தைகள் 'லடாக் சீனாவுக்குச் சொந்தம்!', 'அயோக்கியத்தனம் சீனாவுக்குச் சொந்தம்' என்றெல்லாம்கூடப் பேசினால் அதைப்பற்றி ஆச்சர்யப்படுவதற்கில்லை.

❀ ❀ ❀

நமது மத்திய மந்திரி ஸ்ரீமதி லட்சுமி மேனன் திடீர் திடீரென்று சில அபூர்வ யோசனைகளைச் சொல்வது வழக்கம். ஜான்ஸிபாரிலும் இலங்கையிலும் வாழும் இந்தியர்கள் அவதிப்படுகிறார்களே என்றால் அவர்கள் அக்கிரம ராஜ்யங்களின் அதர்மச் சட்டங்களுக்குட்பட்டுச் சரியாக நடந்து கொள்ளாததுதான் குற்றம் என்று கூறி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார். அரிசி விலை ஏறி விட்டதே என்றும் 'அரிசி வாங்காதீர்கள்; விலை குறைந்து விடும்' என்று தாய்மார்களுக்குத் தாமும் உண்ணாவிரதமிருந்து கணவன்மார்களையும் குழந்தைகளையும் பட்டினி போடும் பேஷான ஆலோசனையை நவின்றார். சாமான் விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதைப் பற்றிக் கவலைப்படாதிருக்க இன்னொரு வழியும் அவருக்குச் சொல்லிக் கொடுக்க நினைக்கிறேன்.

'பதார்த்த குணசிந்தாமணி' போன்ற வைத்தியப் புத்தகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். சாமான்களைப் பற்றிய பல அருமையான விஷயங்கள் தெரியவரும்.

"உளுந்து, துவரம் பருப்பு இவை மூட்டு வாயு; நல்லெண்ணெய், மிளகாய் உஷ்ணம்; தேங்காய் எண்ணெய் பித்தம்; புளி அபத்தியமானது; சர்க்கரை உடல் பருக்கச் செய்வதோடு நீரிழிவு வியாதியையும் உண்டாக்கும்" என்று தெரிந்து கொள்ளலாம். இந்தச் சாமான்களின் மீது நமக்கு வெறுப்பு ஏற்பட்டு அவற்றை உபயோகிக்கப் பயப்படுவோம்; அல்லது குறைவாகவே உபயோகிப்போம். இந்த எனது அருமையான யோசனையை அரசாங்க உணவு இலாகா பயன்படுத்திக் கொள்ள ஸ்ரீமதி லட்சுமி மேனன் சிபாரிசு செய்ய வேணும் என்று கோருகிறேன்! இதைப் பற்றிப் பத்திரிகைகளில் விளம்பரம்கூடச் செய்யலாம். எதற்கெடுத்தாலும்தான் கவி அரங்கு என்று ஒன்று கூட்டுகிறார்களே! இது சம்பந்தமாகவும் ஒன்று கூட்டலாம். கவிஞர்கள், சாமான்களின் மிகவும் மோசமான குணங்களைப் பற்றி அன்னத் துவேஷம் ஏற்படும்படியான முறையில் வர்ணித்து விட்டு முடிவில்,

...ஆகவே, உடல்நலம் கெடுக்குமந்தப்
பொல்லாப்
பருப்பையும், புளியையும்,
மிளகாயையும் எண்ணெ
யையும் தவிர்ப்பீர்.
தவிர்த்தல், அரிசி கொள்
வதும் அதிகமானது,
அரிசிப் பஞ்சமும் அகலும்
அன்றே !

என்று புத்திமதி கூறலாம்.



ஸ்ரீமதி லட்சுமி மேனன்

❀ ❀ ❀

நமது ராஜ்யத்தில் விலையே உயராதது ஏதாவது ஒன்று, ஒன்றே ஒன்று இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன். மளிகைக் கடைகளில், காய்கறிக் கடைகளில், துணிக் கடைகளில், மருந்துக் கடைகளில், புத்தகக் கடைகளில் கவி மண், புற்று மண் விற்கும் கடைகளில் விசாரித்துப் பார்த்தேன். எனக்குச் சிலர் ஒரு பைத்தியக்காரன் என்று பட்டமளிக்கத் தயாரா யிருந்தார்கள்.

கடைசியில் ஒன்றே ஒன்றைக் கண்டு பிடித்தேன். அதற்கு நாலு கால்கள் உண்டு. வாய் கிடையாது; முதுகு உண்டு. கழுத்து

கிடையாது! கைகள் உண்டு, விரல் கிடையாது! பத்திரிகையை மூடி வைத்து விட்டு இரண்டு நிமிஷங்கள் யோசித்து அது என்ன என்று சொல்லுங்கள், பார்க்கலாம்!

❀ ❀ ❀

சென்னை பாலர் அரங்கத்தில் உள்ள ஆசனம் அது! அதற்குக் கட்டணம் நாலணாவாக — கேவலம் நாலணாவாகவே இருந்து வந்து கொண்டிருக்கிறது. அந்த அரங்கத்துக்குச் சிறுவர்கள் போகிறார்கள். அது இருக்கும் பக்கமாகச் செல்பவர்களுக்குப் பஸ் கிடைக்கா விட்டால், அவர்களுள் சிலர் அதற்குள் நுழைகிறார்கள். நானும் ஒவ்வொரு சமயம் போவதுண்டு. அந்த நாலணாவுக்கு நாம் அங்கே படங்களைப் பலவிதமாகப் பார்த்து அனுபவிக்க முடியும். நேரே உட்கார்ந்து கொண்டால் படத்தில் வருபவர்கள் சாதாரண மனிதர்களாகத் தென்படுவார்கள். பக்கவாட்டில் தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டால் பாதி முகங்கள் தெரியும். இப்படி விதம் விதமாகத் தோன்றக் கூடிய இடங்களில் உட்கார்ந்து கொள்ள இங்கே வசதிகள் இருக்கின்றன!

'அரசாங்க பிலிம்ஸ் டிவிஷன்' காண்பிக்கும் படங்கள் பல நன்றாகவே யிருக்கின்றன. அவை பெரும்பாலும் கோவில், ஆறு, மலை, காடு, மிருகங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் அனுபவிக்க முடிகிறது. திருஷ்டி பரிகாரமாகச் சில திட்டப் பிரசாரப் படங்களும் காண்பிக்கிறார்கள்.

இங்கே உட்கார்ந்து கொண்டு மனத்துக்குப் பிடிக்காத படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது பாலர் அரங்கமிருக்கும் இடத்தைப் பற்றிய பல பழைய விஷயங்கள் ஞாபகத்துக்கு வரும்.

அதோ, படம் தோன்றும் திரை உள்ள இடத்தில்தானே சட்டசபைத் தலைவர் உட்கார்ந்திருந்தார்! அதோ, அங்கேதானே முதன் மந்திரியாக இருந்த ராஜாஜி உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்கு எதிராகத் தானே எதிர்க் கட்சியினர் எனப்பட்ட சில கம்யூனிஸ்டுகள் உட்கார்ந்திருந்தனர். இங்கே நான் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து தானே ஒரு சட்டசபை அங்கத்தினர் எழுந்திருந்து ஏதோ ஒரு கேள்வி கேட்டு விட்டுத் தமக்குத்தாமே சிரித்துக்கொண்டார். இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் நினைவுக்கு வரும்! சட்டசபை நடந்த இடத்தில் பாலர் அரங்கம்! பொதுவாக உலகத்தில் எல்லாச் சட்டசபைகளிலும் அங்கத்தினர்கள் பேசுவது, சிரிப்பது, மேஜை தட்டுவது, வெளியேறுவது, ஒருவரையொருவர் வைது கொள்வது, தாக்கிக் கொள்வது (சில தினங்கள் முன்னர் தான் அமெரிக்க ஸெனெட் கட்டடத்தில் தர்மாண்டு, பார் பாரோ என்ற இரண்டு அங்கத்தினர்கள் ஐந்து நிமிஷ நேரம் குஸ்திச் சண்டை போட்டார்கள்) முதலியவற்றைக் கவனிக்கும் போது சட்டசபைகளுக்கு '25 வயதுக்கு மேற்பட்ட பாலர்(களின்) அரங்கம்' என்று பெயர் வைக்கலாம் என்று தோன்றுகிறது.

பின்வரும் பகுதிகள் ஒரு தமிழ் நாவலில் உள்ளவை :

''மந்திரி பட்டவர்த்தன் தமது காரியாலய அறையில் தமது சுழல் நாற்காலியில் அமர்ந்து தமது மேஜையின் மீது இருந்த ஒரு காகிதத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அதில் பல கட்டங்கள் காணப்பட்டன. அது எந்தத் திட்டம் சம்பந்தமான படமுமல்ல; அது ஒரு ஜாதகம்.

கனம் பட்டவர்த்தனுக்கு ஜாதக பலனில் எல்லையற்ற நம்பிக்கை உண்டு. அவர் இந்திய ஜாதக நூல்கள் முதல் ஐஸ்லாந்து நீவினர் திமிங்லெத் தோலில் குறித்து வைத்திருக்கும் ஜாதக சாஸ்திரம் வரை எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார். அவர் வெறும் புத்தகப் புழு மட்டுமல்ல. ஜாதக பலன் சொல்லுவதற்கு அனுபவம் வேண்டும். பலருடைய ஜாதகங்களைப் பார்த்துப் பார்த்துப் பழக வேண்டும் என்ற இரகசியத்தை உணர்ந்தவர். அதற்காக அவர், தம் இஷ்ட மித்திர பந்து ஜனங்களின் ஜாதகங்களை மட்டுமேயன்றித் தம் கீழ் வேலை செய்யும் நூற்றுக்கணக்கானவர்களின் ஜாதகங்களையும் வாங்கி வைத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் ஓர் உத்தியோகஸ்தரின் ஜாதகத்தை எடுத்துப் பார்த்தார். அதில் அவருக்குக் கூடிய சீக்கிரம் ஊர் மாற்றம், இடமாற்றம் ஏற்படும் என்றிருந்தது. உடனே அந்த உத்தியோகஸ்தரை வேறு ஊருக்கு மாற்றி விட்டார்.

இன்னொரு ஜாதகத்தை எடுத்தார். அது அவரது காரியதரிசியினுடையது. அதன் பலனைப் பார்த்ததில் அவருக்குக் கூடிய சீக்கிரத்தில் எதிர்பாராத விதத்தில் ஏராளமான பணம் கிடைக்கும் என்று தெரிந்தது. அதே சமயத்தில் அவருக்குக் காரியதரிசியைப் பற்றி ஒரு 'மொட்டை'க் கடிதம் வந்தது, லஞ்சம் வாங்குகிறார் என்று. உடனே அவரைப் பற்றி விசாரிக்க ஏற்பாடுகள் செய்தார்....''

சுமார் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னர் நான் இப்படி எழுதியது, மந்திரி நந்தாவின் தீவிர லஞ்ச ஒழிப்பு முயற்சிகளைப் பற்றிப் படிக்கும் போது ஞாபகம் வந்தது. சாதுக்களை அதாவது சாமியார்களை இது விஷயத்தில் அவர் உபயோகிப்பது இந்தியப் பண்பாட்டுக்கு முற்றிலும் ஏற்றது. அத்துடன் கதையில் வரும் மந்திரி பட்டவர்த்தன் முறையை ஒட்டி அதிகாரிகளின் ஜாதகங்களையும் பார்த்து, நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயற்சி செய்யலாம். மிகவும் சுலபமான முறை. சதாசாரக்கமிட்டி, விஜிலன்ஸ் இலாகா — இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு சிரமப்பட வேண்டியதில்லை. என்னுடைய இந்த யோசனை முழுமையாக அமுல் நடத்தப் பட்டால், மந்திரிகள் மூலமாக நம் நாட்டை ஆளும் நோக்கத்துடன் தில்லியில் குடியேறியிருக்கும் கணக்கற்ற ஜோசியர்களில் யார் யாரை எந்த எந்த இலாகாவுக்கு அமர்த்துவது என்பதில்தான் லஞ்ச ஊழல் தாண்டவமாடும். அதைமட்டும் ஸ்ரீ நந்தா மன்னித்து விட வேண்டியதுதான்! — என். ஆர்.


இருமலை நீக்க

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சிவப்பு லேபில்


சாப்பிடுங்கள்






விடாது தொடர்ந்து தொல்லை கொடுக்கும் இருமலைப் பற்றி அசிரத்தையாக இருக்கக் கூடாது. அது உடலைப் பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் இருமலை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்ளீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியை ஊட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.





வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால், சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை 'இளக்கி' வெளியேற்றி சுவாசப்பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக்குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர்-லாம்பர்ட் ஃபார்மஸூடிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

JWT-WL. 2394



தமிழ் நாட்டின் தேவைகள்

எஸ். விசுவநாதன்

ஸ்ரீ எஸ். விசுவநாதன் போக்குவரத்து சம்பந்தமான 'மொபைல்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையைத் திறம்பட நடத்தி வருபவர். இரட்டை எம். ஏ. பட்டதாரி. பேராசிரியராகப் பணியாற்றியவர். உற்சாகமுள்ள இளைஞர். ஊர்நலத்தில் அக்கறை கொண்டவர். இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அநுபவம் பெற்றவர். ரயில்வேயின் வளர்ச்சிக்கு அருமையான யோசனைகள் கூறியுள்ளார். —ஆசிரியர்

நாட்டின் பல்வேறு பகுதிகளும் ஒரே அளவில் சீரிய முன்னேற்றமடைய வேண்டுமானால், தொழிற்சாலைகள் நாடு முழுவதிலும் பரவலாக அமைக்கப்பட வேண்டும். இத்தகைய வளர்ச்சிக்கு நாட்டின் எல்லாப் பகுதிகளும் இருப்புப்பாதை மூலம் இணைக்கப்பட வேண்டியது அவசியம். தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருக முக்கியத் தேவையான ரயில் போக்குவரத்து எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது?

இந்திய ரயில்வேக்களின் இருப்புப் பாதைகள், தண்டவாளங்களின் அகலத்தைக் கொண்டு, 'பிராட்கேஜ்', 'மீட்டர் கேஜ்', 'நேரோ கேஜ்' என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் 'மீட்டர்கேஜ்' இருப்புப்பாதையின் நீளத்துடன் ஒப்பிட்டால் 'பிராட்கேஜ்' பாதையின் நீளம் மிகக் குறைவு. இங்குள்ள மொத்த 'பிராட்கேஜ்' பாதையின் நீளம் 800 கிலோ மீட்டருக்கும் குறைவு.

பொதுவாக, 'பிராட்கேஜ்' பாதைகளில் நடைபெறும் போக்குவரத்து, லாபம் சம்பாதிக்கிறது; ஆனால் மற்ற 'கேஜ்'களின் மூலம் அநேகமாக நிர்வாகத்துக்கு நஷ்டமே ஏற்படுகிறது. உதாரணமாக, 'பிராட்கேஜ்' இருப்புப்பாதையில் செல்லும் ஒரு பிரயாணிகள் வண்டியின் வருமானம் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 8.72 பை எனவும், செலவு ரூ. 8. 38 எனவும் கணக்கிடப்பட்டுள்ளன. 'மீட்டர்கேஜ்' இருப்புப்பாதையில் ஒரு கிலோ மீட்டர் செல்லும் ஒரு பிரயாணி வண்டியின் வருமானமும் செலவும் முறையே ரூ. 6. 18, ரூ. 8. 05. அதாவது ஒரு கிலோமீட்டருக்கு, ஒரு 'பிராட் கேஜ்' வண்டித் தொடர், பொதுவாக, 34 பை லாபம் சம்பாதிக்கிறது; ஆனால் இத்தூரத்துக்கு ஒரு 'மீட்டர்கேஜ்' பாதையில் செல்லும் வண்டி, ரூ. 1. 87 நஷ்டம் ஏற்படுத்துகிறது. சாமான்கள் வண்டியைப் (Goods Train) பொறுத்த மட்டில் இந்த வித்தியாசம் இன்னும் பெரிய அளவில் காணப்படுகிறது. சாமான்கள் வண்டி, ஒரு கிலோ மீட்டர் தூரம் 'பிராட்கேஜ்' இருப்புப் பாதையில் செல்லும் போது ரூ. 4. 90 லாபத்தையும், 'மீட்டர்கே'ஜில் செல்லும்போது ரூ. 1 நஷ்டத்தையும் விளைவிக்கின்றன.*

மேலும், 'பிராட்கேஜ்', 'மீட்டர்கேஜ்' இருப்புப்பாதைகளின் அகல வித்தியாசத்தினால் பண்டங்களின் துரிதப் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, விஜயவாடாவிலிருந்து விழுப்புரத்துக்கு ஒரு பண்டம் செல்ல வேண்டுமானால், அது சென்னை கடற்கரை ரயில் நிலையம் வரை 'பிராட்கேஜ்' பாதையில் செல்ல வேண்டும். பிறகு அதை 'மீட்டர் கேஜ் வாகன'க்கு மாற்றி விழுப்புரம் எடுத்துச் செல்ல வேண்டும். இதனால் கால விரயமும் அதிகப்படி செலவும் ஆகின்றன. ஏற்கனவே கூறியிருப்பது போல், தமிழ் நாட்டில் உள்ள இருப்புப் பாதைகளின் பெரும் பகுதி 'மீட்டர் கேஜ்' ஆக இருப்பதனால், இப்பகுதியைப் பொறுத்த வரை, 'ரயில்வே'க்களின் செலவினம் வருவாயை விடக் கூடுதலாக இருந்து வருகிறது. இத்தகைய நஷ்டம், துரிதமான இருப்புப்பாதை வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. ஆகவே, தமிழ் நாட்டில் உள்ள இருப்புப்பாதைகளில், சென்னை—திருச்சிராப்பள்ளி பகுதியை உடனடியாகவும், பிறகு அங்கிருந்து திருநெல்வேலி வரையும் 'பிராட்கேஜ்' ஆக மாற்றுதல் இந்த மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அத்யாவசியமானது. தமிழ் நாட்டில், 65 கிலோமீட்டர் நீளமுள்ள விருதுநகர் மானாமதுரை பகுதியைத் தவிர, வேறு அதிகப்படியான இருப்புப் பாதைகள் ஒன்றும் சமீபகாலத்தில் போடப்பட வில்லை. சேலம்—பங்களூர் புதிய இருப்புப்பாதை தற்போது போடப்பட்டு வருகிறது. நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது புதிதாக எடுத்துக்

* Mobile - ஏப்ரல் 1963, பக்கம் 29 - 30.

கொள்ளப்படும் இருப்புப்பாதை திட்டங்களில் தமிழ் நாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.



ரயில்வேக்களின் லாபகரமான நிர்வாகம் ஒரே சீரான இருப்புப்பாதைகளைக் கொண்டிருப்பதை மட்டும் பொறுத்ததல்ல. மின்சாரம் மற்றும் டீசல் ரயில் என்ஜின்களை உபயோகித்தால் கூடுதலான லாபம் கிடைக்கும். தமிழ்நாட்டில் மின்சார இருப்புப் பாதை அமைக்கும் திட்டத்தின் முன்னேற்றம் மிகுந்த ஏமாற்றம் அளிக்கும் வகையில் உள்ளது. சென்னை — விழுப்புரம் ரயில் பகுதியை மின்சாரத்தின் மூலம் இயக்குவதற்கான திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலம் முடிவதற்கு முன் எடுத்துக் கொள்ளப்பட்டது. துரதிருஷ்டவசமாக இந்தத் திட்டம் மிகவும் மந்தகதியில் சென்றுள்ளதால் மேற்கொண்டு புதிய இருப்புப்பாதைப் பகுதிகளை மின்சார மயமாக்கும் திட்டங்களை எடுத்துக் கொள்வதையும் தடை செய்துள்ளது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுப் பல மாதங்களுக்குப் பிறகு, கிழக்குப் பிராந்திய ரயில்வேயில் தொடங்கப்பட்ட கல்கத்தா — மொகல் சராய் பகுதியை (757 கிலோ மீட்டர் தூரம்) மின்சார மயமாக்கும் திட்டம் மிகவும் துரித காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இதே பகுதியில் இன்னும் 346 கிலோ மீட்டர்கள் கான்பூர் வரை தொடர வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன. கூடிய சீக்கிரம் இத்திட்டம் டில்லி வரை தொடரப்படும். இந்த அதிவேகமான முன்னேற்றத்தை நமது சென்னை — விழுப்புரம் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். சுமார் 160 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தப் பகுதியை மின்சார மயமாக்குவதற்கு முழுவதாக எட்டு ஆண்டு காலம் போதவில்லை. இந்தத் திட்டம் இந்த வருட இறுதிக்குள் அநேகமாக முடிந்து விடக் கூடும் எனக் கூறுகின்றனர். ஆனால் இந்தப் பகுதியில் ஓடுவதற்கு மின்சார ரயில் இன்ஜின்கள் துரித காலத்தில் கிடைக்கக் கூடும் என்று தோன்ற வில்லை. 1965ம் ஆண்டு ஆரம்ப காலத்திலிருந்து நீராவி இன்ஜின்களை இந்தப் பகுதியிலிருந்து அகற்றுவதற்கான சீரிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் தெரியவில்லை.

வெகு வேகமாகத் தமிழ் நாட்டில் பெருகி வரும் பிரயாணிகள் மற்றும் பண்டங்கள் போக்குவரத்தைச் சமாளிக்க நிறைய இருப்புப் பாதைகளை மின்சார மயமாக்க வேண்டியது மிகவும் அவசியம். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கப் பகுதி, திருச்சிராப்பள்ளியில் கனரக பாய்லர் தொழிற்சாலை, ரயில்வே வேகன் தொழிற்சாலை, மற்றும் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த தொழிற்சாலைகள் ஆகியவை வேகமாக உருவாகி வருகின்றன. இவற்றுக்குத் தேவையான கச்சாப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கும், இவைகளிலிருந்து உற்பத்தியாகும் பொருள்களை நாட்டின் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லவும், துரிதமான ரயில் போக்குவரத்து உடனடியாகத் தேவை. ஆகவே சென்னை — விழுப்புரம் பகுதியை மின்சார மயமாக்கும் திட்டம் திருச்சிராப்பள்ளி வரையில் உடனடியாகத் தொடரப்பட வேண்டும். இந்தத் திட்டத்திலேயே நெய்வேலியிலிருந்து விருத்தாசலம் வரை உள்ள பகுதியிலும் மின்சார இருப்புப் பாதை அமைக்கப்படுதல் வேண்டும்.

பம்பாய், கல்கத்தா ஆகிய பெரிய நகரங்களில் மின்சார ரயில் வசதி மூலம், நகரப் பகுதியை விட்டு வெகுதூரத்தில் குடியிருக்கும் மக்கள் சௌகரியமாகத் தங்கள் காரியாலயங்களுக்கு வந்து செல்ல முடிகிறது. கடந்த சில ஆண்டுகளுக்குள் இந்நகரங்களில் மின்சார ரயில்களில் பிரயாண வசதிகள் அதிகரித்துள்ளன. அடிக்கடி விடப்படும் கூடுதலான வண்டிகள், குறிப்பிட்ட இடங்களில் மட்டும் நின்று வேகமாகச் செல்லும் விசேஷ வண்டிகள் போன்றவைகளில் சீரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையில் கடற்கரை—தாம்பரம் பகுதியில் இயங்கிவரும் மின்சார ரயில் போக்குவரத்து இன்றைக்கு முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன் இருந்த நிலையிலிருந்து அதிக முன்னேற்றம் காணாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்க விஷயம். தற்பொழுது இயங்கி வரும் 30 மின்சார வண்டிகளில் பதினேழு 1931ம் ஆண்டிலும் மற்றும் ஏழு வண்டிகள் 1933ம் ஆண்டிலும் வேலை செய்ய ஆரம்பித்தன. மற்ற ஆறு வண்டிகள் 1955—56ம் ஆண்டிலிருந்துஇயங்கி வருகின்றன. மிகப் பழமை அடைந்து, அநேகமாகக் காலகதி அடைந்த இந்த மின்சார வண்டித்தொடர்கள் அடிக்கடி பழுது அடைந்து ரயில் போக்குவரத்தை மிகவும் பாதிக்கின்றன. சென்னையின் சுற்றுப்புறம் கிட்டத்தட்ட செங்கல்பட்டு வரையில் வளர்ந்துள்ளது. இதைத் தாண்டிக் காஞ்சிபுரம் வரையில் உள்ள இடங்களிலிருந்து ஜனங்கள் தினசரி உத்தியோக நிமித்தம் நகரின் மத்தியிலுள்ள காரியாலயங்களுக்கு வர வேண்டியுள்ளது. மற்றும் நாள் முழுதும் மின்சார ரயில் வண்டிகளில் நெரிசல் மிகவும் அதிகமாகிக் கூட்டம் தாங்க முடியாத அளவுக்கு உள்ளது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டுப் பத்தொன்பது அதிகப்படியான மின்சார ரயில் வண்டிகள் பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயார் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்பட்டு வருகிறது. இவற்றைக் கூடிய சீக்கிரம் தயார் செய்து இயக்கினால் தான் சென்னை நகரத்தில் மின்சாரரயில் பகுதியில் நிர்வாகம் சீர்படக்கூடும்.

நகரின் வடக்குப் பகுதியான எண்ணூர், திருவொற்றியூர் மற்றும் ஆவடி, அம்பத்தூர் பகுதிகளைச் சுற்றிப் பல பெரிய தொழிற்சாலைகள் சமீப காலத்தில் தோன்றியுள்ளன. இவற்றில் வேலை செய்யும் ஏராளமான தொழிலாளர்களுக்குப் போதிய ரயில் போக்குவரத்து வசதி கிடைக்க வில்லை. சென்னை — அரக்கோணம், சென்னை — எண்ணூர் பகுதிகளை மின்சார மயமாக்கினால் இப்பகுதிகளில் பிரயாணம் செய்பவர்களின் கஷ்டம் வெகுவாகக் குறைந்து விடும். இத்திட்டங்களைச் செயலாக்கும் வரை குறைந்த பட்சம் சில டீசல் வண்டிகளையாவது இந்தப் பகுதிகளில் இயக்க வழி செய்ய வேண்டும்.

அன்றும் கௌரிக்கு ஏமாற்றம்தான்!

''ஒன்றும் இல்லீங்களே அம்மா!'' என்று வார்த்தைகளால் சொல்லியதை விளக்குவது போல் இடது கையிலிருந்த கடித அடுக்கை நழுவவிட்டு விடாமல் ஜாக்கிரதையாக வலது கையை மேலே தூக்கி விரல்களை விரித்துக் கிடையாதென்று மறுப்பதற்கு அபிநயமாக ஒரு சுழற்றுச் சுழற்றி அதைச் சைகையாலும் நிரூபித்த பின், 'இருந்தால் கொடுக்க மாட்டேனா?' என்பதுபோல் தெரியத் தனக்குத் தானே சிரித்தபடி மேலே நடந்து விட்டார் தபால்கார நாயுடு. தான் தவறாமல் கடிதங்களை 'சார்ட்' செய்யும்போது கௌரி, நம்பர் 17, கனகம்மாள் ஸ்டிரீட் என்று விலாசமிட்ட ஒரு கார்டையோ, கவரையோ, இன்லண்ட் கவரையோ ஆவலோடு எதிர்பார்த்துத் தேடுவது கடந்த சில மாதங்களாக நாயுடுவுக்கும் ஒரு வழக்கமாகி யிருந்தது. 'தபால்காரன் என்பவன் பலருடைய கடிதங்களைச் சுமந்து கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அப்படிச் சுமந்து கொண்டு போகிற கடிதங்களில் அவற்றை அடையப் போகிறவர்களின் சுகமும் இருக்கலாம், துக்கமும் இருக்கலாம். அதிர்ச்சியும் இருக்கலாம். ஆனந்தமும் இருக்கலாம். ஆனால் அவற்றைத் தபால்காரன் சுமப்பதில்லை. என்றாலும் இந்தப் பதினேழாம் நம்பர்ப் பெண்ணுக்குப் பதில் கடிதம் ஒன்றும் கொடுக்காமலே போகிற சுமை நாயுடுவின் மனத்தில் நாளுக்கு நாள் கனத்துக் கொண்டே போயிற்று. ஒவ்வொரு நாளும் சுற்று முடிந்து கடிதங்களைப் பட்டுவாடா செய்தான பின் அவருடைய கைகளின் பாரம் குறைகிற சமயம் மனத்தின் பாரம் அதிகமாகும்படி செய்திருக்கிறாள் இந்தப் பதினேழாம் நம்பர்ப் பெண்.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட சர்வீஸில் தபால்கார நாயுடு இப்படி யாருக்காகவும் மனமிரங்கி உருகியதும் தவித்ததுமில்லை.

''நாங்க குங்குமம் சொமக்கிற கழுதைம்பாங்களே; அது மாதிரிங்க. கொண்டு போய்க் கொடுக்கிற கடுதாசிலே நல்லதோ கெட்டதோ, சுகமோ, துக்கமோ, எது வேணுமானு இருக்கலாம். அதுனாலே நாங்க பாதிக்கப்படறதில்லே'' — என்று நாயுடு சில சமயங்களில் விலாசதாரர்களிடம் வேதாந்தபரமாகப் பேசுவதும் உண்டு. அப்படிப் பேசும்போது ஏதோ கை நிறையச் சுக துக்கங்களை அல்லது இன்ப துன்பங்களை— அடுக்கிக் கொண்டு போய் அவரவர்களுக்குச் சேர வேண்டியதை அவரவர்களுடைய விலாசம் தவறாமல் உதறிவிட்டுப் பாரத்தைக் குறைத்துக் கொள்ளும் விதியின் நடுநிலைமை பிறழாததொரு நாயகனைப் போல் அவருடைய குரல் ஒலிக்கும். தபால்காரன் வருகின்ற நேரத்தை எதிர்பார்த்து அந்த நேரத்தை நம்பும் ஆவலிலேயே மற்ற நோக்கையெல்லாம் போக்கி விட்டு நிற்கும் ஆடுகளை அவர் நிறையப் பார்த்திருக்கிறார். அப்படி ஆடுகளில் ஒருத்தியாக இந்தப் பதினேழாம் நம்பர்ப் பெண்ணை அவரால் நினைக்க முடியாது. பதினேழாம் நம்பர் வீடு என்கிற எட்டு ஒண்டிக் குடித்தனங்களடங்கிய நீண்ட இருள்மாளிகையில் ஏதோ ஒரு சின்ன அறையில் அந்தப் பெண்ணும் அவளுடைய இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள்: தினந்தோறும் காலையில் அதே



மணிவண்ணன்

பத்து மணிக்குத் தபால்கார நாயுடு முதல் டெலிவரிக்கான கடிதங்களோடு கனகம்மாள் தெரு முனையில் திரும்பி உள்ளே நுழைவதற்கும் அந்தப் பெண் குழந்தைகள் பின் தொடர வாசலுக்கு வந்து ஏக்கத்தோடு நிற்பதற்கும் சரியாக இருக்கும்.

''கௌரின்னு ஏதாவது இருக்கான்னு பாருங்க நாயுடு?'' என்று அந்தப் பெண் பொறுமையையும், நம்பிக்கையையும் விட்டு விடாமல் நாள் தவறாமல் நிதானமாகக் கேட்கிறபோது, 'இவளுக்கு இல்லை என்று சொல்லியாக வேண்டியிருக்கிறதே' என்ற ஏக்கத்தோடுதான் நாயுடுவும் பதில் சொல்லியிருக்கிறார். சில வெள்ளிக்கிழமைகளில் தலை முழுகி ஆறவிட்ட கூந்தல் முதுகிலே காடாய்ப் புரள நெற்றியில் குங்குமமும், கண்களில் தாபமுமாக சாட்சாத் மகாலட்சுமியே நேரில் வந்து நின்று கேட்பது போல், 'எனக்கு ஏதாவது கடிதாக இருக்கா பாருங்க?' ன்னு அந்தப் பெண் கேட்கிறபோது 'ஒண்ணும் இல்லீங்களே அம்மா' என்று சொல்லிக் கையை விரிப்பதற்குள் அவர் மனம் இரகசியமாக உள்ளேயே அழுது ஓய்ந்திருக்கிறது. அந்தப் பெண் கௌரியின் கணவன் குருமூர்த்தி பக்கத்து பஜாரில் உள்ள கிருஷ்ண பவான்

பதினேழாவது

நம்பருக்கு ஒரு பதில்



ஹோட்டலில் சர்வராக இருந்து படிப்படியாக முதலாளியின் அபிமானத்தைக் கவர்ந்து முடிவில் காஷியராக உயர்வு பெற்றுக் கல்லாவில் உட்கார்ந்திருந்தான். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் ஒரு நாள் கிருஷ்ண பவான் கல்லாவில் நிறையப் பணம் திருட்டுப் போய்விட்டதாம். பில் போடுகிறவர்களின் ஒத்துழையாமையினாலோ பொறுமையினாலோ காஷில் பணம் குறைந்திருக்கலாம். அல்லது குருமூர்த்தியைத் தவிரக் கல்லாவில் உட்கார்ந்து பணம் வாங்கிப் போடுகிற மற்றொரு நபரான முதலாளியின் சிறிய மகன் சுந்தரம் ஏதாவது மைனர் விளையாட்டுக்காகப் பணத்தைச் சொல்லாமலே கையாடியிருக்கலாம். பழி என்னவோ குருமூர்த்தியின் தலையில்தான் வந்து விழுந்தது. முதலாளி அவனைக் கன்னு பின்னுவென்று பேசி வேலையிலிருந்தும் துரத்தி விட்டார். செய்யாத குற்றத்தை மறுக்கவும் திராணியின்றித் தலை குனிந்தபடியே விலகி வெளியில் வரும் சமூகக் கோழைகளில் குருமூர்த்தியும் ஒருவன். செய்தகுற்றத்தைமறைத்துக் தப்பித்துக் கொள்வது எப்படிச் சமூகத் துரோகமோ அப்படியே செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்வதும் ஒரு வகையில் சமூகத் துரோகம்தான். ஏனென்றால் தான் செய்யாத குற்றத்தைத் தன் தலையில் போட்டுக்கொண்டு நிமிர்ந்து பார்க்காமல் குனிந்தபடி வெளி வருகிற கோழை அந்தக் குற்றத்தை உண்மையில் செய்தவனைக் காப்பாற்றிக் கொடுக்கிற சமூகத்துரோகத்தையும் செய்ய உடந்தையாகிறான். குருமூர்த்தி என்றுமே அப்பாவி! வேலை போன மறு நாள் எங்கோ பக்கத்து நகரத்துக்குப் போய் வருவதாகச் சொல்லி விட்டுக் கௌரியிடம் ஐந்து ரூபாய் பணம் வாங்கிக்கொண்டு போனவன் நாளிது தேதி

வரை என்ன ஆனான், எங்கே போனான் என்ற தகவலே தெரியாமல் கிணற்றில் கல் போட்ட மாதிரி இருக்கிறது. தபால்கார நாயுடுவுக்குக் குருமூர்த்தியை அதிகம் தெரியாதென்றாலும் ஓரளவுக்குத் தெரியும்.. வருகிற தபால்களிலிருந்து மனிதர்களை ஓரளவுக்குக் கணித்து வைத்திருந்தார் நாயுடு. இந்தக் குருமூர்த்திக்குச் சாமியார்கள், பண்டாரங்கள், சோதிடர்கள் ஆகியவர்கள் மேல் பித்தும், அபிமானமும் அளவுக்கதிகமாக உண்டு. ஆண்டி மலை ஸ்வாமிகளிடமிருந்து அவனுக்கு வாரா வாரம் தபாலில் விபூதியோ ஏதேனும் ஓர் இரட்சைக் கயிறோ வரும். இருந்தாற்போலிருந்து திடீரென்று குருமூர்த்தி இரண்டு மூன்று நாள் ஊரில் தென்பட மாட்டான். மூன்றாம் நாள் திரும்பி வந்தபின் ''ஆண்டிமலைக்குப் போய்ச் சுவாமியைத் தரிசனம் பண்ணிப்பிட்டு வந்தேன் அண்ணே! அப்புறம்தான் மனசு நிம்மதியாச்சு! பேசிண்டே இருந்தப்ப சுவாமி ஒரு பிடி மண்ணை அள்ளி என் கையிலே போட்டார். அது சந்தனமா வந்து விழுந்தது'' என்று யாரிடமாவது பெருமையாகச் சொல்லிக் கொண்டிருப்பான். மனிதனை அவன் வாழ்ந்து கொண்டிருக்கிற அசல் சுகதுக்கங்கள் நிறைந்த மண்ணின் மேலும், சுற்றியிருப்பவர்கள் மேலும் நம்பிக்கையில்லாமல் பண்ணி விடுகிற எந்தச் சாமியாரையும் நாயுடுவுக்குப் பிடிக்காது. ஆனாலும் குருமூர்த்தியின் மேல் மட்டும் அவருக்கு ஏதோ ஓர் அபிமானம் உண்டு. 'வம்பு தும்புக்குப் போகாதவன் — நாணயமான பையன்' என்கிற அபிமானம்தான் அது. எனவே ஊரில் பலர் நம்பியது போல் கிருஷ்ணையவாள் கல்லாப் பெட்டியிலிருந்து குருமூர்த்தி கால் காசுகூடத் திருடியிருக்க முடியாதென்றுதான் நாயுடுவும் நம்பினார்.

குருமூர்த்தி ஊரிலிருந்து காணாமல்போன ஆறாவது நாளோ, ஏழாவது நாளோ வழக்கமாக அவருக்குப் பிரசாதமோ, இரட்சைக் கயிறோ, அனுப்பும் சாமியார்கள் யாரையாவதுதான் தேடிக்கொண்டு போயிருப்பார் என்ற அநுமானத்தோடு, ஆர். எம். குருமூர்த்தி, கேர் ஆஃப் ஸ்ரீ ஆண்டிமலைச் சித்தர் சுவாமிகள் மடம்—ஆண்டிமலை-போஸ்ட் என்ற விலாசத்துக்கு ஒரு கவர் எழுதித் தபாலில் சேர்த்துவிடச் சொல்லி நாயுடுவிடம் கொடுத்திருந்தாள் கௌரி. அவள் அந்தக் கடித உறையை ஒட்டவில்லை. நாயுடுவும் அதை அவளிடமிருந்து வாங்கிக்கொண்டு போய் அப்படியே ஒட்டித் தபாலில் சேர்த்துவிடத்தான் நினைத்தார். இருந்தாலும் ஏதோ ஓர் ஆவலால் தூண்டப்பட்டு அதைப் படித்துவிட முனைந்தார். மிக இளம் வயதிலேயே குடும்ப பாரத்தை அதிகமாகத் தாங்கிக் கொண்டு இளைக்கும் ஓர் ஏழைக் கணவனின் ஏழை மனைவி படுகிற வேதனைகளையெல்லாம் கொட்டி அவள் அதைத் தன் புருஷனுக்கு எழுதியிருந்தாள்: கடிதத்தைப் படிக்கத் தொடங்கிய நாயுடு கண் கலங்கினார்.

. தேவரீர் திருவடிகளில் அடியாள் கௌரி அநேக நமஸ்காரம் செய்து எழுதிக்கொள்வது. இன்றுடன் நீங்கள் புறப்பட்டுப் போய் ஏழு நாட்கள் ஆகிறது. எங்கே இருக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள்? ஒரு தகவலும் தெரியாமல் மனசுக்கு ரொம்பவும் வேதனையாயிருக்கிறது. குழந்தைகள் கமலியும், பாபுவும் 'அப்பா எங்கே போயிருக்கார் சொல்லும்மா'ன்னு சதா என்னைப் பிய்த்து எடுக்கிறார்கள். ஸ்டோர்க்காரக் கிழவர் வீட்டு வாடகைக்காக மூணு தரம் ஆளனுப்பி விட்டார். எனக்கானால் ஒரே கவலையாயிருக்கிறது; பயமாகவும் இருக்கிறது. நீங்கள் போன இடத்திலிருந்து ஒரு வரி கடிதாக எழுதக்கூடவா ஒழியலை? குழந்தைகளை வைத்துக்கொண்டு நான் தனியாகக் கஷ்டப்படறேன். இந்தக் கையிலே கமலி, அந்தக் கையிலே பாபு — போறாததற்கு வயித்திலே ஒண்ணு.... என்னை எல்லாரும் நச்செடுக்கறா. பால்காரன் பாக்கி, மளிகைக் கடை பாக்கி... எல்லாம் பாக்கி நிற்கிறது. பொறுப்பில்லாதவர் மாதிரி இப்பிடிப் போயிட்டா என்ன பண்றது?....''

....இப்படி ஒன்று, இரண்டா? கடந்த மூன்று மாதங்களுக்குள் — குருமூர்த்தி — போயிருக்க முடியுமென்று அவர்கள் நினைத்து அநுமானித்த மடங்கள், சோதிடர்கள், சித்தர்கள், சிநேகிதர்கள், உறவினர்கள் எல்லாருக்குமாகப் பத்துப் பதினைந்து கடிதங்களுக்கு மேல் எழுதியாயிற்று. ஒரு கடிதத்துக்கும் பதில் இல்லை. பதினோறாம் நம்பர் வீட்டுக்கு — கௌரிக்கு — ஒரு பதில் கடிதத்தையாவது கொடுத்து விட்டுத் தம் உத்தியோகத்திலிருந்து ரிடையராக வேண்டுமென்பது தபால்கார நாயுடுவின் ஆசை.

பாவம்! அவர் ரிடையராவதற்கு இன்னும் பத்து நாட்கள்தான் இருந்தன. கடந்த கால் நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாகத் தம் கைப்படக் கொண்டு போய் வழங்கிய பல்லாயிரம் கடிதங்களுக்காக — அவர் எவ்வளவோ பெருமைப்படலாம். அவரோ — வழங்கவேண்டிய கடிதமொன்றை எதிர்பார்த்து — இன்னும் கைக்கு வந்து சேராத கடிதமொன்றை இனி வரும் வரும் என்று கருதித் தவித்துக் கொண்டிருந்தார். வந்து சேராத அந்தக் கடிதமும் வந்து சேர்ந்து அதைக் கௌரியிடம் கொண்டு போய்க் கொடுத்தாலொழியத் தமது உத்தியோக வாழ்க்கை குறைவுடையதாகவே முடியும் என்பது போல் நாயுடுவுக்கு 'ஸெண்டிமெண்டலாக' ஒரு தவிப்பு வந்து விட்டது. கடைசி நாளில் கடைசி டெலிவரியிலாவது 'ஒண்ணுமில்லிங்களே, அம்மா!' என்ற வழக்கமான எதிர்மறை வார்த்தைகளை மாற்றி, 'அம்மா உங்களுக்கு ஒரு கடிதாசு வந்திருக்கு' என்று முகம் மலர அகம் மலர எடுத்துக் கௌரியிடம் கொடுத்து விடவேண்டுமெனத் தவித்தார் நாயுடு. கனகம்மாள் தெரு — பதினோறாம் நம்பர்—கௌரி என்ற விலாசம் ஒன்பதாவது பீட் போஸ்ட்மேன் நாயுடுவின் எத்தனையோ பல விலாசங்களில் சாதாரணமான ஒன்றல்ல. அந்த விலாசத்தின் கீழ்ப் பஞ்சடைந்த கண்களும், எண்ணெய் காணாத தலையும், கிழிந்த ஆடையுமாக மூன்று உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன. வெளிப்படாத இன்னோர் உயிரும் அந்தத்

வீகோ கைத்தறி ஆடைகள்



ஒரு தடவை உபயோகித்தவர்கள்

“வீகோ” சேலைகளை மிகவும் விரும்புகிறார்கள்

★

“வீகோ” சேலைகள்

நாணயமானவை, அழகிய கலர்களில் பலவித நவீன பார்டர்களும், டிசைன்களும் பொருந்தியது

“VEECO” பெயருள்ள சேலைகளையே கேட்டு வாங்குங்கள்

உற்பத்தியாளர்கள் :

K. S. VEE & CO.

VEECO PRODUCTS

FASHION CREATORS IN HANDLOOM SAREES

RANGAI GOWDER STREET, COIMBATORE - 1

தந்தி : “VEECOFABS” - போன் : 3533 - Resi : 4401

OSR

வனப்புள்ள வனிதையின்
இணைபிரியாத் தோழியர்கள்

அவளுடைய உற்றாரும், உறவினரும் அல்ல,
நெருங்கிய பந்துக்களும் மித்திரர்களும் அல்ல;
ஆனால் அவளுடைய அழகுச் சாதனப் பொருள்கள்
நிறைந்த பெட்டிதான்
அதுதான் அவளை அழகுப் பதுமையாகக் காட்டும்
எச்சமயத்திலும், எந்த இடத்திலும்,
எப்பொழுதும், என்றென்றும்.
அவளைக் கேளுங்கள், அவள் கூறுவாள்.....
அவளுடைய இணைபிரியாத் தோழியர்கள் —

ஆப்கன் ஸ்நோ

அழகுச் சாதனங்கள்



ஈ. எஸ். பட்டன்வாலா, பம்பாய்-77. (இந்தியா)

தாயின் மடியில் இருந்தது: விலாசதாரர்கள் தங்களுக்கு வராத அல்லது வர வேண்டிய ஒரு கடிதத்துக்காகத் தவிக்கும் இயல்பை நாயுடு பலமுறை கண்டிருக்கிறார். இந்த ஒரு விலாசதாரரோ தனக்கு ஒரு பதில் கடிதம் கொடுக்க முடியாத தபால்காரரையே அதற்காகத் தவித்து ஏங்க வைத்துக் கொண்டிருந்தாள்.

''நாயுடு! என் ஜன்மம் விடியவே விடியாது போலிருக்கு. அவரும் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ போயிட்டார். நல்ல தங்காள் மாதிரிக் குழந்தைகளையும் தள்ளிப்பிட்டு நான் கிணத்திலே விழுந்துட வேண்டியதுதான்! வயிறும் பிள்ளையுமாத் தனியாத் தவிக்கிறேன். ஏதோ வீட்டுலே ஒத்த ஒட்டைத் தையல் மிஷின் இருக்கு. அதுலேயும் எத்தனை பேருக்குத் தச்சுக் கொடுத்துச் சம்பாதிக்க முடியும்?'' என்று ஒரு நாள் முதல் டெலிவரி சுற்றுக்காகப் போன நாயுடுவிடம் கௌரி அழுதேவிட்டாள்.

''அழாதீங்கம்மா! எப்படியும் நான் ரிடையராகறதுக்குள்ளார உங்களுக்கு ஒரு நல்ல பதில் கடிதாக கொடுக்காம ரிடயராகிட மாட்டேன்'' என்று நாயுடுவும் கௌரிக்கு நாள் தவறாமல் ஆறுதல் கூறினார்.

மார்ச் மாதம் இருபதாம் தேதிக்கு இன்னும் மூன்றே மூன்று நாட்கள்தான் மீதமிருந்தன. இன்றைக்குத் தேதி பதினேழு. பதினெட்டு, பத்தொன்பது, அப்புறம் இருபது. மூன்று நாட்களில் இரண்டே இரண்டு நாட்கள் மட்டும்தான் முழுமையாக இரண்டு டெலிவரிக்கும் நாயுடு கடிதங்களோடு போவார். இருபதாம் தேதியோ ஒன்பதாவது பீட்டில் எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு பின்பு ஆபீஸ் வந்து அங்கேயும் எல்லோரிடமும் விடைபெற்றபின் வீட்டுக்குப் போய்விடுவார். சாயங்காலம் தபால்காரர்கள் எல்லாருமாகச் சேர்ந்து போஸ்ட் மாஸ்டர் தலைமையில் அவருக்கு ஒரு பிரிவுபசார விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். மனைவி மக்களோடு அந்த விருந்துக்கு வந்து விட்டு வீடு திரும்பினால் அப்புறம் மறுநாளிலிருந்து காக்கி உடையில் அவரைக் காண முடியாது. எல்லோரையும் போல் வெள்ளை வேஷ்டியும் முழுக்கைச் சட்டையுமாக கார்டு கவர் வாங்கத் தபாலாபீசுக்கு வந்து போக வேண்டியதைத் தவிர அவருக்கு வேறு உத்தியோகக் கடமையோ, காரியமோ இல்லை. கால் நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாகப் பொறுமையோடும், நிதானமாகவும் எல்லோருக்கும் முகம் மலரப் பதில் சொல்லிய ஒரு பழைய தலைமுறை மனிதனை — அல்லது கிழவனை — இருபத்தொன்றும் தேதி காலையிலிருந்து இனி தபாலாபீசில் காண முடியாது.

நாட்கள்தான் என்ன வேகமாக ஓடுகின்றன! பதினெட்டாம் தேதியும் பதினேழாம் நம்பர் கௌரிக்குப் பதில் கடிதத்தைக் கொண்டு வராமலே ஓடிவிட்டது. பத்தொன்பதாம் தேதியும் அப்படியே ஓடிவிட்டது. இருபதாம் தேதி — முதல் டெலிவரிக்கு லெட்டர்களை சார்ட் செய்துகொண்டிருந்தபோது அன்றும் பதினேழாம் நம்பர்ப் பெண்ணுக்கு ஒரு பதில் கடிதம் வராமலே போய்விடுமோ என்ற பயத்தில் நாயுடுவுக்குக் கைகள் நடுங்கின. அவள் எழுதிக் கொடுத்து அவர் வாங்கித் தபாலில் குருமூர்த்திக்குப் போட்ட கடிதங்களெல்லாம் ஒவ்வொன்றாக 'அட்ரஸி நாட் நோன்' என்ற சிவப்பு மை அடிப்புடன் திரும்பி வந்ததைத் தவிர பதில் கடிதம் ஒன்றுகூட இதுவரை அவளுக்கு வந்ததில்லை. வயிறும் பிள்ளையுமாகத் தவிக்கும் ஒரு சுமங்கலியை ஏமாற்றிவிட்டு ரிடையராகி நடப்பதைவிட அவள் முகத்தில் சிரிப்பைப் பார்த்துவிட்டு ரிடையராகி விடுகிற ஆத்ம திருப்திக்கு நாயுடு ஆசைப்பட்டார்.

தெய்வம் அவருடைய ஆசையைப் பாழாக்கவில்லை. கடிதங்களை சார்ட் செய்து கொண்டே வந்தவர் பின்புறமாகக் கார்டின் அட்ரஸ் இருக்கும் அஞ்சலட்டையின் முதுகுப் பக்கத்தில் கௌரி அம்மாள் — 17, கனகம்மாள் தெரு, என்ற விலாச எழுத்துக்களைப் படித்துவிட்டுத் துள்ளிக் குதித்துப் பரவசமானார்! 'கடைசி கடைசியாக இந்தப் பதினேழாம் நம்பருக்கு ஒரு பதில் வந்து விட்டது. என்ன ஆனந்தம்!

வெறும் கார்டுதான்! கார்டானாலும் அது ஒரு பதில்தானே? கார்டோ கவரோ கடிதம் என்பது செய்தியைத் தாங்கி வரும் ஒரு வாகனம். மதிப்பு என்னவோ எல்லாத்துக்கும் ஒண்ணுதான். 'இப்போதே 'பீட்'டின் மற்ற வீதிகளையெல்லாம் விட்டுவிட்டு நேரே போய் இதைப் பதினேழாம் நம்பர் வீட்டுப் பெண்ணின் கையில் கொடுத்துவிட்டு உடனே ரிடையராகி விட்டால் என்ன?' என்று ஆனந்தமும் பரவசமும் மேலிடத் தனக்குள் நினைத்தார் நாயுடு. ஆனால் அப்படிச் செய்ய முடியுமா? முறை என்று ஒன்று இருக்கிறதே? ஒன்பதாம் நம்பர் பீட் நாயுடுவின் ஆறு தெருக்களில் நான்காவது சுற்றில்தான் கனகம்மாள் தெருவே வரும். அன்று அவருக்கிருந்த குதூகலத்தில் மற்ற மூன்று தெருக்களையும் முக்கால் மணி நேரத்தில் சுற்றிக் கடிதங்களைப் பட்டுவாடா செய்துவிட்டு விரைவாகக் கனகம்மாள் தெருவுக்குப் பறந்தார். கனகம்மாள் தெருவுக்குள் நுழைந்தாலும் பதினேழாம் நம்பருக்கு முன்னால் பதினாறு வீடுகள் இருக்கின்றனவே? அதில் சராசரி பத்து வீட்டுக்காவது நாள் தவறாமல் கடிதங்கள் இருக்கும். பொறுமையாக அவற்றையும் பட்டுவாடா செய்து முடித்துவிட்டு மேலாக இருந்த — கௌரி அம்மாள் — பதினேழு — கனகம்மாள் தெரு என்ற கார்டின் முதுகுப்புறத்தைப் புரட்டி, 'என்னதான் பதில் வந்திருக்கிறது? இந்தக் குருமூர்த்தி எங்கேதான் போய்த் தொலைந்திருக்கிறான்? தெரிந்து கொள்ளலாமே!' என்ற ஆவலோடு முன் பக்கமாகத் திருப்பி அந்தக் கார்டைப் படித்தவர் அப்படியே பேயறை பட்டவர் போல் திகைத்து நின்றார். கண்களிலிருந்து நீர் வடிய ஆரம்பித்தது. உடம்பு கிடுகிடுவென்று நடுங்கியது. அதுவரை அவர்கள் குருமூர்த்திக்குக் கடிதமே எழுதித்

தேடாது விட்டிருந்த ஒரு புதுச் சாமியாரின் மடத்திலிருந்து அக் கடிதம் வந்திருந்தது.

''ஸ்ரீமதி கௌரி அம்மாளுக்குக் கடுவன் மலை சித்தானந்த சாமிகள் மடத்துக் காரியஸ்தர் எழுதுவது: இதில் எழுதப் போகிற செய்தியைத் தாங்கிக் கொள்கிற மனப்பக்குவத்தைக் கடவுள்தான் உங்களுக்குக் கொடுக்க வேண்டும். உங்கள் கணவர் ஸ்ரீ குருமூர்த்தி அவர்கள் நம் சாமிகளைப் பார்க்கச் சில மாதங்களுக்கு முன் இங்கு வந்தார். வாழ்வில் தமக்கு மிகவும் போதாத காலமாகிவிட்டதென்றும் காரியசித்தி ஆக ஏதாவது பரிகாரத்தைக் கூற வேண்டும் என்றும் சாமிகளைக் கேட்டார். சாமிகள், 'சில மாதங்கள் இங்கே தங்கி மௌன விரதம் இருந்து அதிகாலை நாலு மணிக்கு எழுந்து மலை உச்சியில் உள்ள கோவிலை ஒன்பது தரம் சுற்றிப் பிரார்த்திக்க வேண்டும். நாளடைவில் தனியாக ஒரு ஓட்டலே நடத்துகிற உயர்நிலை கைகூடும்' என்று உங்கள் கணவருக்குக் கூறியருளினார். சாமிகள் கூறியபடியே செய்து வருகையில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன் அதிகாலை இருளில் மலையைச் சுற்றும்போது மழை பெய்து வழுக்கலாயிருந்த பாறையில் சறுக்கி மலையிலிருந்து ஸ்ரீ குருமூர்த்தி அவர்கள் மூவாயிரம் அடி பள்ளத்தில் விழுந்து துர்மரணம் அடைந்து விட்டார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.''

''கடிதாசு ஒண்ணும் இல்லியா நாயுடு?''

நாயுடு அதைப் படித்து முடிப்பதற்குள் கௌரி தன் வழக்கமான கேள்வியுடன் குழந்தைகளோடு வாசலுக்கு வந்துவிட்டாள்.

இரண்டு நிமிஷங்கள் பதிலே சொல்லத் தோன்றாமல் கண்களில் நீர் பெருகிட அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்த நாயுடு மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ''ஒண்ணுமில்லிங்களே அம்மா!'' என்று உடைந்த குரலில் பதில் சொல்லிவிட்டுத் தயங்கித் தயங்கி மேலே நகர்ந்தார். இருபத்தைந்து வருட காலத்துக்கு மேலாக நாணயமாகப் பணி புரிந்த அந்தத் தபால்காரர் ரிடையராவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன் ஒரு விலாசதாரரின் கடிதத்தை அவரிடம் கொடுக்காமலே தனியாகவும் பத்திரமாகவும் எடுத்துப் போய்க் கிழித்தெறிகிற குற்றத்தைச் செய்யும்படி அன்று நேர்ந்துவிட்டது. அவர் இன்று மறைத்து விட்டதனால் இந்த அவலம் வாழ்நாள் முழுவதுமே பதினோராம் நம்பர்ப் பெண்ணுக்குத் தெரியாமலிருந்துவிடப் போவதில்லை. ஆனால் அதை அவளிடம் கொடுத்து விட்டு அவள் படுகிற துயரைச் சகிக்கும் தைரியம் அல்லது கடுமை நாயுடுவிடம் இல்லை என்றுதான் கூற வேண்டும். 'தபால்காரன் என்பவன் பலருடைய கடிதங்களைச் சுமந்து கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அப்படிச் சுமந்து கொண்டு போகிற கடிதங்களில் அவற்றை அடையப் போகிறவர்களின் சுகமும் இருக்கலாம், துக்கமும் இருக்கலாம். அதிர்ச்சியும் இருக்கலாம், ஆனந்தமும் இருக்கலாம். இருப்பினும் அவற்றைத் தபால்காரன் சுமப்பதில்லை' என்பதுதான் உத்தியோகத்தைப் பொறுத்த வரையில் நாயுடுவின் சித்தாந்தம். ஆனால் இந்தப் பதினோராம் நம்பர்ப் பெண்ணுக்குக் கடைசி நாளில் தன்னைப் பொறுத்தவரை கடைசி டெலிவரியில்கூட ஒரு நல்ல பதில் கடிதத்தைக் கொடுக்க முடியாமல் போன ஏக்கம் அவருடைய மண்டை உள்ள வரையில் வேகாது.

அன்று சாயங்காலம் தபாலாபீஸில் போஸ்ட்மாஸ்டர் தலைமையில் நடந்த விருந்தில் தபால்காரர்கள் சங்க யூனியன் காரியதரிசியாகிய அரசு இளம்பாலன் என்ற இளைஞர் 'நாயுடு மலர்ந்த முகத்தினர். அவருடைய கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட சேவை நமக்கு ஓர் இலட்சியமாகும்' என்று ஏதேதோ பாராட்டிப் பேசினார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த நாயுடுவோ தலை குனிந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். அது ஆனந்தக் கண்ணீர் என்று மற்றவர்கள் நினைக்கலாம். உண்மையில் ஓர் அழகிய சுமங்கலிக்கு நேர்ந்து விட்ட அவலத்தை மனத்தில் தாங்கி அவர் கலங்கிக் கொண்டிருந்தார். பாற்கடலின் விஷத்தைத் தன் நெஞ்சில் வாங்கி வைத்துக் கொண்டு மற்றவர்களை எல்லாம் காப்பாற்றிய பரமசிவனைப் போல் பதினோராம் நம்பருக்கு வந்த பதிலின் துக்கத்தை முழுதும் தன் மனத்துக்குள் வாங்கி வைத்துக் கொண்டு நாயுடு அழுவது யாருக்குப் புரியும்?

குண்டுமல்லிகை

அத்தியாயம் ஐம்பத்திரண்டு

அரு. ராமநாதன்

விஷமச் சிரிப்பு

மறுநாள் பகற்பொழுது முழுதும் பிச்சுமணி தன் பங்களாவிலேயே மிகவும் உற்சாகமாக இருந்தான். காலே டிபன், மத்தியானச் சாப்பாடு, மாலே தேநீர் முதலானவற்றை யெல்லாம் அவன் ருசித்து ருசித்துச் சாப்பிட்டான். பத்திரிகைகளில் புதிதாகப் படித்த ஹாஸ்யத் துணுக்குகளை யெல்லாம் தன் தாத்தாவிடம் சொல்லிச் சொல்லிச் சிரித்தான். தன்னைக் குழந்தையாக இருக்கும்போது தன் தாத்தா வளர்த்த விதங்களையும், தான் செய்த குறும்புத் தனங்களையும் அவரிடம் கேட்டுக் கேட்டு அகமகிழ்ந்தான். மேஜரின் பழங்காலத்து வீரப் பிரதாபங்களையும், அவருக்கு வீரப் பதக்கங்கள் கிடைத்த விவரங்களையும் கூடப் பிச்சுமணி அக்கறையோடு கேட்டுப் பெருமையால் பூரிப்பதுபோல் பாவனைகள் செய்தான்.

அவன் தன் தாத்தாவை அன்று விசேஷமாகத் தாஜா செய்ய முயல்கிறான் என்பதும் ஒவ்வொரு நாழிகையும் எதையோ எதிர்பார்த்து உற்சாகமாக இருக்கிறான் என்பதும் மேஜர் ராமதுரைக்குப் புரிந்ததே தவிர அவற்றின் உள்நோக்கம் அவருக்குப் பிடிபடவில்லை. தம் பேரன் முன்னாள் இரவு லலிதாவின் வீட்டு டின்னருக்குப் போய்விட்டு வந்ததிலிருந்து அத்தகைய புதிய உற்சாகம் கிளம்பியிருக்கிறதோ என்றும் அவரால் தீர்மானிக்க முடியவில்லை. பிச்சுமணி — லலிதா கல்யாண சம்பந்தமாக இரு தரப்பாரும் செய்ய வேண்டிய சீர்வரிசைகள், தயாரிக்கவேண்டிய ஆடையலங்காரங்களையெல்லாம் பற்றி ஒரு 'லிஸ்ட்' அன்று காலையிலேயே லலிதாவின் அப்பா அனுப்புவதாகக் கூறியிருந்தார். அந்த 'லிஸ்ட்' இன்னும் வந்து சேராதது வேறு மேஜருக்கு விசித்திரமாகத் தோன்றியது.

''என்னடா, பிச்சுமணி! இன்றைக்கு ஒரே குஷியாக இருக்கிறாயே; என்ன விஷயம்?'' என்று மேஜர் ராமதுரை வினயமாகக் கேட்டார்.

''அதுவா, தாத்தா? இன்று என்னுடைய வாழ்க்கையிலேயே ஒரு திருப்பம் ஏற்படப் போகிறது!'' என்றான் பிச்சுமணி உற்சாகமாக ஒரு புதிர் போடுவது போல.

''அது என்னடா திருப்பம்?'' என்று மேஜர் கேட்டபடி திருதிருவென்று விழித்தார்.

அதற்குப் பிச்சுமணி பதில் சொல்லாமல் தன் கண்களைச் சிமிட்டினான். அப்போது அவன் கண்களில் விளையாடிய புன்சிரிப்பில் ஒரு விஷமத்தனமான புத்தொளி மின்னியது.

அவன் சிறுவனாக இருந்தபோது தன் தாத்தாவிடம் காட்டப் போகும் குறும்புத்தனமான விளையாட்டுக்களுக்கெல்லாம் கட்டியம் கூறுவது போல் அவனுடைய கண்களில் அத்தகைய ஒளி தான் முதலில் மின்னும்! அந்த விஷமத்தனமான ஒளி வீச்சு இத்தனை வருஷங்களாக மேஜரின் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்து அடிக்கடி பளிச்சிடுவதும் உண்டு.

பிச்சுமணியின் பால பருவத்தில் அவனுக்குத் தந்தை இல்லாத குறையும் தாய் இல்லாத குறையும் மட்டுமல்ல, விளையாட்டுத் தோழனில்லாத குறையும் அவனுக்குத் தெரியாதபடி அவர் ஒருவரே தந்தையாகவும், தாயாகவும், தோழனுமாகவும் விளங்கி வந்தார். பங்களாக் காம்பவுண்டின் சுவர்களுக்குள்ளேயே சிறைப்பட்டிருக்கும் சிறுவன் விளையாட்டுத் தோழன் இல்



லாத குறையால் ஏங்கி வாடிவிடக் கூடாதே என்பதற்காக, மேஜரே அவனுக்குச் சமதையான குழந்தையாக மாறிப் 'பலீங் சடுகுடு', பம்பரம், பந்து, கோலி, கிட்டி முதற் கொண்டு சமீபத்திய சீட்டாட்டம் வரையில் அவ்வவ் வயதுகளுக்கேற்ற விளையாட்டுக்களிலெல்லாம் ஈடுபட்டுத் தம் பேரனை மகிழ்வித்துத் தாமும் மகிழ்வார். தமது பட்டாளத்து வீரக் கதைகளையெல்லாம் சொல்லித் தம் பேரனின் குதிரையேற்றத்திற்குத் தாமே குதிரையாகவும் மாறி விடுவார். இவ்வாறு தமக்குத் தம் பேரனும், அவனுக்குத் தன் தாத்தாவையும் தவிர வேறு உலகமே இல்லை என்ற நிலையையும் வளர்த்து வந்தார். பிச்சமணியும் அதனால் தன் தாத்தாவிடம் சிறிதும் பயமில்லாமல் தனக்குச் சமதையான சிறுவர்களிடம் காட்டக் கூடிய விஷமத்தனங்கள், முரட்டுத்தனங்களையுங் கூடத் தன் தாத்தாவிடம் பிரயோகிக்கவும் தயங்க மாட்டான்.

ஒரு சமயம் மேஜர் தம் வீரப் பதக்கங்களைத். தம் சலவை வேஷ்டியாலே வெகு நேரம் சுத்தமாகத் துடைத்துப் பளிச்சென்று மின்னும்படி கண்ணாடி அலமாரியில் அலங்காரமாக வைத்திருந்தார். அவற்றைச் சிறுவன் பிச்சமணி தூக்கிக்கொண்டுபோய்த் தோட்டத்துப் புழுதியில் உருட்டி விளையாட ஆரம்பித்து விட்டான். அதைக்கண்டதும் மேஜர் தம்மை மறந்த ஆத்திரத்தோடு கையை ஓங்கி



ஓங்கிப் பிச்சமணியை அடிக்கலானார். அப்போது பட்லர் இருதயசாமிதான் குறுக்கிட்டு, ''என்னய்யா? தாய் தகப்பனில்லாத குழந்தையைப் போட்டு இப்படிக் கொல்றீங்களே? இதுக்காகத்தான் தாயிடமிருந்து குழந்தையைப் பிரிக்க வந்தீங்களோ?'' என்று கேட்டான். அந்தக் கேள்வி பட்லரின் தகுதிக்கு மிக அதிகப்

பட்டதாக இருந்தாலும் அது ஒன்றே மேஜரை வீழ்த்திச் செயலற்றவராக்குவதற்கும், குழந்தையைக் காப்பாற்றுவதற்கும் உதவியது! அதன் பிறகு பிச்சுமணி குரோதத்துடன் முனகிக் கொண்டே பங்களாவினுள் விருட்டென்று ஓடினான். அங்கு மாடியில் தொங்கிய தாத்தாவின் பெரிய பட்டாளத்துத் துப்பாக்கியையே தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு அவன் மாடிப் படிகளில் தட்டுத் தடுமாறி இறங்கியபடியே, ''ஏய் தாத்தா! என்னை அடிச்சே, இல்லே? உன்னைச் சுட்டுத் தள்ளுகிறேன், பார்!'' என்று பயமுறுத்தினான். அதைக் கண்டு மேஜர் உண்மையிலேயே பயந்து நடுங்கி விட்டார். ஏனெனில் அந்தத் துப்பாக்கியில் குண்டுகளைப் புலி வேட்டைக்காகத் தயாராக நிரப்பியிருந்தார். அந்தக் குண்டுகளில் ஏதேனும் ஒன்று தவறி வெடித்துவிட்டால் என்ன செய்வது? அந்தக் குண்டு தம் உயிரைக் குடித்துவிடுமோ என்பதைவிடத் தவறித் தம் பேரன் மீதே பாய்ந்து ஏதேனும் காயம் உண்டாக்கி விடுமோ என்றுதான் மேஜர் அதிகம் பயந்தார்! அதன் பிறகு தம் பேரனிடம் கெஞ்சிக் கூத்தாடியும், பட்லர் இருதயசாமியைக் கொண்டு சிபாரிசு செய்யச் சொல்லியும் அரும்பாடு பட்டும்தான் அந்தத் துப்பாக்கியை அவரால் கைப்பற்ற முடிந்தது.

ஆனால் அந்தச் சம்பவம் நிகழ்வதற்கு முன்னால், அதற்குக் கட்டியங் கூறுவது போல் சிறுவன் பிச்சுமணியின் கண்களில் இதைப் போன்ற விஷமத்தனமான ஒரு புத்தொளிதான் மின்னியது ! அதிலிருந்து பிச்சுமணியின் கண்களில் அத்தகைய விஷமத்தனமான புன்சிரிப்பைக் கண்டாலே மேஜருக்கு ஏதோ ஒரு பயம் பிடித்துக்கொள்ளும்.

''டேய், பிச்சுமணி! இப்போது நீ என்ன விஷமத்தனம் பண்ணப் போகிறாய்?'' என்று மேஜர் ராமதுரை பரபரப்புடன் கேட்டார்.

''அது எதுவாக இருந்தாலும் நல்லதுக்காகத்தான் இருக்கும், தாத்தா!'' என்று பிச்சமணி மறுபடியும் கண்களைச் சிமிட்டினான்.


''நல்லது, கெட்டது உனக்கென்னடா தெரியும்? மடையன்! மடையன்!'' என்று மேஜரால் முணுமுணுக்க முடிந்ததே தவிர பிச்சுமணியிடமிருந்து எந்தவிதப் பதிலையும்பிடுங்கமுடியவில்லை.

சிறிது நேரத்தில் லலிதாவின் தந்தையான மருதநாயகம் அங்கு வந்து சேர்ந்தார். கல்யாணத்தின் சீர் வரிசை சம்பந்தமான 'லிஸ்டு'தான் அவர்கொண்டு வருகிறாரோ என்று நினைத்த மேஜர் ஆவலோடு துள்ளிச் சென்று, ''வாப்பா, மருத நாயகம், வாப்பா!'' என்று உற்சாகமாக வரவேற்றார். ஆனால் மருத நாயகத்தின் முகத்தில் நிரம்பியிருக்கும் வேதனையைப் பார்த்ததுமே மேஜரின் உற்சாகமெல்லாம் நாடி தளர்ந்து அடங்கி விட்டது.

மருத நாயகம் ஒரு முறை பிச்சுமணியை ஏற இறங்கப் பார்த்து விட்டு மேஜரைத் தனியாக ஓர் அறைக்கு அழைத்துச் சென்று அவரிடம் சில வார்த்தைகள் பேசினார். அவ்வார்த்தைகளே கிழவரின் உள்ளத்தைச் சுக்கல் நூறாக உடைத்தெறியப் போதுமானவையாக இருந்தன.

''ராமதுரை! நீங்கள் மனமுடையும் படியான ஒன்றைத்தான் நான் இப்போது சொல்லப் போகிறேன். அதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் பேரன் பிச்சுமணிக்கு என் பெண் லலிதாவைக் கலியாணம் செய்து கொடுக்க முடியாது! அதற்குக் காரணம் கேட்டு என்னை அதிகமாக வற்புறுத்தாதீர்கள். முன்பு நான் கொடுத்த வாக்கை மீறுகிறேன் என்றும் ஆத்திரப்படாதீர்கள்! உங்கள் பிச்சுமணியின் தாயாரைப் பற்றிய ஒரு விஷயம் இப்போதுதான் லலிதாவின் மூலம் எனக்குத் தெரிந்தது. உங்கள் நெருங்கிய நண்பனாக நான் இருந்தும்கூட, அந்த விஷயத்தை என்னிடம் சொல்லாமல் மூடி மறைத்து இந்தக் கலியாணத்தை அவசர அவசரமாக நடத்திவிட நினைத்தீர்களே, அதற்காக உங்கள் மீது நான்தான் ஆத்திரப்பட வேண்டும்! என் பெண்ணின் எதிர்காலத்தையும், அவளுடைய விருப்பத்தையும் நினைக்கும்போது என் வாக்கைக்கூட மீற வேண்டிய நிலையில் இருக்கிறேன். இந்தத் தகவலை மூன்றாவது மனிதர் மூலம் சொல்லி யனுப்பக் கூடாது என்பதற்காகத்தான் நானே நேரில் வந்தேன்!'' மருத நாயகம் வேதனையோடு கூறி முடித்து விட்டு அந்த விஷயத்துக்கே ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்பியவர் போல் மெல்ல எழுந்தார்.

கிழவர் ராமதுரை சில கணங்கள் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்திருந்தார். பிச்சுமணியின் தாயார் ஒரு நாடகக்காரி, அவளைப் பிச்சுமணியின் தகப்பன் கல்யாணம்கூடச் செய்து கொள்ளாத நிலையில் பிச்சுமணி பிறந்தான் என்கிற விஷயத்தை அவர் எவ்வளவுதான் பரம இரகசியமாக மறைத்து



அன்புகொழிக்கும் அருமை வாழ்வு

அழகு மிளிரும் ஆல்வின் அவளுடைய மனதைக் கவர்ந்து விட்டது. சுவைமிக்க ஐஸ்கிரீம், நாவில் நீர் சுரக்கவைக்கும் ஜெல்லி, "சோ:ப்லே", "பிளமான்ஜ்", குளுமையான பழங்கள், குளிர்ந்த பானங்கள், நாள் முழுவதும் கிடைத்துக் கொண்டிருக்கும் பெருமளவு ஐஸ் ஆகியவை தந்து அவளைக் கொஞ்சி மகிழ்விக்கிறது ஆல்வின். அவளுடைய பெருமைக்கு அளவே இல்லை. **இதைவிடச் சிறந்தது அவளுக்குக் கிடைத்திருக்காது.**



குறைந்த அளவு மின்சாரமே போதும்.
மற்ற ரிப்ரிஜிரேடர்களைப்போலன்றி மாதந்தோறும் ஒரு சில ரூபாய் பெறுமான மின்சாரமே ஆல்வினுக்குப்போதும்.

ஐஸ் உற்பத்தி விரைவில்.
1½ மணி நேரத்திற்குள்ளேயே உங்கள் குடும்பம் முழுவதற்கும் தேவையான ஐஸ் கிடைக்கும். இவ்வகையைச் சேர்ந்த வேறு எவ்வித ரிப்ரிஜிரேடரும் இவ்வித பணியாற்றுவதில்லை.

விசேஷ பாகங்கள்.
டேபிள் டாப், வாட்டர் கூலர், குளிர் நீர்க்குழாய் (இதற்குத் தனியாகப் பணம் செலுத்த வேண்டும்.)

விலை ரூபாய் 1,090
(எக்ஸைஸ் டூட்டியும் வரி தனி)
கொள்ளும் திறன் 4.4 கன அடி. சீல்டு யூனிட் 5 ஆண்டுகளுக்கு உத்திரவாத மளிக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டிற்கு இலவசச் சேவை.

ஆல்வின் வரிசையில்,
ஆல்வின் பிரஸ்ட்கோல்டும் (6.5 கன அடி) ஆல்வினும் (9 கன அடி) சேர்க்கப்பட்டுள்ளன.

புதிய **ஆல்வின்**
ரிப்ரிஜிரேடர் 4.4 கன அடி

தி ஹைதராபாத் ஆல்வின் மெடல் வொர்க்ஸ் லிட்., சனத்நகர், ஹைதராபாத்-18

ASP/HAM/E-5 TAM

பம்பாய் ஆபீஸ் : ஆக்ரா ரோடு, பாண்டுப், பம்பாய் - 78
கல்கத்தா ஆபீஸ் : பீர்புரா லேன், டம் டம், கல்கத்தா-30
சென்னை ஆபீஸ் : ராயபுரம், சென்னை

ஷோரூம்கள் :
15/1, ஆஸப் அலி ரோடு, புது டில்லி
216, கன்பவுண்ட்ரி, ஹைதராபாத்

வைத்திருந்தும், இருபது வருஷங்களுக்குப் பிறகு இந்தக் கலியாண சமயத்தில் அது பூதாகாரமாகக் கிளம்புகிறதே யென்று அவர் உள்ளம் நொந்தார்.

''மருதப்பா, கொஞ்சம் நில்!'' என்று மேஜர் கண் கலக்கத்துடன் அவரை ஏறிட்டு நோக்கி, ''என் பிச்சுமணியின் தாயாரைப் பற்றிய விஷயம் உண்மைதான்! ஆனால் அதை வேண்டுமென்றே உன்னிடம் நான் மூடி மறைக்கவில்லை. நானே அதை ஒரு துர்க்கனவுபோல் மறந்து விட்டேன். பிச்சுமணி பிறந்த வுடனேயே அவனைத் தாயிடமிருந்து நான் எடுத்து வந்து என் பேரனாகவே வளர்த்து ஆளாக்கியிருக்கிறேன். ஒருவேளை பிச்சுமணியின் தகப்பன் முறையாகக் கலியாணம் செய்து கொள்ளாமல் பிறந்த பையன் என்பதால் பிச்சுமணிக்கு என் சொத்தில் உரிமையில்லாமல் போய் விடுமோ என்று நீ யோசிக்க வேண்டாம்! பிச்சுமணி, லலிதா இருவர் பெயருக்குமே என் சொத்துக்கள் அனைத்தையும் இப்பொழுதே எழுதி வைத்து விடுகிறேன்!'' என்றார்.

''என் பெண்ணுக்கு நான் சேகரித்து வைத்திருக்கும் சொத்துக்களே போதும்! உங்கள் சொத்துக்களுக்கும் ஆசைப்பட்டு அவளும் தன் ஜாதியை இழந்து விட வேண்டாம். மேலும் அவள் எனக்கு ஒரே பெண்ணாதலால் என் பரம்பரையும் கலப்படமாகி விடக் கூடாது. ஆகவே உங்கள் பிச்சுமணிக்கு எவளாவது கலப்பு மணத்தால் பிறந்த பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து வைப்பதுதான் நல்லது!''

''மருதப்பா! என் நிலையையும் சற்று யோசித்துப் பார்!'' என்ற மேஜர் தழுதழுக்கும் குரலிலே, ''என் பரம்பரைக்கும் இருப்பதெல்லாம் பிச்சுமணி ஒருவன்தான்! அவனை என் பேரன் என்றுதான் எல்லோரும் மதிக்கிறார்களே தவிர, அவனுடைய தாயாரைப் பற்றி யாரும் நினைப்பதேயில்லை. அவனுக்குக் கூடத் தன் தாயைப் பற்றிச் சரியாகத் தெரியாது. அப்படியிருக்கும் போது இருபது வருஷங்களுக்கு முன் மறைந்து போன அந்தத் தாய்க்காரியைப் பற்றி இப்போது ஏன் பேச்செடுத்து நீ ஜாதிப் பிரச்னையைக் கிளப்புகிறாய்? உனக்கு ஜாதியா பெரிதென்று நினைக்கிறாய்?'' என்றார் அழாத குரலில்.

''இதில் என் நினைப்பு முக்கியமல்ல! என் பெண்ணின் நினைப்புத்தான் முக்கியம்!''

''அப்படி அவள் என்னதான் நினைக்கிறாள்?'' என்று மேஜர் சற்றுக் கோபமாகவே கேட்டார்.

''கல்யாணமாகாத ஒரு நாடகக்காரி தனக்கு எதிர்கால மாமியாராக இருப்பதை லலிதா விரும்பவில்லை!'' என்று மருதநாயகம் சற்றுக் காட்டமாகவே சொன்னார்.

''நம் நட்பையும் சம்பந்தத்தையும் விட உன் பெண்ணின் விருப்பமா பெரிது? யோசித்துப் பார், மருதப்பா!'' என்று மேஜர் தம் தன்மானத்தையெல்லாம் மறந்து கெஞ்சினார்.

குட்டிக் கதை



ஒரு டாக்டரிடம் இரண்டு நோயாளிகள் வந்தார்கள். இரண்டும் கடுமையான கேஸ். ஒருவருக்கு மூளையிலும் மற்றவருக்கு இருதயத்திலும் அறுவை வைத்தியம் நடத்த வேண்டும்.

டாக்டர் ரொம்பவும் கெட்டிக்காரர்.

இரண்டுபேருக்கும் வெற்றிகரமாக சஸ்திர சிகிச்சை செய்து முடித்தார். தையல் போட்டு முடிந்த பின்னர் பார்த்தால், மூளையும் இருதயமும் மேஜை மேலேயே கிடக்கின்றன! யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று சட்டென்று எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார். (உஷ்! சிரிக்கக் கூடாது. விஞ்ஞான உண்மைகள் இங்கே பொருந்தா!) சில நாட்களில் உடல் நலமடைந்த அவ்விருவரும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

சில ஆண்டுகள் கடந்தன.

முன்பு நோயாளிகளாக இருந்த அவ்விருவருமே ஓர் இடத்தில் தற்செயலாகச் சந்தித்துக்கொண்டார்கள்.

மூளை ஆபரேஷன் செய்துகொண்டவர்: உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே?

இருதய ஆபரேஷன்காரர்: நம் இருவருக்கும் ஒரே நாளில் சிகிச்சை நடந்ததே! இப்போது என்ன உத்தியோகம் பார்க்கிறீர்கள்?

முதல்வர்: ரயில்வேயில் மாவட்டப் போக்குவரத்து அதிகாரியாக இருக்கிறேன். நீங்கள்?

இரண்டாமவர்: நானும் ரயில்வேயில்தான் இருக்கிறேன் — மாவட்ட தொழிலாளர் நல அதிகாரியாக!

(பல்வேறு ரயில்வேக்களில் அடிக்கடி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் இந்த ஹாஸ்யத்தை அதிகாரிகள் ஹாஸ்யமாகவே எடுத்துக் கொள்வார்களாக!) —டி. எஸ். கே.

''நம் சம்பந்தம் வேறு நம் சந்ததிகளின் வாழ்க்கை வேறு!'' என்று தீர்மானமாகக் கூறிய மருதநாயகம், ''இனி மேல் நாம் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவது நல்லதல்ல!'' என்று சொல்லி விட்டு 'விர்'ரெனப் போய் விட்டார்.

மேஜர் தம் தலை வெடித்து விடாத படி இரு கைகளாலும் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அவருடைய மூளைக்குள் புதிதாக ஓர் எண்ணம் குடைந்தது. 'பிச்சுமணியின் தாயாரைப் பற்றிய ரகசியம் லலிதாவுக்குத் திடீரென்று எப்படித் தெரிந்தது? நேற்றிரவு லலிதாவின் வீட்டு டின்னருக்குப் போயிருந்த பிச்சுமணிதான் அவளுக்கு இந்த ரகசியத்தைச் சொல்லியிருப்பான்! தன் தாய் கல்யாணமாகாத ஒரு நாடகக்காரி என்ற கேவலமான விஷயத்தைக் கூட அவன் லலிதாவிடம் வெளியிட்டு இந்தக் கலியாணத்தை நிறுத்திவிடத் துணிந்திருக்கிறான் என்றால் அவ்வளவு தூரம் அவனைத் தூண்டி விட்டிருப்பது அந்த வாத்தியாரம்மா உமாவின் தந்திரமாகத்தான் இருக்கும்!' இவ்வாறு எண்ணமிட்ட மேஜர் சீண்டி விடப்பட்ட காட்டுப் புலி போல் துள்ளியெழுந்து, தம் பலம் முழுவதையும் தம் வலது கையில் திரட்டி முஷ்டி பிடித்துக் கொண்டு அந்த அறையிலிருந்து வெளியே பாய்ந்து வந்தார்.

வெளியே, கொலுக் கூடத்தில் பிச்சுமணி அதே விஷமப் புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்!

மேஜர் தம் முஷ்டி பிடித்த கையை ஓங்கித் தம் எதிரில் உள்ள மேஜையின் மீது ஒரு குத்து விட்டார். அதைத் தாங்க முடியாமல் மேஜையின்மீது கொலு வீற்றிருந்த பழங்களெல்லாம் நாலாபுறமும் குதித்தோடின.

ஆனால் அப்போதும் பிச்சுமணி சிறிதும் கலங்காமல் அதே விஷமப் புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்! போராட்டத்துக்குத் தயாராகிச் சம பலத்துடன் நிற்கும் எதிரியைப் போலவே அவன் அப்போது தோற்றமளித்தான்.

''டேய், பிச்சுமணி! நீ லலிதாவிடம் என்ன சொன்னாய்?'' என்று மேஜர் வீறிட்டுக் கத்தினார்.

''அதையெல்லாம் உங்களிடம் சொல்ல வேண்டுமா தாத்தா?''

''ஆமாம். சொல்லத்தான் வேண்டும்!''

''நான் லலிதாவிடம் போய் அவளை நான் காதலிக்கவில்லை என்றும் அவளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பவில்லையென்றும் சொன்னேன். ஆனால் இந்தக் கலியாணத்துக்கு என் தாத்தா வாக்களித்திருக்கிறார் என்றும் தம் வாக்கையே பெரிதாக மதிப்பார் என்றும் சொன்னேன். இந்தத் தர்மசங்கடமான நிலை தீருவதற்கு அவளே ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவள் 'உன் தாத்தா வாக்கு மீற வேண்டாம். என் அப்பாவே வாக்கு மீறியவராக இந்தக் கலியாணத்தை நிறுத்தி விடுவார்' என்று உறுதி சொன்னாள். சொன்னபடியே இப்போது செய்தும் விட்டாள்! அவள் நல்லவள்! அவளுடைய அப்பாவும் நல்லவர்! தன் வாக்கை விடத் தன் பெண்ணின் வாழ்க்கையே பெரிதென்று நினைத்திருக்கிறார்!''

''நீ வேறொரு பெண்ணைக் காதலிப்பதாகவும் அவளிடம் சொன்னாயா?''

''ஆமாம்!''

''டேய், பிச்சுமணி! உன் விஷமத்தனத்தால்தான் இந்தக் கலியாணம் நின்று போயிருக்கிறது. நீ இப்படியெல்லாம் ஏட்டிக்குப் போட்டியாகச் செய்யக் கூடியவன்தான்! நீ பொடிப் பயலாக இருந்த காலத்திலிருந்தே உன்னை எனக்குத் தெரியுமடா!'' என்று மேஜர் குமுறினார்.

''தாத்தா! எனக்கும் லலிதாவுக்கும் கல்யாணம் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன்! ஆனால் அதே சமயம் நீங்கள் வாக்கு மீறியதாக இருக்க வேண்டாம் என்பதற்காகத்தான் லலிதாவின் உதவியை நாடினேன்!''

''டேய்! உன் மனத்தில் எதை வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் ஆடுகிறாய் என்பது எனக்குத் தெரியும். உன்னைச் சில நாட்களாகவே கவனித்து வருகிறேன். நீ என்னை மீறிப் போகப் பார்க்கிறாய்! ஆனால் நீ முட்டாள்தனமாக என்னை மீறிப் போனால் கடைசியில் நாசமாகத்தான் போவாய்! அது உனக்குத் தெரியவில்லை!''

''தாத்தா! புதிர் போடாமல் நேரிடையாகவே சொல்லுங்கள்! நாம் தெளிவாகவே பேசி ஒரு முடிவுக்கு வருவோம்!'' என்றான் பிச்சுமணி, நிதானமாகவே.

''நீ மகாப் பெரிய மனுஷன்! உனக்குச் சமதையாக நான் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டுமா?'' என்று மகா ஏளனமாக முழக்கமிட்ட மேஜர், ''சரி, கேட்டுக் கொள்!'' என்று சரமாரியாக அஸ்திரங்களைத் தொடுக்கத் தயாரானவர் போல் ஒரு முறை கனைத்துக் கொண்டார். **(தொடரும்)**

வட்டமேஜை

"ஜய ஜய சங்கர"

ஸ்ரீ ரா. கணபதி எழுதி 'கல்கி'யில் வெளியான 'ஜய ஜய சங்கர' என்ற தொடர் நான் எழுதியுள்ள 'ஸ்ரீ சங்கராசார்யா' என்ற ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புத்தான் என்பதாக ஒரு வதந்தி பரப்பப்பட்டு வருகிறது என்றறிந்து மிகவும் வருந்துகிறேன். ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்களின் வாழ்க்கை நூலை யார் எழுதினாலும் அதே சம்பவங்களைத் தான் கூற வேண்டியிருக்கும். பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மகான்களின் எல்லா சரித்திர நூல்களுக்குமே இது பொருந்தும். அதனால் ஒரு நூலை இன்னொன்றின் மொழி பெயர்ப்பு என்று சொல்வது நியாயமல்ல.

ஸ்ரீ ஆதிசங்கரரின் வாழ்க்கைச் சம்பவங்களைக் குறித்து வேறுபாடான முடிவுகளில் நியாயமானதும் சத்யமுமாக எனக்குத் தோன்றியவைகளையே நான் என்னுடைய நூலாகிய 'ஸ்ரீ சங்கராசார்யா'வில் எழுதியிருக்கிறேன். இந்த நூலில் கண்டுள்ள முடிவுகளையே ஸ்ரீ ரா. கணபதி பெரும்பாலும் ஏற்று 'ஜயஜய சங்கர'வை எழுதியிருக்கிறார் என்பதைப் பற்றிப் பெருமைப்படுகிறேன். என் புத்தகம் நம் எல்லோருக்கும் நடமாடும் தெய்வமாகத் திகழும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளால் அனுக்ரஹிக்கப்பட்டிருப்பதாலும் ஜகத்திற்கும் உண்மைக்கும் உவந்ததான முடிவுகளையே சொல்வதாலும், ஸ்ரீ ரா. கணபதி தமது நூலுக்கு அதையே ஆதாரமாகக் கொண்டார். அந்த ஆதாரத்தின் மீது தம் சொந்த நூலாகவே 'ஜயஜயசங்கர'வை எழுதினார். என்னுடைய 'ஸ்ரீ சங்கராச்சார்யா' ஸ்ரீ கணபதியின் 'ஜய ஜய சங்கர'வுக்கு ஆதார நூலே தவிர மூல நூல் அல்ல. என் நூலை ஆதாரமாகக் கொண்டு தமிழில் 'ஜய ஜய சங்கர' வந்தது போல மற்ற மொழிகளிலும் ஸ்ரீ ஆசாரியரின் உண்மையான சரித்திரம் பிரசித்தம் பெறவேண்டும் என்பதே என் விருப்பம். அதற்காக எனக்கு யாரும் தனியாக நன்றி தெரிவிக்க வேண்டும் என்றுகூட நான் விரும்பவில்லை. ஏனெனில் என் நூலை நான் என்னுடைய சொத்தாகவே நினைக்கவில்லை. ஆதிசங்கரரின் சரித்திரத்தின் உண்மையான சம்பவங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு நிமித்தமாகவே நான் அதைக் கருதுகிறேன்.

'ஜய ஜய சங்கர' வெறும் மொழிபெயர்ப்பு என்று யாரேனும் சொன்னால் அவர்களுக்கு ஒன்று பாஷா ஞானம் இல்லாதிருக்க வேண்டும், அல்லது நல்ல எண்ணம் இல்லாதிருக்க வேண்டும்.

சென்னை
21–7–64

என். ராமேசன்

பள்ளியை மூடுவானேன் ?

இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூரில் தென்மாப்பட்டுப் பகுதியில் செந்தமிழ்ப் பொது நிலைப் பள்ளி என்ற பெயருடன் ஒரு பள்ளி இருக்கிறது. இன்று அப்பள்ளிக்கு எனச் சொந்தமாகக் கட்டடங்களும் எல்லா வசதிகளும் உள்ளன. முந்நூறு பிள்ளைகளுடனும் எட்டு ஆசிரியர்களுடனும் அது நடைபெற்று வந்தது. திருப்புத்தூர் என்னும் இப்பெரிய ஊரில் எத்தனையோ பள்ளிகள் உண்டு. அப்படியிருந்தும் இப்பள்ளியிலே நிறைய மாணவர்கள் படித்து வந்தனர். இதற்குக் காரணம் அந்தப் பள்ளியில் கல்வித்தரம் அத்தகைய சிறப்பு வாய்ந்ததாக இருந்ததேயாகும்.

கடந்த ஆண்டு அப்பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் படித்துச் சென்ற மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளியில் இடமளிக்க மறுத்து விட்டனர். அங்கீகாரமாகாத பள்ளியிலிருந்து வரும் பிள்ளைகளைச் சேர்க்க முடியாது என்று மறுத்து விட்டனர். ஆகவே பள்ளியில் பிள்ளைகள் குறையலாயினர். உள்ளூர்ப் பிரமுகர்களும் பள்ளிக் கமிட்டியாரும் இப்பள்ளியைப் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்து நடத்தச் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தனர். முப்பது ஆண்டு காலமாக இப்பள்ளியை ஏற்படுத்தி இன்று வரை வளர்த்த ஆசிரியர் திரு சி. முருகையா அவர்களும் மனமுவந்து பள்ளியை விட்டு ஒதுங்கிக் கொள்ள இசைந்து விட்டார்கள். பள்ளியை அதற்குரிய முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுடன் அப்படியே இலவசமாக ஒப்படைத்து விடுவதாகத் திருப்புத்தூர்ப் பஞ்சாயத்து யூனியனுக்குக் கமிட்டியினர் எழுதிக் கொடுத்தார்கள்.


பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தினர் "நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். பதில் இல்லை. நாங்கள் என்ன செய்வது?" என்று வினவுகின்றனர். கல்வித் துறையினிடமிருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை. கல்வி இயக்குநருக்குப் பல கடிதங்கள் எழுதியும் பதிலில்லை. பள்ளி விடுமுறையும் கழிந்தது. இது வரை அங்கீகாரம் ஆகும் என்று நம்பி வந்த ஆசிரியர்கள், குழந்தைகள் கதி என்ன ஆவது? ஓராண்டு காலமாக மூன்று ஆசிரியைகள் சம்பளம் வாங்காமல் பணி புரிந்திருக்கின்றனர்.

திருப்புத்தூர் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தப் பள்ளிக் கட்டடம் ஒன்றுகூட இல்லை. இலவசமாகத் தரும் மேற்படி சொத்துக்களைப் பெற்று ஒரு பள்ளியை நடத்துவதற்கு அரசியல் நிர்வாகத் துறையினரிடம் அக்கறையில்லையே! கல்வித் துறையில் அக்கறை கொண்டுள்ள அரசாங்கம் என்றெல்லாம் போற்றிப் புகழுவதில்தான் என்ன அர்த்தம் உள்ளது என்பதே விளங்கவில்லை.

இன்று அப்பள்ளி மூடப்பட்டு விட்டது. முப்பது ஆண்டு காலமாக நடைபெற்று வந்த அப்பள்ளி அடைபட்டதற்குப் பொறுப்பாளிகள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தினரும் கல்வித் துறையினருமே என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

திருப்புத்தூர்
27–7–64

சிதெ. ராமஸ்வாமி



பனிப் பெண்

வீ. சுவாமிநாதன்

துஷார் என்ற ஹிந்திச் சொல்லுக்குப் பனி என்று பொருள்.

இதை ஒரு நாள் என் ஹிந்தி நண்பர் ஒருவரைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

''துஷார் என்றால் என்ன?''

அவர்தான் சொன்னார்: ''பனி!''

''பனி!''

ஜில்லென்று என் நெஞ்சில் என்னவோ பாய்ந்ததைப்போல் இருந்தது. நிமிர்ந்தேன். ஜன்னலின் வழியே பார்வை விரிந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் எல்லையில்லாத அழகுடன் பரந்து கிடந்தது இயற்கை... இமய மலையின் உயர்ந்த சிகரங்கள் வானத்தைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றன... பனி மூடிய சிகரங்கள்!

இதோ சற்றுத் தொலைவில், அந்தப் பனி உருகியதால், பனியின் அருளால், பனியின் பெண் போல் கங்கை நதி வாய்க்கால் என்றும் வற்றாத ஜீவ நதியாகக் கரை கொள்ளாமல் துள்ளு நடை போட்டுக் கொண்டு சுழித்துச் சுழித்துச் சிரித்துச் சிரித்து ஓடி வருகிறது....

இங்குள்ள இயற்கையின் பவித்திரமான அழகுக்கெல்லாம் மொத்தமான காரணம் பனிதானா?

துஷார் எனக்கு அறிமுகமானதே அவளுடைய துடிப்பான கபாலத்தினால்தான். அதை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகிறது.

அன்று காலையில் நான் ஏதோ மும்முரமான சிந்தனையில் இருந்தேன். ஏதோ ஒரு கதையைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அதிகாலையில் எழுந்து பாதி வரை எழுதியிருப்பேன்: அதற்குள் ஆபீசுக்கு நேரமாகிவிட்டது. அவசரம் அவசரமாக உடையணிந்து கிளம்பி வந்தேன்....ஆனால் மனம் கதையிலேதான் மிதந்து கொண்டிருந்தது.

பாதி தூரம் வந்திருப்பேன்... தெருவைத் தாண்டி வந்திருப்பேன்... யாரோ கைதட்டி அழைத்தார்கள்...

''ஜீ! ஒரு காலில் பூட்ஸை மாட்டிக் கொண்டு இன்னொரு கால் வெறுங் காலாகக் கிளம்பி வருகிறீர்களே, ஜீ!'' என்றாள் துஷார் ஹிந்தியில்.

நான் ஒரு கணம் அதிர்ந்து போனேன். 'என்ன? ஒரு கால் ஜோடுடன் கிளம்பி விட்டேனா? சே, என்ன வெட்கக்கேடு!'

அவசரமாக என் கால்களைக் குனிந்து பார்த்துக் கொண்டேன். அவ்வளவுதான்! ''ஏப்ரல்கா பேவகூஃப்'' என்ற அந்தச் சிறுமியின் குரல் காதைப் பிளந்தது.

அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது: அன்று ஏப்ரல் முதல் தேதி!

என் பிறந்த ஊரின் காவேரித் தீரத்தை விட்டு விட்டு இங்கே கங்கையின் கரைக்கு நான் வருவதற்குக் காரணம் ஆராய்ச்சியில் எனக்குள்ள ஈடுபாடுதான். இந்தச் சிற்றூரில் எங்கள் ஆராய்ச்சி நிலையத்தைத் தவிரக் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக வேறு எதுவும் இல்லை. பக்கத்தில் சிறிய கிராமங்கள். ஒரு கடைத்தெரு. அவ்வளவுதான். காலனியில் மிஞ்சிப் போனால் இருபத்தைந்து வீடுகள்... இருபத்தைந்து வீடுகளும் இருபத்தைந்து விதங்கள். ஆனால் மொத்தத்தில் ஹிந்திக் குடும்பங்கள்தான் அதிகம். வட்டார பாஷையும் அதுவே. அதனால் காலனியில் சகஜமாகக் காதில் விழுவது ஹிந்திதான்.

அம்மாதிரி ஹிந்திக் குடும்பங்களில் ஒன்றுதான் வர்மாவின் குடும்பம். அவர்களின் ஒரே மகள்தான் துஷார்.

அதற்கு மேல் அந்தக் குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரியாது.

முதல் அறிமுகத்துக்குப் பிறகு துஷாரிடம் எனக்குத் தோன்றிய விவரமறியாத பரிவு வெகு விரைவாகத் துளிர்விட்டு வளரத் தொடங்கியது. பவித்திரமான பாசத்தின் தன்மையே அதுதான். பருவ மழை பெய்து ஓய்ந்ததும் பூமி நெடுக மரகதப் பசுமை தழைப்பதைப் போலத்தான். அந்தப் பனியின் தூய வெண்மையும், இமயத்தின் உயர்வும், கங்கையின் கரையடங்காத் துடிப்பும் ஒருமிக்க இந்தச் சிறுமியிடம் அமைந்திருப்பது மெல்ல மெல்ல எனக்குப் புலனாகியது.

அடிக்கடி என் அறைக்கு வருவாள். நதியின் நீர்வீழ்ச்சி 'ஜோ'வென இசைப்பதைப் போல் ஆயிரம் சொற்களை என்னிடம் மளமளவென்று பேசிக் கொண்டே செல்வாள். ஹிந்தியில் அவள் சொல்வது பாதி எனக்குத் தெரியாது.

ஒரு நாள் இந்தத் துன்பம் தாங்காமல், ''நீ ஆங்கிலம் கற்றுக்கொள்ளேன், துஷார்!'' என்றேன்.

''எனக்கு வரவில்லையே என்ன செய்வேன்? எங்கள் கான்வெண்டில் அதற்காகத் தினம்

உச்சரிப்பும் அடி வாங்குகிறேனே!'' என்று சொல்லிவிட்டு வெகுளியாகச் சிரித்தான்.

''எனக்கும் இந்தி வரவில்லையே! என்ன செய்வேன்? நீ என்னை அடித்துச் சொல்லித் தருகிறாயா?'' என்று நானும் கேட்டேன்.

மேலும் உரத்துச் சிரித்தான் அவன்.

ஆனால் சில தினங்களிலேயே அத்துன்பம் தீர்ந்துவிட்டாற் போல் தோன்ற ஆரம்பித்தது. நான் சொல்வது துஷாருக்கும், துஷார் சொல்வது எனக்கும் வெகு எளிதாகப் புரியத் தொடங்கிவிட்டது. அது இந்தியுமல்ல, ஆங்கிலமுமல்ல!....இதயத்தின் பாஷை அது! அன்பின் பாஷை அது! ஓர் அசைவில், ஒரு பார்வையின் ஜாடையில், ஒரு கன்னக் குழியில், ஓர் இதழின் வளைவில் சொல்லாமலே சொல்லும் அந்தச் சொற்களின் பொருளும் ஆழமும் வேறு எந்த மொழிக்கும் கிடையாது.

பனியின் பவித்திரமான குளிர்ச்சியில் நான் மெய்ம்மறந்த நேரமது. இமயமலைத் தொடர்ச்சியின் எதிரே கங்கை நீர் கால்களைக் கழுவ நின்று கொண்டிருந்தேன்.

அந்தச் சமயம் பார்த்துக் கங்கையின் வெள்ளத்தோடு தன்னந் தனியாக ஓர் அகல், சுடர் எரிய ஆடி ஆடி மிதந்து வந்து என் எதிரில் வந்ததும், காற்றின் வேகம் தாங்காமல் 'பொட்'டென்று அணைந்தது. யாரோ எங்கோ ஏற்றிவிட்ட ஆரத்தியாம் அது! அப்படியானால் எங்கிருந்து வருகிறது? எங்கே போகிறது?

மூலமும் முடிவும் தெரியாமல் அலைப்பட்டுப் பாதியில் அணையும் இந்த விளக்கின் நோக்கம்தான் என்ன? நோக்கம், சாதனை இல்லாமலே எப்படி இந்தச் சுடர் இவ்வளவு அழகாய், இவ்வளவு தூய்மையாய் ஒளி விட்டது? ஒருகணம் தூய்மையாய் ஜொலித்து விட்டு உடனே அணைவதுதான் இதன் நோக்கமா? சாதனையா?

இத்தனைக்கும் அர்த்தம் போல் சட்டென்று துஷாரின் பனிமலர் போன்ற முகம் என் முகத்தருகே வந்து நின்றது.

நின்ற இடத்தில் ஒரு நிமிஷம் நிற்காமல் சதா சுற்றிக் கொண்டே இருப்பதுதான் துஷாரின் வேலை. ஆபீஸ் நேரம் தவிர மற்ற நேரங்களில் நான் எங்கே இருந்தாலும் அவன் கண்டுபிடித்து வந்து விடுவான்.

''எங்கே இங்கே ஊர்க் கோடிக்கு வந்தாய் துஷார்?''

''பனி எங்கேயும் வரும், போகும் என்று நீங்கள்தானே சொன்னீர்கள் ஜீ!'' என்பான் அவன் குறும்பாக.



"இப்படி வெய்யிலில் திரிந்தால் உடம்பு எதற்கு ஆகும், துஷார்!"

"நான் துஷார், ஜீ! வெய்யில் என்னை ஒன்றும் செய்யாது. நான் உருகி மேகமாகி இமயமலையின் கிரீடமாகி விடுவேன்!" என்றான். அதே போலத்தான் கொட்டும் மழையிலும்.

சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே வந்து என் அறையின் கதவை உடைப்பதைப் போல் படபடவென்று கைகளாலும் பாதங்களாலும் இடிப்பான்.

"...ஜீ! இப்போது நான் மேகத்தின் மேலே அமர்ந்து ஊர் ஊராகச் சுற்றுகிறேன். பாருங்கள், ஜீ!... என்னால்தான் அந்த மழை பெய்கிறது! என்னால்தான் அந்தப் பயிர் வளருகிறது! என்னால்தான் அந்த வானவில் தோன்றுகிறது! என்னால்தான் கங்கை ஓடுகிறது" என்பான்.

ஆனால் அந்தத் துள்ளலின் பின்னே, துடிப்பும், விஷமமுமான அந்தத் தோற்றத்தின் உள்ளே, கள்ளமற்ற அந்தச் சிரிப்பின் இடையே, ஏதோ ஒரு வேதனை — ஏதோ ஓர் ஏமாற்றம் — ஏதோ ஒரு சொல்ல இயலாத சோகம் வாட்டிக் கொண்டே யிருப்பதைப் போலவே எனக்குத் தோன்றிற்று. அந்தப் பிஞ்சு நெஞ்சுகள் புரையோடிக் கொண்டிருக்கும் அவ்வேதனைதான் என்ன?...

தெளிவாகத் தெரியாமல் ஒரு பனித் திரைதான் மறைத்தது...

ஒரு சிறு கல்லைப் போட்டதும் ஜலத்தின் மேற்பரப்பில் வட்டம் வட்டமாகச் சிற்றலைகள் கிளம்பிக் கரையில் மோதுவதைப் போல் அச்சிறுமியிடம் நான் வளர்த்துக்கொண்ட பாசம் என் சலனமில்லாத நாட்களின் ஓட்டத்தில் இத்தனை அலைகளை எழுப்பும் என்று நான் எதிர்பார்க்கவில்லைதான். அந்தக் குழந்தை என் வாயிலைத் தட்டும்போதெல்லாம் காலனியின் மற்ற வீடுகளின் ஜன்னல் திரைகளின் ஊடே பல விழிகள் ஒளிந்து நோக்குவதைப் போல் ஓர் உணர்வு என்னுள் எழும்பிற்று. உறுதிப்படுத்திக் கொள்ள ஓரிரு முறை நானும் உற்று நோக்கினேன். சந்தேகமேயில்லை. திரைக்குப் பின்னால் நடமாடும் உருவங்கள் எங்கள் இருவரையும் கண்காணிக்கின்றன... ஏன்?... என் தமிழ் நண்பர்கள் சட்டென ஏனோ விலகுவதைப் போல ஒரு பிரமை. எதற்காக?

அன்று ஞாயிற்றுக் கிழமை. கதவைத் தட்டும் அரவம் கேட்டுத் திறந்தேன். துஷார்தான் நின்று கொண்டிருந்தான்.... ஆனால் அவன் நின்ற கோலம்?....

கண்களில் கண்ணீர். கன்னங்களிலும் கழுத்திலும் யாரோ சாட்டையால் வீசினாற் போல அடித் தழும்புகள் — ரத்தம் கசிகிறது. கேசம் கலைந்து முகத்திலும் தோள்களிலும் வழிகிறது. ஆடைகள் தாறுமாறாகக் கிழிந்திருக்கின்றன.

நான் பதறிப் போனேன்: "என்ன துஷார் இது?..."

அவனால் சட்டெனப் பதில் சொல்ல இயலவில்லை. அவன் தோள்கள் குலுங்கின.

"ஏன், துஷார், அழுகிறாய்? சொல்லேன்! என்னிடம் கூடச் சொல்லக் கூடாதா?" சொன்னான்.

எனக்கு நம்பவே கஷ்டமாகத்தான் இருந்தது.... குடிகாரத் தந்தை... தூய்மை தவறிய தாய்... அவர்களின் செல்வம் இவன்! குப்பையின் மேல் படிந்த பனித் துளி!

எனக்கு நினைவு வந்தது. பலரிடம் கடன் வாங்கி அந்தத் தந்தை பல நாட்கள் ஆபீஸுக்கே வராமல் தலைமறைவாக இருப்பதாக யாரோ என்றோ பேச்சுவாக்கில் சொன்னார்கள்.... மதுவில் கரைந்த கடனோ?...

ஓரிரு சமயங்களில் நவநாகரிகமாகக் கண்களைக் கூசவைக்கும் உடையுடன் அந்தத் தாயை அங்கேயும் இங்கேயும் சிரிக்கச் சிரிக்கப் பார்த்திருக்கிறேன்... பகட்டில் கரைந்த பண்பா?

இச்சிறுமிக்கு இவ்வயதிலேயே இத்தனை சோதனையா? புரியாத பருவத்திலேயே இத்தனை அனுபவங்களையும் புரிந்துகொள்ள வேண்டிய வேதனையா? தெய்வமே! நீ இருக்கிறாயா, இல்லையா?...

"துஷார்!..."

மேலே பேச்செழவில்லை. அவனை ஆதரவாக அமர்த்தி உணவு தந்தேன். அவன் மறுக்கவில்லை. நல்ல பசி போலும், மளமளவென்று சாப்பிட்டான். பனி கரைவதைப் போல் கண்கள் மல்கின.

ஓரிரு நாட்கள் என் அறையிலேயே தங்கச் சொன்னேன். அதற்குள் தந்தையின் போதையும், தாயின் ஆத்திரமும் தணியாதா என எண்ணினேன். அவன் சம்மதித்தான்.

ஆனால் அன்று மாலையே ஒரு காட்டு மிருகம் போல் அவனுடைய தந்தை என் வீட்டினுள் நுழைந்து அவனைப் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டே சென்றார். போகிற போக்கில் அவர் என்னைத் தூற்றியது எனக்குப் புரியவில்லை. நாதாங்கியின் முனையில் அவனுடைய பைஜாமாவின் ஓர் ஓரமும், ஒரு துளி ரத்தமும் நின்றன.

நான் செய்யக் கூடியது என்ன?

அந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு தமிழ் நண்பர் என் காதண்டை கிசுகிசுத்தார்: "உனக்கு ஏன், ஐயா, கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துக் கொக்கைப் பிடிக்கத் தோன்றுகிறது?..."

"என்ன?..."

அதே கண்களின் சிமிட்டல்தான் எனக்குக் கிடைத்த பதில்.

இப்போது எனக்குப் புரிந்தது. பனிக்கும் புழுதிக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் இவர்கள். நான் பனியைப் போற்றுவது புழுதியை அள்ளிப் பூசிக் கொள்வதற்காக என்று இவர்கள் நினைக்கிறார்கள். நான் எத்தனை சத்தியம் பேசினாலும் இவர்கள் நம்பப் போவதில்லை.

"எதற்கும் நானும் இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான்!"

அடுத்த நாள் துஷார் என் அறையின் கதவுகளைத் தட்டியபோது நான் திறக்கவில்லை. அந் நயனங்கள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தபோது தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு உடலும் மனமும் கல்லாகப் படுத்திருந்தேன்.... அவன்

சைக்கிளின் பெடல் மட்கார்டில் உராயும் ஒலி மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்தது.

பிறகுதான் கதவுகளைத் திறந்தேன். ஒரு கதவின் பகுதி வட்டமாக நனைந்திருந்தது. அங்கே முகத்தைப் புதைத்துக் கொண்டு வெகுநேரம் அவள் அழுதிருக்க வேண்டும்...

நிலைப்படியின் அருகே ஒரு பொட்டலம் கிடந்தது. பிரித்தேன். பொல பொல வென்று ரோஜா இதழ்கள் கொட்டின. கூடவே ஒரு சீட்டும் விழுந்தது.

எனக்குப் புரியும் இந்தியில் எழுதி வைத்திருந்தாள்:

''தெய்வத்துக்கென்று இச்செடியை வளர்த்தேன்... இன்றுதான் பூத்தது... தெய்வம் தூங்கிக் கொண்டிருக்கிறது....பூவைச் சன்னதியில் வைத்துவிட்டுச் செல்கிறேன்...''

அதற்குப் பிறகு துஷாருக்காக என் வீட்டின் கதவைத் திறக்கும் அவசியமே நேரவில்லை.

அடிக்கடி ஜன்னலின் அருகேயே அமர்ந்து வெறிச்சிட்ட வான் வெளியையே பார்த்துக் கொண்டிருப்பேன். துஷார் இந்தத் தெரு வழியாக ஒரு முறை வந்து செல்ல மாட்டாளா என உள்ளம் ஏங்கும்.

ஓர் இரவு நடு ஜாமத்தில் யாரோ கதவை உடைத்தார்கள்.

'துஷாராக இருக்குமோ?'

எழுந்து போய்த் திறந்தேன்.

துஷாரின் தந்தை — வர்மா!

''ஏன் இங்கு வந்தீர்கள்?''

''துஷார் செத்துக் கொண்டிருக்கிறாள். உங்களைப் பார்க்க விரும்புகிறாள்!''

''என்ன நேர்ந்தது துஷாருக்கு?''

அவர் பதில் சொல்லவில்லை. குனிந்த தலை நிமிர மறுத்தது.

''சொல்லுங்கள்! என்ன நேர்ந்தது என் துஷாருக்கு?...''

திக்கித் திணறித்தான் அவரால் சொல்ல முடிந்தது.... அவளுடைய தாய் அவளைப் பணம் வாங்கி வர யாரோ ஒருவனிடம் அனுப்பினாளாம்... குடி வெறியில் அக் கயவனுக்குத் தாய்க்கும் மகளுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. அரும்பை மலரென முகர்ந்து விட்டான், பாவி!...

''என்ன?...'' நான்—என்னை மறந்து-அலறினேன்.

''வாருங்கள், போகலாம்! இனி துஷார் பிழைக்க மாட்டாள்! அவளுடைய கடைசி ஆசை உங்களைப் பார்க்க வேண்டும் என்பதுதான்!...''

அவர் வலக்கரம் மெல்ல என் கரங்களை எடுத்து அழைத்தது. இணைந்த எங்கள் கரங்களின் மேல் கரகரவென்று அவர் கண்ணீர் விழுந்து பொரிந்தது. இப்போது அங்கே விரோதமோ, சந்தேகமோ இல்லை. இன்னோர் ஆத்மாவின் இறுதி மூச்சில் தோன்றுகிற நட்பு அது!...

துஷாரைக் கட்டிலிலே கிடத்தியிருக்கிறார்கள். பனி வெளுப்பான போர்வையால் முகம் வரை போர்த்தியிருக்கிறார்கள். முகமும் பனி வெளுப்பாகத்தான் மாறியிருக்கிறது. வெகு நேரமாக நினைவு இல்லையாம். அவளுடைய தாய் சிறகு விரித்த பறவையைப்



திருடன்: என்னங்க டிக்கெட் எக்ஸாமினர் ஸார்! இப்ப உங்களாலே கேஸ் எழுத முடியுமா? டிக்கட் இல்லாமெ வேலூருக்குப் போறேன்!

போல் கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்து தவிக்கிறாள். ஒவ்வொரு ஸ்பூனுக் குளுகோஸ் நீரை மகளின் வாயைத் திறந்து ஊற்றுகிறாள். என்னதான் தீயவளானாலும் தாய் அவள். தாய்மைத் தவிப்பு அது!... இடைக்காலத்தில் இந்த அன்னைக்கும் தந்தைக்கும் அறிவு ஏன் ஆயிரம் கோணலாய் ஓடிற்று?...

மெல்ல யாரோ துஷாரின் முகத்தில் நீரைத் தெளித்தார்கள். நான் வந்திருப்பதாகத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். பயனில்லை. கண் இமைகள் பிரியவில்லை.

குரல் கேளிற்று: ''தெய்வத்துக்கென்று பூத்த பூ! மாடு மிதித்து விட்டது!...''

சட்டென எனக்கு உடல் சிலிர்த்தது. குப்பென வியர்த்தது: மயிர்க்கூச்செறிந்தது. அந்தச் சொல்லின் அர்த்தம் எனக்குத் தெரியும்.

''ஜன்னியின் பிதற்றல்!'' என்று நிமிர்ந்தனர் மற்றவர். நான் மறுத்துச் சொல்லவில்லை. அந்தச் சொல்லின் புனிதமான அர்த்தம் இவர்களுக்குத் தெரியத் தேவையில்லை.

துஷாரின் இதழ்கள் பின்னர் பிரியவேயில்லை!

பனி உருகி மேகமாகி விட்டது! இமயமலையின் கிரீடமாகி விட்டது!...

....அந்தப் பனியே உருகிக் கங்கை நதி வாய்க்காலாகக் கரையடங்காமல் வரும்போது அதில் எங்கோ விடப்பட்ட சின்னஞ்சிறு அகல் ஆடி ஆடி மிதந்து வந்து என் கண்ணெதிரே பொட்டென்று அணைகிறது. அவ்வெள்ளச் சுழலோடு தெய்வத்துக்கென்று தூவப்பட்ட ரோஜா இதழ்களும் வருகின்றன....

துஷார் என்ற இந்திச் சொல்லுக்குப் பனி என்று பொருள்.



பக்கத்து வீட்டுப் பேய்

ராஜேந்திர குமார்

ஆபீஸில் அரட்டைக் கச்சேரிக்கு டிபன் நேரத்தைப் போல அருமையான நேரம் கிடையாது.

வலது கையில் கடிதமும், இடது கையில் கூடைக்காரி கொண்டு வந்த டிபன் காரியருமாகச் சாப்பிடும் அறையில் நுழைந்தார் மானேஜர் ஆபத்சகாயம்.

''என்ன ஸார் அது?'', ''என்ன விஷயம்?'' ''ஹெட் ஆபீஸ் கடிதம் மாதிரியிருக்கே ?''—பலப் பல கேள்விகள்.

''மண்ணாங்கட்டி'' என்று அலுத்துக் கொண்டே வாழையிலையைப் பிரித்தார். ''பம்பாய் கிளைக்கு உடனடியாக ஓர் ஆளை அனுப்பணுமாம். அங்கிருந்த ஒருத்தனை எங்கோ மாற்றி விட்டார்களாம்.''

ஒருவரை யொருவர் பார்த்துச் சிலர் விழித்தார்கள். சிலர் உதட்டைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

''அது கிடக்கட்டும்!'' காலியாக இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டிக் கேட்டார் ஆபத்சகாயம். ''மாலி எங்கே காணோம்? சாப்பிட வரவில்லையா ?''

''அவரா?'' டைபிஸ்ட் சசி 'களுக்'கென்று சிரித்தாள். ''எங்காவது திருதிரு வென்று விழித்துக் கொண்டிருப்பார்.''

''ஏண்டா, நாலும் நான்கு நாட்களாகவே கவனிக்கிறேன். இந்த மாலி ஏன் 'பே' என்று போகிறான்? யாருக்காவது விஷயம் தெரியுமா ?''

''வீட்டிலே யாராவது பயமுறுத்தியிருப்பாங்களா?''

''இந்த ஊருக்கு மாறி வந்ததிலிருந்து அத்தை வீட்டிலே யிருக்கான்! அத்தை வீட்டிலே யார் பயமுறுத்துவாங்க?''

''அத்தை மட்டும்தானா ?'' கண் சிமிட்டினான் பாஸ்கரன். ''அவளோட அருமை மகள் கூடத்தானே யிருக்காள்? ஒரு வேளை பயந்து அலறுமளவுக்குப் பயங்கரமாயிருப்பாளோ?''

''போடா மடையா! அந்தப் பெண் கிளி மாதிரியில்லே யிருப்பாள்!'' என்றான் வாசு.

''அப்படியா!'' வாய் நிறைய சாதத்துடன் கூறினார் ஆபத்சகாயம். ''கூப்பிடு அவனே!'' என்றார்.

அவர் சொல்லி வாய் மூடுமுன்.....

எச்சரிக்கையாகத் தலையை மட்டும் நீட்டிக் கதவுகளின் இப்புறமும், அப்புறமும் பார்த்து யாரும் 'பே' என்று கத்தி அலற வைக்க மாட்டார்கள் என்ற நிச்சயத்துடன் உள்ளே நுழைந்தான் மாலி.

''என்னடா வந்தது உனக்குக் கேடு?'' ஆபத்சகாயம் கேட்டார். ''ஏன் பேய் அறைஞ்சாப் போலிருக்கே?''

''வந்து..... வந்து......பயம். வந்து.....பக்கத்து வீட்டு மாடி பால்கனியிலே ஒரு பெண்....ராத்திரி பன்னிரண்டு மணிக்கு...''

''ஹெய்..... ஹாய்.....'' என்ற கேலி கிளம்பியது.

''பலே.... பலேடா பயலே!'' என்று மெச்சிக் கொண்டார் ஆபத்சகாயம். ''அத்தை வீட்டு உப்பையும் தின்று, அவர் பெண்ணைப் பெற்று வைத்திருக்கப் பக்கத்து வீட்டுப் பால்கனிக்குப் பாய்கிறாயா?''

''என்ன ஸார், புரிஞ்சுக்காம கேலி பண்ணறீங்க? அது பெண்ணில்லே ஸார்..... அது ஒரு ஆவி..... பிசாசு...... பேய் !''

''என்னடா உளர்றே?''

''ஆமாம், சார்! அத்தையேதான் சொல்லியிருக்காங்க. அடுத்த வீட்டிலே ஒரு சினிமா நடிகை குடியிருந்தாளாம். அவளுக்கு முன்னுக்கு வரணும், பிரபல நட்சத்திரம் ஆகணும் என்று ரொம்ப ஆசையிருந்ததாம். ஆனால் அவளோட பழைய காதலனோ, புருஷனோ யாரோ ராத்திரி அவள் தூங்கும் போது கழுத்தை நெரிச்சுக் கொன்று போட்டுட்டாங்களாம். குறை ஆசையோட செத்துப் போன அந்த நடிகையோட ஆவி இன்னமும் சுற்றுகிறதாம். ராத்திரி சரியா பன்னிரண்டு மணிக்கு உலாவுது. நானே பார்த்திருக்கேன். சில சமயம் தலைவிரி கோலமாயிருக்கும். சில சமயம் தலை வாரி அழகா உடுத்திக்கிட்டுக் கவர்ச்சி நடிகை மாதிரி வரும்.''

''அப்படியா? அந்த வீடு காலியாகவே இருக்கிறதா?''

''இல்லே, ஸார்! ரெண்டு மூணு நாள் முந்திதான் குடி வந்தாங்க!''

''போடா, மண்டு! அவங்க வீட்டுப் பெண்ணாயிருக்கும்.''

''அதுதானே கிடையாது சார்!'' பரிதாபமாகக் கூறினான். ''அங்கே பெண்களே கிடையாதே ! இரண்டொரு கல்லூரி மாணவர்கள் தானே வாடகைக்கு எடுத்திருக்காங்க!''

விழி விழி என்று ஒரு வினாடி நின்றுவிட்டான் மாலி. பிறகு தவறி விழுந்து விட்ட டிபன்பாக்ஸை அள்ளி எடுத்துக் கொண்டு ஓடி மறைந்தான்.

அன்று மாலை மாலி அவசரம் அவசரமாக வீட்டில் நுழைந்து, மாடியில் ஏறி, அறைக் கதவைத் தாளிட்டு, கழுத்து 'டை'யை உருவி, டெரிலின் சட்டையைக் கழற்றும் போது, ''கதவைக் கொஞ்சம் திறக்கிறீர்களா! நான் வெளியே போய் விடுகிறேன்'' என்ற பெண் குரலைக் கேட்டு வெலவெலத்துப் போனான். ''ஐய....'' என்று மறுபடியும் குரல் வரவும்தான் தெளிந்தான். விடுவிடென்று நடந்து பீரோவுக்குப் பின்னும் எதையோ எட்டிப் பிடித்தான்.

''யாவ்'' என்ற குரலும், அதற்குரிய ஒரு முகமும், இறுதியாகப் பதினெட்டு வயதுப் பெண்ணும் வெளிப்பட்டாள். வந்தவள் அபிதா. மாலியின் அத்தை மகள். பெரிய இரட்டை வால். அவனை அலற அலற வைத்து வேடிக்கை பார்ப்பதில் வல்லவள். ''விடு அத்தான்... காதை விடு.''

''என் அறையில் உனக்கென்ன வேலை ? அத்தை பார்த்தால் 'உர்'ரென்று முறைப்பாள். போ..... போ....''

''படிக்க ஏதாவது கதைப் புஸ்தகம் எடுக்கலாம்னு வந்தேன். என்னமோ ரொம்பத்தான் முறைக்கிறயே'' என்று ஓடி மறைந்தாள் அபிதா. நடு ராத்திரிதான் அந்தப் பேயின் திருவிளையாடல், அதற்குள் தூங்கிவிட வேண்டும் என்று அவன் நிச்சயித்து எல்லாக் காரியங்களையும் முடிக்க நினைத்தான். ஆனால்—

விதி இருக்கிறதே விதி, அது தனது கோரப் பிடியில் அவன் சிக்கித் தவிப்பதைக் கண்டு, ''ஹோ..... ஹோ..... ஹோ....'' என்று சிரித்தது. நள்ளிரவாகப் போகிறது. இன்னும் அவனுக்குத் தூக்கம் வந்தபாடில்லை.

அத்தை சமைத்துப் போட்ட எண்ணெய்க் கத்திரிக்காய்க் கறியிலிருந்து கத்திரிப் பிஞ்சுகள் அவன் வயிற்றிலே ஓடிப் பிடித்து விளையாடி, சுற்றிச் சுற்றி வந்தன.

''பன்னிரண்டு மணி... பேய்'' என்றெல்லாம் அவன் தவித்துக் கொண்டிருக்கும்போது ''நெஞ்சம் மறப்பதில்லை.....ஈ....ஈ...ஈ...'' என்ற மெல்லிய முனகல் பாட்டுக் கேட்டது. தொடர்ந்து மெல்லிய 'டும்' விளக்கின் ஒளி அவன் அறையில் வந்து விழுந்தது.

மெல்லிய மந்தமான அந்த ஒளியில், மங்கலாகத் தெரிந்த அந்த உருவம் நெளிந்தது... அசைந்தது.... ஆடியது. பிறகு பால்கனியில் வந்து அவனைப் பார்த்து 'ஈ' என்று இளித்தது. ''ஹா'' என்றலறி முகத்தை மூடிக் கொண்டு கட்டிலில் விழுந்தான் மாலி.

மறு நாள் ஆபீஸில்...

மானேஜரின் உரத்த குரலுக்கிடையிலே, 'டமா'ரென்ற பேரொலி கேட்டதன் அர்த்தம் புரியாமல் விழித்தார்கள் மற்றவர்கள். ''என்னத்தைத் தூக்கி வீசியிருப்பார்? நேற்றுப் புதிதாக வாங்கிய டேபிள் வெயிட்டாக இருக்குமோ.... ''பாவம் மாலி'' என்று அனுதாபப்பட்டார்கள். அனைவரும். ஆனால்...!

''எழுந்திருடா... அட சீ.... எழுந்திரு; அட காலை விடப்பா!...'' என்று மானேஜர் கத்தவும், உண்மை விளங்கி, அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

''காலை விட்டு விட்டெழுந்திரு! உன்னையே பம்பாய்க்கு மாற்றித் தொலைக்கிறேன். ஆளை விடு.'' அடுத்த நிமிடம்....வெற்றிப் பூரிப்புடன், கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான் மாலி.

இரவு மணி பன்னிரண்டு. கும்மிருட்டு நேரம். பம்பாய் செல்லும் மாலிக்குப் பிரிவுபசாரடின்னர் முடிந்ததும், அவசர அவசரமாகக் கிளம்பிய அவனை மடக்கி அலற அலற இரவு இரண்டாம் ஆட்டம் சினிமாவுக்கு அவன் நண்பர்கள் இழுத்துப் போனார்கள். செலவானால் போகிறது. நடு ராத்திரியில் போய் நின்ற அந்தப் பேய்க்கு யார் பதில் சொல்லுவது?

வீட்டை அடைந்தவுடன் கதவைத் தட்டியபடியே அச்சத்துடன் பக்கத்து வீட்டுப் பால்கனியை நிமிர்ந்து பார்த்தான். மெல்லிய விளக்கொளியில் எக்கிப் பார்த்து 'ஈ' என்று இளித்துக் கொண்டிருந்தது ; ''பக்கத்து வீட்டுப் பருவ மச்சான்'' என்றும் பாடியது.

'கிளிங்' என்ற ஒலியுடன் தாழ்ப்பாள் அகற்றப்பட்டதும்.... கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து ''ஐயோ.... அத்தை பேய்....பேய் அத்தை!'' என்றான். ''என்னது? என்னையா பேய் என்கிறாய்?'' என்று அத்தை பாய, அவனை இழுத்து வெளியே வந்து, ''நிஜப் பேய் அத்தை! அதோ பார்!'' என்று பால்கனியைச் சுட்டிக் காட்டியவன் விழித்தான். கதவு சாத்தியிருந்தது. அங்கு சலனமே இல்லை.

''எண்டா, இப்படிப் பேத்தறே ?''

''ஐயோ! நிஜமா சொல்றேன் அத்தை ! பேய்தான்! என் கண்ணாலே பார்த்தேன்'' என்று அவன் வீறிட்டலறியதில் தெருவே எழுந்து வந்து விட்டது. பக்கத்து வீட்டுக் கல்லூரி மாணவன் கணேசம் வந்தான், ''மிஸ்டர் பரீட்சைக்காகப் படிக்கிறப்ப ஏன் பேய் மாதிரி கத்தறீங்க?'' என்ற அதட்டலோடு.

''பேயேதான். உங்க மாடியிலே யிருக்கு! பார்த்தீங்களா அதுதான் சிரிக்கிறது. தைரியமிருந்தால் மேலே போய்ப் பாருங்க!'' என்று மாலி ஆணுரைத்தான்.

''பேயுமில்லே, பிசாசும் இல்லே. போங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு'' என்று மறைந்தான் கணேச.

மாடியின் அறைக் கதவை எட்டி ஓர் உதை விட்டு, நொண்டிக் கொண்டே கட்டிலுக்கு வந்த மாலி அச்சத்துடன் பால்கனியைப் பார்த்தான்.

''பக்கத்து வீட்டுப் பருவ மச்சான் '' என்ற முனகல் பாட்டு கேட்கவே, பயத்துடன் நிமிர்ந்து பார்த்தான். அது.... அது அவனைப் பார்த்துச் சிரித்தது. ''வணக்கம்'' என்றது.

''வ....வ....வ....''

''அடுத்த ஷூட்டிங் எப்ப? கால்ஷீட் தர வேண்டாமா?''

''எனக்குத் தெரியாதே!'' என்றான் மாலி.

''என்ன மானேஜர் நீங்க'' என்று சலித்துக் கொண்ட அது கேட்டது: ''நான் அழகா யிருக்கேனு ?''


''சீ....சீ.... மூஞ்சைப் பாரு. பிசாசு'' என்றான் அவன் அதட்டலுடன். அதன் முகம் கன்றி விட்டது. ஆயினும் ''இப்படிப் பார்த்தால் அழகு தெரியாது. கொஞ்சம் பொறுங்க'' என்று ஒவ்வோர் ஆடையாகக் கழற்றி எறிந்தது.

''ஸாவ்!'' நடுங்கி விட்டான் மாலி....: ''அத்தை.... கதவைத் திற அத்தை'' என்று கத்திப் பார்த்தான். அத்தை விடும் 'கொர் கொர்'தான் பதிலாக வந்தது. முகத்தை மூடிக் கொண்டவன் தற்செயலாகக் கவனித்தான். அது இரட்டைப் பின்னலையும் கழற்றி எறிய..... ரவி.... அந்த ரவி நின்றிருந்தான். மாலி திருதிரு வென்று விழித்துக் கொண்டிருக்கும் போது அங்கு வந்தான் கணேச. ''கூச்சம் விலகி விட்டதாடா ரவி! நாளைக்கு நாடகத்தில் மானத்தை வாங்க மாட்டாயே.''

''வெளுத்து வாங்குவேன்!'' என்று கூறுரைத்தான் ரவி. ''ஸார்கூட என்னை அசல் பெண் என்றே நினைத்து விட்டாரே!''

''நாளைக்கு எங்கள் கல்லூரி நாடகம்? பெண் வேஷம் போடுகிறான் இவன். கூச்சம் இல்லாமல் இருக்க ராத்திரி வேளையிலே பெண் வேஷத்திலே உலாவச் சொல்லி நான்தான் சொன்னேன். ஸார் ! இவன் நாடகத்திலே பிரமாதமாக நடிக்கணும்னு வாழ்த்துங்க ளேன்'' என்று கெஞ்சினான் கணேச.

''ரெண்டு பேரும் நாசமாய்ப் போங்கள்'' என்று கூறிய மாலி நிம்மதியுடன் படுக்கையில் விழுந்தான்.





... செய்யவும் மிக எளிதானது!

ரெக்ஸ் ஜெல்லியிலுள்ள பழச்சுவையும், வாசனையும் உங்கள் குடும்பத்திலுள்ளோர் அனைவர்ருமே பிரியமானது. அவர்களுக்காக ரெக்ஸ் ஜெல்லி செய்ய நீங்கள் விரும்புவது சகஜம். சத்துச் செறிந்த அது செய்ய அத்தனை எளிதானது! வளரும் குழந்தைகளுக்கு ரெக்ஸ் ஜெல் சிறந்தது. சிசுக்களும், பிணியாறுபவர்களும்கூட ஜீரணித்துக் கொள்ளக்கூடியது!

கீழ்க்காணும் 6 வித சேர்த்தியான சுவைகளில் ஒன்றைக்கொண்டு ரெக்ஸ் ஜெல்லி தயாரிகலாம்: ராஸ்ப்பெர்ரி, ஸ்ட்ராபெர்ரி, பைன்ஆப்பிள், ஆரஞ்சு, லெமன், செர்ரி.

நீங்கள் பின்பற்ற மூன்றுவழி எளிய தயாரிப்பு முறை:

1. ரெக்ஸ் ஜெல்லி படிகமணிகளை வெந்நீரில் கரைக்கவும். 2. பிறகு போதுமான அள குளிர்ந்த ஜலத்தை அத்துடன் சேர்த்து, ஒரு பைண்ட் (20 அவுன்ஸ்) அளவு கலவையாக செய்யவும். 3. அதை அச்சில் ஊற்றி, பனிக்கட்டிமேல் ஜெல்லியை உறைய வையுங்கள்.

அடிக்கடி பரிமாறக்கூடிய அருமையான பொருள்
ரெக்ஸ் ஜெல்லி.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.

ரிஷிகேசத்து ரகுநாதஜி



லட்சமண் ஜுலா

இராமர், இலக்குமணர், சீதை மூவரும் அயோத்தியை விட்டுக் காடு நோக்கிப் புறப்படுகிறார்கள். கங்கையைக் குகனது படகில் ஏறிக் கடந்து சித்திரகூடத்தை நோக்கி நடக்கிறபோது யமுனை குறுக்கிடுகிறது. யமுனையிலோ அப்போது பெரு வெள்ளமே ஓடிக் கொண்டிருக்கிறது. யமுனைக் கரையிலே குகனைப் போல ஒருவன் படகு வைத்துக் காத்துக் கொண்டிருக்கவில்லை. நதியைக் கடப்பது எப்படி என்று இராமன் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது இலக்குவன் விறுவிறு வென்று காரியத்தில் முனைந்து விட்டான். அங்கு மண்டிக் கிடந்த மூங்கில் புதர்களிலிருந்து மூங்கில்கள் ஐந்தாறை வெட்டினான். அவை களைக் கொடியினால் கட்டினான். அது ஒரு தெப்பமாக அமைந்து விட்டது. அந்த அழகான தெப்பத்தில் சீதையையும் ராமனையும் ஏற்றினான். அந்தத் தெப்பத்தைத் தள்ளிக்கொண்டு நீந்தியே அக்கரை கொண்டு சேர்த்து விட்டான் இலக்குவன். இதனை அழகாகக் கூறுகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

வாங்கு வேய்ங்கழை துணித்தனன்
மானையின் கொடியால்
ஓங்கு தெப்பம் ஒன்று அமைத்து
அதன் உப்பரில் உலம்போல்
வீங்கு தோள் அண்ணல் தேவியோடு
இனிது வீற்றிருப்ப
நீங்கினான் அந்த நெடுநதி
இருகையால் நீந்தி

என்பது கம்பனது பாடல். என்ன அதிசய சாதனை என்று இந்தப் பாட்டைப் படித்து வியந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இதை விட ஓர் அரிய சாதனையையே அல்லவா இந்த இலக்குவன் செய்திருக்கிறான். வானில் இருந்த கங்கையைக் கடுந்தவம் புரிந்து பூமிக்குக் கொண்டு வருகிறான் பகீரதன். தவம் புரிந்து உயர்ந்த மாமுனி கொணர்ந்த கங்கை என்றே கங்கை பாராட்டப்படுகிறது. அந்தக் கங்கை பூமியில் இறங்கியவுடனே மிக்க வேகத்தோடே பாய்ந்து பெருகியிருக்கிறது. இந்த இடத்திலே கங்கையைக் கடக்க வெறும் தெப்பமோ தோணியோ பயன்பட்டிருக்க முடியாது. ஒரு பாலமே கட்டத்தான் வேண்டும். எதற்கும் சளைக்காத இலக்குவன் அப்படியே ஒரு பாலம் கட்டியிருக்கிறான். ஆற்றின் பிரவாகம் செல்லும் பகுதியிலே கால் நாட்டவோ கான்கிரீட் போட்டுத் தூண்கள் கட்டவோ முடியாது என்பதையும் கண்டிருக்கிறான். ஆற்றின் இரு கரையிலும் தான் சுவர் எழுப்ப முடியும். அப்படி எழுப்பிய சுவரின் ஆதரவிலே ஒரு பாலம் — ஆம், தொங்கு பாலம்தான் அமைக்க முடியும். அப்படியே ஊஞ்சல் போல் ஆடும் தொங்கு பாலம் ஒன்றையே கட்டி முடித்திருக்கிறான். என்ன ஐயா, இத்தனையும் உடனிருந்து பார்த்தவர் போலச் சொல்கிறீரே. அப்படியானால் அந்தப் பாலம் எங்கேயிருக்கிறது என்றுதானே கேட்கிறீர்கள்? ஆம் இருக்கிறதே. இன்று வரை லக்ஷ்மண்ஜுலா என்ற பெயரோடு. லக்ஷ்மண் ஜுலா என்றால் லக்ஷ்மணனால் கட்டப்பட்ட தொட்டில் போன்ற தொங்குபாலம் என்று தான் பொருள். அந்த லக்ஷ்மண்ஜுலா தான் ஹார்த்துவாருக்கு வடக்கே பதினேழு மைல் தூரத்தில் கங்கை, மலையிலிருந்து பூமிக்கு இறங்கி வரும் இடத்தில் இருக்கிறது. அதற்கு மூன்று மைலுக்குத் தெற்கே, ஆம், ஹரித்துவாருக்குப் பதினான்கு மைலுக்கு வடக்கே யிருக்கிறது ரிஷிகேசம் என்னும் தலம். அந்த ரிஷிகேசத்துக்கும் லக்ஷ்மண் ஜுலாவுக்குமே செல்கிறோம் நாம் இன்று.

ரிஷிகேசம் செல்லுவதற்கு டில்லியிலிருந்து டேராடூன் செல்லும் ரயிலில் ஏற வேண்டும். ராய்வாலா என்ற ஸ்டேஷனில் வண்டி மாற வேண்டும். அதைவிடச் சௌகரியமானது ஹார்த்துவார் ஸ்டேஷனிலேயே இறங்கி அங்கிருந்து ரிஷிகேசம் செல்லும் ஜட்டில் வண்டியொன்றில் வசதியாகச்செல்லலாம். ஹரித்வாரத்திலிருந்து செல்லும் பஸ்களிலும் செல்லலாம். காரிலேயே செல்வதானால் ரிஷிகேசம்வரை மட்டுமல்ல லக்ஷ்மண் ஜுலா வரையே சௌகரியமாகச் செல்லலாம். கூடுமானவரை ரோடு நன்றாகவே இருக்கும். ரிஷிகேசம் செல்லும் வழியில் சாங் என்னும் ஆறு வேறே இருக்கிறது: அதில் தண்ணீர் குறைவாகவே ஓடிக் கொண்டிருக்கும்; அதைக் கடக்க நல்ல பாலம் ஒன்றும் கட்டியிருக்கிறார்கள். அந்தச் சாங் என்னும் ஆற்றின் தென்கரை வழியாகவே டேராடூன் செல்லும் ரயில் பாதையும் ரோட்டுப் பாதையும் செல்கின்றன. நாம் நேரே ரிஷிகேசம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கு நோக்கி இரண்டு மூன்று பர்லாங் நடந்தால் அங்குள்ள பிரபலமான திரிவேணி கட்டத்துக்கு வந்து சேருவோம். இது ஹரித்துவாரத்திலுள்ள பிரம்ம குண்டத்தைப் போல் புனிதமான கட்டம் ஆனதால் அங்கு ஒரு முழுக்குப் போடலாம். அங்கே கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று நதிகளும் கூடுகின்றன என்பர். அதனாலேயே திரிவேணி கட்டம் எனப் பெயர் பெற்றிருக்கிறது. அங்கு கங்கைதான் பிரவகித்து ஓடுகிறது; அதில் வந்து கலக்கும் மற்றைய நதிகளெல்லாம் சின்னஞ் சிறு ஓடைபோலவே

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்



லக்ஷ்மண்ஜுலா அணை

இருக்கின்றன. அங்கே ஒரு பழைய கோயில் இருக்கிறது. அதைப் பரதர் கோயில் என்கின்றனர். ஆம், நீதியின் நிலையமாக விளங்கிய பரதனுக்கு இந்தப் பரந்த கண்டத்தில் பல கோயில்கள் இல்லை. நான் அறிந்த மட்டில் வடக்கே இந்தக் கோயிலும் தெற்கே கேரளத்தில் இருஞாலக்குடி என்னும் இடத்தில் ஒரு கோயிலும்தான் இருக்கின்றன. பரதன் ரிஷிகேசத்திலிருந்து தவம் செய்த இடத்தில் இந்தக் கோயில் கட்டப்பட்டிருக்கிறதாம். கோயிலும் அது இருக்கிற சூழ்நிலையும் ரமணீயமாக இருக்கிறது: சில மணி நேரம் அங்கே தங்கியிருந்து இளைப்பாறலாம். திரிவேணி கட்டத்துக்குத் தெற்கே முக்கால் மைல் தூரத்தில் முனிகி ரெட்டி என்னும் ஓர் இடம் இருக்கிறது. அங்குதான் கங்கைக் கரையில் சிவானந்த மகரிஷியின் ஆசிரமம் இருக்கிறது: அவர் நிர்மாணித்த வன சர்வகலாசாலையும், தெய்வ நெறிக் கழகமும் அங்கிருந்து அறிவொளி பரப்பிக் கொண்டிருக்கின்றன. காலையும் மாலையும் பஜனைகள் நடக்கின்றன. மேல்நாட்டுப் பெண்களும் ஆண்களும் ஆன்மீகத் துறையில் ஈடுபட இங்கு வந்து தவம் கிடக்கின்றனர். அங்குள்ள ஆசிரமத்தில் எப்போதும் சாப்பாடு போட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். வடநாட்டு யாத்திரையில் ரொட்டியையும், சாயாவையும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நமக்கு இங்கு நல்ல அரிசிச் சாதமும், சாம்பாரும், நெய்யும் தாராளமாகக் கிடைக்கின்றன வென்றால் அங்கு தங்கி ஒருவேளையாவது உணவு அருந்தாமல் திரும்ப முடியுமா ?

உலகைச் சமன் செய்ய அகத்தியரைச் சிவபெருமான் தென் திசை நோக்கிப் பொதிகை மலைக்கு அனுப்பினன் என்பது வரலாறு. இன்று தென் திசையிலிருந்து இமயத்தை நோக்கியே ஒரு ஜோதியை அனுப்பி வைத்திருக்கிறோம். சுவாமிஜி அமரர் ஆகி விட்டார்கள்; அவர்கள் ஏற்றிய அமரதீபம் அங்கு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்த முனிகி ரெட்டி என்னும் இடத்தில் படகில் ஏறிக் கங்கையைக் கடந்து அக்கரை செல்லலாம். இந்தப் படகுப் பயணம் எல்லாம் வேண்டாம் என்றால் சரேர் என்று ரோட்டுக்கு வந்து வடக்கு நோக்கி மூன்று மைல் செல்ல வேண்டும். ரிஷிகேசத்துக்கு வடக்கே ஒரு மைல் தூரத்தில் வழியை அடைத்து ஒரு கம்பைப் போட்டிருப்பார்கள். மே, ஜுன், ஜுலை மாதங்களில்தான் அந்தக் கம்பை எடுத்து வைத்திருப்பார்கள். பத்ரிநாத், கேதார்நாத் செல்லும்பாதை இங்கிருந்துதானே தொடங்குகிறது. இங்கிருந்து பஸ் புறப்படும். அதில் செல்லலாம். செல்லுவதற்குரிய காலம் மே, ஜுன் மாதங்கள்தாம்.

லக்ஷ்மண்ஜுலா என்னும் தொங்குபாலத்தைப் பார்த்தால் அதிசயித்து நிற்போம். அத்தனை அழகாக அந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற பாலத்தை அந்த இதிகாச பாலத்து இலக்குவன் கட்டி இருத்தல் இயலாது. இத்தனை இரும்பு, கம்பிகளுக்கெல்லாம் அவன் எங்கு போவான்? அவன் மூங்கிலாலும் மாலைக் கொடியாலும் கட்டி முடித்திருப்பான். அதே இடத்தில் தற்காலத்தில், இஞ்சினீயர்கள் தங்கள் கைத்திறனெல்லாம் காட்டியிருக்க வேண்டும். கொஞ்சமும் அஞ்சாமல் இந்தப் பாலத்தின் மேல் நடந்து கங்கையைக் கடக்கலாம். பாலத்தைக் கடந்து அக்கரை சென்றதும் அங்கு எத்தனையோ சிறு சிறு கட்டடங்கள். அங்கெல்லாம் தனிமையை நாடி ஓடிய தபோதனர்கள் இருக்கிறார்கள். இந்தக் கட்டடங்களுக்கு இடையேதான் ஒரு சிறு கோயில்: அது ரகுநாத்ஜி கோயில் என்பர். எப்போது பரதன் வந்து தவம் செய்து விட்டானே, எப்போ லக்ஷ்மணன் ஒரு பாலம் அமைத்து முடித்து விட்டானே அந்த இடத்தில் ரகுநாதனை ராமன் வந்து கோயில் கொள்வதற்கு வேறு ஏதாவது தூண்டுதல் வேண்டுமா என்ன? ரகுநாதன் சின்னஞ் சிறு வடிவினரே. சர்வ அங்க சுந்தரன். அல்லையாண்டமைந்த மேனி அழகன் அவன் என்றெல்லாம் நாம் அவனைக் காவியம் மூலம் அறிந்திருப்போம்; அவ்வளவு அழகனை இந்த ரகுநாதன் இருக்க மாட்டான். இனி நாம் கங்கையின் அந்தக் கரையிலேயே நடக்கலாம். கிட்டத்தட்ட ஒரு மைல் தெற்கு நோக்கி நடந்தால் அங்குதான் கீதா பவனம், ஸ்வர்க்க ஆசிரமம், பரமார்த்த நிகேதன் முதலிய கட்டடங்களைப் பார்க்கலாம். இவைகளில் கீதாபவனமே பெரியது; மற்றவை யெல்லாம் சின்னக் கட்டடங்களே. எப்போதுமே இரைச்சல் செய்து கொண்டிருக்கும் மனித சமுதாயத்தை விட்டு ஓடித் தனித்திருந்து பிரார்த்தனை செய்ய விரும்பும் அன்பர்கள் இங்கு ஒரு மாத காலம் தங்கியிருந்து அமைதி என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளலாம். அதற்கெல்லாம் நமக்கு அவகாசம் ஏது ? மேலும் அந்தப் பாக்கியம் எல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா ? ஆதலால் வந்த வழியே திரும்பிப் போய்விடலாம்.


இந்த ரிஷிகேசத்திலிருந்து மேற்கே முப்பது மைல் தூரத்திலேதான் டேராடூன் என்ற பெரிய பட்டணம் இருக்கிறது. அங்குதான் உலகப் புகழ்பெற்ற வன ஆராய்ச்சிக் கழகம் இருக்கிறது; ராணுவக் கல்லூரி இருக்கிறது; இந்திய படங்கள் வரையும் சர்க்கார் சர்வே ஆபீசின் தலைமைக் காரியாலயமும் இருக்கிறது. இன்னும் இந்த டேராடூனிலிருந்து இருபது மைல் தூரத்தில் முசோரி என்னும் மலை வாசஸ்தலமும் இருக்கிறது. உடலில் தெம்பும், பையில் பணமும், அவகாசமும் உள்ளவர்கள் இங்கெல்லாம் சென்று வரலாம்.

அதிர்ஷ்டம் அடித்தது!

இப்படியொரு கட்டுக் கதையை நீங்கள் கேட்டிருக்கிறீர்களோ என்னவோ !

ஒரு சமயம் காலஞ் சென்ற பிரதமர் நேரு மேற்குக் கடற்கரைப் பட்டினமான மங்களூருக்கு ரயிலில் விஜயம் செய்தாராம். அப்போது மங்களூர் ஸ்டேஷன் அளித்த பரிதாபமான காட்சியைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினாராம். எவ்வளவு முக்கியமான கடற்கரை நகரம் இது. இந்த ஊரின் ஸ்டேஷன் இவ்வளவு கேவலமாக இருக்கலாமா? இதை முதலில் புதுமைப்படுத்த வேண்டும் என்றாராம். அருகிலிருந்த தென் ரயில்வே மானேஜர் ரயில்வே போர்டுக்கு எழுதி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்' என்று பதில் அளித்தார்.

ரயில்வே இலாக்காக்களில் ஊர்களின் பெயர்களைச் சுருக்கமாக மூன்று எழுத்துக்களில் குறிப்பிடுவது உண்டு. உதாரணமாக மாம்பலம் என்ற ஊரை 'எம் பிஎம்' என்றும், கோடம்பாக்கத்தை 'கேடிஎம்' என்றும் குறிப்பிடுவார்கள். சில ஊர்களின் சுருக்குப் பெயர்கள் ஒன்று போல் மற்றொன்றும் அமைந்துவிட ஏதுவுண்டு. அச்சமயங்களில் ஓர் எழுத்தைக் குறைத்து வேறு ஓர் எழுத்தைச் சேர்த்து வித்தியாசப் படுத்திக் காட்டுவார்கள். உதாரணமாக மங்களகிரி என்ற ஊருக்கும் மங்களூர் என்ற ஊருக்கும் எழுத்துக்கள் எம் ஏ ஜிதான். இதில் ஒன்றை வித்தியாசப்படுத்த ஓர் எழுத்தைக் குறைத்துப் புது எழுத்தைச் சேர்த்தார்கள். அதாவது மங்களூரை அதிலுள்ள ஜியைக் கலைத்து விட்டு 'க்யூ' என்ற புது எழுத்தைச் சேர்த்து 'எம்ஏக்யூ' என்று குறிப்பிடுவார்கள்.



தென் ரயில்வே ஜெனரல் மானேஜர், பிரதமர் வெளியிட்ட கருத்தை ரயில்வே போர்டுக்குத் தெரிவித்ததும், ரயில்வே போர்டார் ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்குவதாகவும் உடனே ஆவன செய்யச் சொல்லியும் உத்தரவு வந்தது. ஜெனரல் மானேஜர் பிரதம எஞ்சினியரைக் கூப்பிட்டார். வேலையில் தீவிரமாக இறங்கத் தொடங்கி விட்டார்கள்.

மங்களகிரி என்பது சின்னஞ் சிறு கிராமம். அந்த ஊர் ஸ்டேஷன் எப்படியிருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால் இப்போது அந்த ஸ்டேஷனுக்குத் துரிதமாக நடக்கும் புனரமைப்பு வேலைகளைக் கண்டு அக்கிராமவாசிகள் அதிசயித்துப் போனார்கள்! தங்கள் ஊருக்கு இத்தனை அதிர்ஷ்டம் கிட்டும் என்று அவர்கள் கனவிலும் கருதவில்லை.

பிரதம எஞ்சினியர், "எடுத்த வேலையை விதிக்கப்பட்டிருந்த கால வரம்புக்குள்ளேயே முடித்து விடலாம்!" என்று பெருமிதத்தோடு ஜெனரல் மானேஜரிடம் குறிப்பிட்டார்.

"அப்படியானால் ஸ்டேஷன் திறப்பு விழாவுக்கு ஒரு நாள் இப்பொழுதே குறித்துக் கொண்டு மற்ற ஏற்பாடுகளைச் செய்யலாமா?" என்று கேட்டார் ஜி. எம்.

"ஜோராக!" என்றார் பிரதம எஞ்சினியர் உற்சாகத்தோடு.

ஒரு நாளை, சர்ச்சை செய்து நிர்மானித்துக் கொண்டார்கள். மேளவாத்தியம், பாண்டு முதலியனவும் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். தோரணங்களும் கட்டப்பட வேண்டும். விசேஷ அழைப்பின் மீது வருகிற மந்திரிக்கும் பிரமுகர்களுக்கும் ஏதாவது ஞாபகார்த்தப் பொருள் விநியோகிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தார்கள். கடைசியில் ஜெனரல் மானேஜர், "என் ஸலூனுக்கு இப்பவே சொல்லி வைத்தால்தான் அதைக் கழுவிச் சுத்தமாக வைப்பார்கள். அதனால் இப்போதே அதற்குச் சொல்லி வைக்கிறேன்" என்று தமது சுருக்கெழுத்தாளரைக் கூப்பிட்டார். திறப்புவிழா தினத்துக்கு முதல் நாள் மாலை புறப்படும் 21 மெயிலில் தமது சலூனைச் சேர்க்க ஏற்பாடு செய்யுமாறு ஒரு கடிதம் 'டிக்டேட்' செய்தார். அந்தக் கடிதத்தை டைப் அடித்துக் கொண்டு வந்த குமாஸ்தா, "ஸார்! ஒரு சந்தேகம்!" என்று மெதுவாக இழுத்தார்.

"என்ன?" என்று கேட்டார் ஜெனரல் மானேஜர்.

"வடக்கே போகிற வண்டியில் 'சலூன்' சேர்க்க வேண்டியதிருக்க, தெற்கே போகிற வண்டியில் சேர்க்கச் சொல்லுகிறீர்களே, ஏன் என்று புரியவில்லையே?"



"'எம்ஏக்யூ' வடக்கே இருக்கிறதா தெற்கே இருக்கிறதா என்று உனக்குத் தெரியவில்லை. ரயில்வேயில் வேலைக்கு வந்து விட்டாயே!" என்று கோபித்துக் கொண்டார்.

"ஸார், 'எம்ஏக்யூ' எந்தப் பக்கம் இருந்தாலென்ன, திறந்து வைக்க வேண்டிய எம்ஏஜி வடக்கே அல்லவா இருக்கிறது?"

"என்ன! எம்ஏஜியா புதுப்பிக்கப்பட்டிருக்கிறது!" என்று அப்படியே அங்கலாய்த்துப் போனார் ஜெனரல் மானேஜர்.

ஆங்கிலத்தில் 'ஜி' எழுத்தும் 'க்யூ' எழுத்தும் கையால் எழுதும்போது ஒன்று போலவே இருக்கும். அதனால் ரயில்வே போர்டு காரியாலயத்திலோ அல்லது தென் ரயில்வே ஜெனரல் மானேஜர் காரியாலயத்திலோ ஆதியில் ஒரு டைப் அடிப்பவர் எம்ஏக்யூவுக்குப் பதிலாக — எம்ஏஜி என்று தவறாக அடித்து வைத்தார்! அதன் விளைவு பட்டிக்காட்டு மங்களகிரி கிராமத்துக்கு ஒரே அடியாக அதிர்ஷ்டம் அடித்தது! — சீதா

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

ஒவ்வொரு குடும்பமும் வாங்கக்கூடிய
உயர் ரக டால்கம் பவுடர்!



பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்

குளுமையானது, நறுமணமிக்கது, புத்துணர்ச்சி யூட்டுவது

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் குடும்பத்தினர் அனைவரும் எல்லாப் பருவ காலங்களிலும் உபயோகிக்க ஏற்ற உன்னத டால்கம் பவுடர். இதமளிக்கும் துல்லிய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் வறுத்தெடுக்கும் கோடையிலும் உங்களை நாள் முழுவதும் சுகமாக இருக்க உதவும். புழுக்கமான காலத்திலும் இனிய நறுமணமுள்ள பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் வியர்வையை உறிஞ்சி உங்களை நாள் பூராவும் சுகந்தமான புத்துணர்ச்சியுடன் வைக்கும்!

உங்கள் குடும்பத்தினருக்காக ஒரு டின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் இன்றே வாங்குங்கள்—இப்பொழுது 3 சைஸ்களில் கிடைக்கிறது!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. வில் இணைக்கப்பட்டது)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



புதுமுறையில் உருவாகிய

ஸன்லைட்

சலவையிலே அதிக ஒளி தருகிறது!

புதுமை பூண்டு வருகிறது புதுமுறையில் உருவாகிய ஸன்லைட்: அதி நூதனமான புது மேலுறை, புத்தெழில் வடிவம். எல்லாவற்றிற்கும் மேலாக, அதிக ஒளிதரும் ஆற்றல் ... சலவைக்கு சலவை அதிக ஒளி..,

சலவையிலே அதிக வெண்மை, அதிக ஒளி.

S. 53-140 TM.

இந்துஸ்தான் லீவர் தயாரி.